
July 2023

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

14 YEARS ANNIVERSARY





VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

# iதமிழ்

நற்றமிழின் நாடித்துடிப்பு

**July 2023**

சுவடி — 13
ஓலை — 5


## வணக்கம் பல

ரஷ்யா தனது ராணுவ பலத்தையும் எதேச்சாதிகாரப் போக்கையும் கொண்டு உலக நாடுகளின் வெறுப்பினைச் சம்பாதித்துக் கொண்டதோடு அல்லாமல் உக்ரைன் மக்களின் அன்றாட இயல்பு நிலையைப் பாதிக்கும் வகையாக ஓராண்டுக்கும் மேலாக நடத்தி வந்த யுத்தம் தற்போது ஒரு பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. தன்னிச்சையாக செயல்படும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு விழுந்த சவுக்கடி போலத்தான் இதனை அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.


ஆழ்கடல் சாகசங்களும் அதையொட்டிய கண்டுபிடிப்புகளும் நிகழ்த்துவதற்கு எத்தனையோ பேர் அரிய பங்களிப்பினை நல்கி உலகிற்கு ஆழ்கடல் அற்புதங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கோடி கோடியாய் கொட்டிக் கொடுத்து தங்களது இன்னுயிரையும் பலி கொடுத்த ஒரு சம்பவம், உலகுக்கு வெளிப்பட்டிருப்பதன் பின்னணியில் ‘அஞ்சுவது அஞ்சாமை பேதமை’ என ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மூதுரையை நினைவுபடுத்துகிறது. ஏற்கெனவே ஒரு நூற்றாண்டுக்கு முன்பு சோகப் பதிவை உண்டாக்கிய டைட்டானிக் போலவே, தற்போது டைட்டனும் சோகத்தை பதிய வைத்திருக்கிறது. விளையாட்டுத்தனமாக வினையைத் தேடிக்கொள்ளக் கூடாது என்பதற்கு இது மற்றுமொரு உதாரணம்!

மணிப்பூரில் சாதிப் பிரிவினையால் தூண்டப்பட்டு நடந்திருக்கும் அசம்பாவிதம், இந்தியா மட்டுமல்லாது பல உலக நாடுகளிலும்கூட வெவ்வேறு வடிவில் பிரிவினைவாத போக்கு பல அழியாத வடுவாகி வருகிறது. மனித குலம் அமைதியாக வாழ்வதற்கு வழிகள் பல இருந்தும் கூட ஒரு சிலரின் ஆணவப் போக்கும் எதேச்சாதிகாரமும் பல சோகச் சம்பவங்களை உருவாக்கி விடுகிறது. மனிதனை மனிதனே சாதிக் கொடுமையால் பிரித்துப் பார்ப்பது பேதமை என்பதை எப்போது மனிதன் உணரப் போகிறான்? சாதிக் கொடுமை என்று ஒழிகிறதோ அன்றுதான் மணிப்பூர் சம்பவம் போன்றவை நிகழாதிருக்கும்! அந்நாள் எந்நாளோ?... உயர்ந்த சிந்தனைகளோடு அன்பும் அமைதியுமாக வாழ்வதற்கான சமாதானக் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டிய நேரமாக இந்தக் காலகட்டம் இருப்பதை உணர்த்தும் விதமாகக் கதை, கவிதை, கட்டுரை என நல்ல பல ஆக்கங்களோடு மலர்கின்றது இம்மாத அய் தமிழ்’ இதழ்! வழமை போலவே வரவேற்று வாசியுங்கள்!.. நேசியுங்கள்!...

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

## உள்ளே...




திருடனுக்கு கொட்டிய தேள்!

பணம் பத்தும் செய்யும்

தமிழே தமிழே

உயிர் மதியா தேர்தல் அரசியல்

சேரமான் கனவு

தல வரலாறு அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

யோகா யோகம்!

மருத்துவ தமிழ்

புன்னகை விதைப்போம்



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**



editor@ithamil.com



*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

நிகழ்வு

# திருடனுக்கு கொட்டிய

### புதின் ‘வாக்னர்’ படைகளிடம் சமாதானம் பேசியது ஏன்?

புதினுக்கு ‘முதுகில் குத்துவது’ பிடிக்காது. அவர் துரோகத்தை அறவே வெறுப்பவர். ஆனாலும் தனது ராணுவத்தை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டவர் மீது நடவடிக்கை எடுக்காமல் சமாதானம் பேசும் சூழலில் இருப்பது ஏன்? இது அவரது பலவீனத்தைக் காட்டுகிறதா?

ப்ரிகோஜின் ரஷ்யாவை விட்டு வெளியேறி பெலாரூஸுக்கு செல்ல வேண்டும்.

ரோஸ்டோ நகரில் என்ன நடந்தது என்பதை நாம் பார்க்க வேண்டும். வாக்னர் என்ற ஒரு ‘தனியார் ராணுவம்’ ஒரு பெரிய ரஷ்ய நகரத்தில் ராணுவ தலைமையகத்தை வெளிப்படையாகவும் எளிதாகவும் கைப்பற்ற முடிந்துள்ளது. அதைக் கைப்பற்றிய பிறகு மாஸ்கோவை நோக்கி முன்னேறத் தொடங்கியது. அதுமட்டுமின்றி, கிளர்ச்சி முடிந்த பிறகு, அதன் அடிப்படையாக




இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து விளாதிமிர் புதின் தனது அதிகாரத்திற்கு எதிராக மிகப்பெரிய சவாலை எதிர்கொண்டது இதுவே முதல்முறை. அந்த வியக்கத்தக்க 24 மணிநேர கிளர்ச்சி முடிவு வந்துவிட்டது. அதிபர் மாளிகைக்கும் வாக்னர் கூலிப்படைக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் உருவாகியுள்ளது. ஆகையால் வாக்னர் படையினர் தளத்திற்குத் திரும்புகின்றனர். ஒப்பந்தத்தின்படி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால், அவர்களது தலைவர் எவ்கெனி

இருந்த ப்ரிகோஜினை எதுவும் செய்ய முடியாது. அவர் ஒரு சுதந்திர மனிதர். ரஷ்யாவின் ராணுவத் தலைமையைக் கவிழ்க்க முயன்ற போதிலும், அவர் மீதான ஆயுதக் கலகம் குற்றச்சாட்டு கைவிடப்பட்டுள்ளது.

புதின் அடுத்து என்ன செய்யப் போகிறார்?

ரஷ்யாவில் புதின் 20 ஆண்டுகளுக்கு முன்பு அதிகாரத்திற்கு வந்த பிறகு முதன் முறையாக மிகப்பெரிய சவாலை எதிர்கொண்டிருக்கிறார்.

# தேள்!

அரசுக்கு உடனடியாக ஆபத்து இல்லை, நிலைமை கட்டுக்குள் வந்துவிட்டது என்ற போதிலும் இந்த பிரச்னைக்குப் பிறகு புதின் முன்னிலும் வலிமையானவராக உருவெடுக்கவில்லை. மாறாக, அவர் கட்டமைத்து வைத்திருந்த இமேஜ் சரிந்தே இருக்கிறது.

துரோகத்தை சகித்துக் கொள்ள முடியாத புதினின் வெறுப்புணர்வு சனிக்கிழமை காலையில் அவரது தொலைக்காட்சி உரையில் வெளிப்பட்டது. வாக்னர் தலைவர் ப்ரிகோஜின் முதுகில் குத்திவிட்டதாகவும், தேசத் துரோகம் என்றும் புதின் கடுமையாக சாடினார். அதன் பிறகு புதின் இதுவரை பகிரங்கமாக தோன்றவில்லை. அதிபர் உரையாற்றுவதற்கான எந்த திட்டமும் இப்போதைக்கு இல்லை. அரசு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பான அவரது உரை, வாக்னர் கிளர்ச்சிக்கு முன்பே பதிவு செய்யப்பட்டது போல் தெரிகிறது. அதில் யுக்ரேன் போரில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.




வாக்னர் கிளர்ச்சி முடிவுக்கு வந்துவிட்ட போதிலும் மாஸ்கோவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அப்படியே தொடர்கின்றன. புதின் மாஸ்கோவில் இருக்கிறாரா அல்லது தலைநகரை விட்டு வெளியேறிவிட்டாரா என்பது தெரியவில்லை. யுக்ரேனில் ராணுவ ரீதியாகவோ அல்லது ரஷ்யாவுக்குள் தனக்கு எதிரானவர்கள் மீதோ புதின் கடுமையாக வெளிப்படுவார் என்று சிலர் கணிக்கிறார்கள்.

போலந்தைச் சேர்ந்த, ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ராடெக் சிகோர்ஸ்கி, “ரஷ்யாவில் தனக்கு எதிராக போர்க்கொடி தூக்குபவர்களை புதின் களையெடுப்பார். அதாவது புதின் இன்னும் கடுமையான சர்வாதிகாரியாக மாறுவார்” என்று கூறினார்.



அதன் விளைவாக, ப்ரிகோஜின் பெலாரூஸ் செல்கிறார். அவரது படை ரஷ்ய ராணுவத்தின் கீழ் செயல்படும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. வாக்னர் மீதான அவரது கட்டுப்பாட்டை சாமர்த்தியமாக ரஷ்யா கைப்பற்றியுள்ளது. நாள் முழுவதும் நீடித்த பேச்சுவார்த்தையின் விளைவாக, யெவ்ஜெனி ப்ரிகோஜின் நேற்று இரவு நேரத்தில் வாக்னர் படையின் கிளர்ச்சியை நிறுத்திக்கொள்ள ஒப்புக்கொண்டார். புதினின் நெருங்கிய கூட்டாளியான பெலாரூஸின் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ, ப்ரிகோஜினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ப்ரிகோஜின் பெலாரூஸ் செல்ல அனுமதிக்கப்பட்டார். மேலும், அவர் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் கைவிடுவதாக ரஷ்யா ஒப்புக்கொண்டது.

வாக்னர் குழுமத்தின் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஜின் ரஷ்ய ராணுவத்தில் உள்ள குறைபாடுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால், அவரது சுய வாய்ப்புகளை மிகைப்படுத்திக் கொண்டுவிட்டதாக போர் ஆய்வுக்கான கூறுகிறது.

ப்ரிகோஜினின் தோல்வியுற்ற கிளர்ச்சி அவரது கூலிப்படையின் சுதந்திரத்தை தக்க வைத்துக்கொள்ளும் முயற்சி என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். குறிப்பாக ரஷ்ய ராணுவ தலைவர்கள் வாக்னரை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு ஜூலை 1ஆம் தேதி காலக்கெடு விதித்தனர். பெலாரூஸ் அதிபர் அலெக்சாண்டர் லிகாஷென்கோவால் ஏற்படுத்தப்பட்ட கிளர்ச்சி நிறுத்தம், ப்ரிகோஜின் மீதான கிரிமினல் குற்றச்சாட்டுகளைக் கைவிடுவதற்கு ஈடாக சாமர்த்தியமாக அவருக்கு வாக்னர் படை மீது இப்போது இருக்கும் கட்டுப்பாட்டை நீக்குகிறது.

இருப்பினும் வாக்னர் படைகள் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் ராணுவ ஒருங்கிணைப்புக்கு சுய விருப்பத்துடன் ஒத்துழைக்குமா அல்லது எதிர்காலத்தில் வாக்னர் குழுவின் பணியாளர்களுடன் ரஷ்ய ராணுவம் இணக்கத்துடன் பணியாற்றுமா என்பது தெளிவாகவில்லை என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். கிளர்ச்சியால் ரஷ்யா முழுவதும் பதற்றம் நிலவிய சூழலில், பெலாரூஸ் அதிபர் தலையிட்டு, புதின் சம்மதத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, வாக்னர் குழுவின் தலைவருக்கு எதிரான வழக்கை கைவிட கிரெம்ளின் ஒப்புக்கொண்டது. அதோடு, வாக்னர் படையின் வீரர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ப்ரிகோஜின் மற்றும் அவரது படையினருக்கு வேறு என்னவெல்லாம் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது என்று இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. வாக்னர் படை கிளர்ச்சியைக் கைவிட ஏன் முடிவெடுத்தது என்று அலசுகிறார், பிபிசியின் கிழக்கு ஐரோப்பாவின் செய்தியாளர் சாரா ரெய்ன்ஸ்ஃபோர்ட். “பணமா? அது ஒருவேளை ப்ரிகோஜினிடம் நிறையவே இருக்கலாம். நேற்றைய சோதனையின்போது அவரது வளாகத்தி நிறையவே கண்டுபிடிக்கப்பட்டது.

அப்படியிருக்கும்போது, இனி வரவுள்ள காலகட்டத்தில் அவருடைய பங்கு குறித்த என்ன உத்தரவாதம் அவருக்கு அளிக்கப்பட்டது? வாக்னர் படையின் தலைவர், அதிபர் புதினுக்கு ஒரு முக்கியமான நபராக, நீண்ட காலமாக அவரது நிழலில் செயல்படுகிறார். சிரியாவில் சண்டையிடுவது முதல் யுக்ரேனில் 2014ஆம் ஆண்டு கிரைமியாவை இணைத்தபோது சண்டையிட்டது வரை அதிபர் மாளிகைக்காக அதன் மோசமான




வேலைகளைச் செய்து வருகிறார் ப்ரிகோஜின். கூடவே "ட்ரோல் ஃபார்ம்ஸ்" என்றழைக்கப்படும் தவறான தகவலை பரப்புவதில் அவர் ஈடுபட்டுள்ளார்.

கிளர்ச்சியைக் கைவிட்டு பெலாரூஸுக்கு செல்ல, அவருடன் என்ன ஒப்பந்தம் செய்யப்பட்டது. அங்கிருந்து அவர் என்ன செய்யப் போகிறார் எனத் தெரிந்துகொள்வது சுவாரஸ்யமானதாக இருக்கும். அவர் அமைதியாக ஓய்வு பெறுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதேவேளையில் அவர் அடுத்து என்ன செய்வார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ப்ரிகோஜின் இருளுக்குள் அமைதியாக மறைந்துவிடும் மனிதர் இல்லை.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ரஷ்யாவில் நடக்கும் நிகழ்வுகள் குறித்து இதுவரை மௌனம் காத்து வந்தார். அதிபர் ஜோ பைடன், துணை அதிபர் கமலா ஹாரிஸ் ஆகியோருக்கு மூத்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் நாள் முழுவதும் விளக்கமளிக்கப்படுவதாக வெள்ளை மாளிகை கூறியது. ஜோ பைடன் உயர்மட்ட ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்தியதாகவும், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனியின் தலைவர்களுடனும் பேசியதாகவும் கூறப்பட்டது. உயர்மட்ட பாதுகாப்பு ஆலோசகர்களுடனான காணொளி கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அவர் திட்டமிட்டிருந்த பயணத்தைத் தாமதப்படுத்தியதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தன.

ரஷ்யாவின் நிலைமையைக் கண்காணிப்பதற்காக கூடுதல் படைத் தலைவர் ஜெனரல் மார்க் ஏ மில்லி தனது அலுவல்பூர்வ பயணத்தை ரத்து செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. யுக்ரேன் — ரஷ்யா இடையிலான போரில், ரஷ்யாவுக்கு ஆதரவாக நீண்ட காலமாக களத்தில் நின்று 'வாக்னர் படை' துணைபுரிகிறது. குறிப்பாக யுக்ரேனின் 'பாக்முத்' என்ற நகரை கைபற்றுவதற்கு நடைபெற்ற போரில், வாக்னர் படையினர் பெரும் பங்கு வகித்தனர்.

2014ஆம் ஆண்டு கிழக்கு யுக்ரேனில், இந்த குழு ரஷ்யாவுக்கு ஆதரவாக செயல்பட்டு வந்தபோதுதான், வாக்னர் குழு குறித்த தகவல்கள் முதன்முதலாக வெளியுலகிற்கு தெரியவந்தன. அதற்கு முன்பு வரை, இந்த குழு ஒரு ரகசிய அமைப்பாக இயங்கி வந்தது. பெரும்பாலும் ஆப்ரிக்கா மற்றும் மத்திய கிழக்கு பகுதிகளில்தான் இந்த குழுவின் இயக்கம் இருந்துள்ளது. அப்போது இந்த குழுவில் வெறும் 5,000 வீரர்கள் மட்டுமே இருந்ததாக கருதப்பட்டது.

ஆனால் அதன்பின் இந்த குழுவினரின் எண்ணிக்கை கணிசமாக உயர தொடங்கியது. அதேபோல் வாக்னர் ராணுவ துருப்புகளில் உள்ள 80% வீரர்கள், சிறையிலிருந்து வந்தவர்கள் என அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் இந்தாண்டு துவக்கத்தில் கூறியிருந்தது. சோவியத் யூனியனில் திருட்டு மற்றும் மோசடி வழக்கில் 9 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றவர் யெவ்கெனி ப்ரிகோஷின். சோவியத் யூனியன் சிதறிய பிறகு, ரஷியாவின் தனியார் துணை ராணுவப் படையான வாக்னர் குழுவின் தலைவரானார். ரஷிய அதிபர் புதினுடன் ப்ரிகோஷினுக்கு நீண்டகாலமாக உறவு உள்ளது.

இந்நிலையில், உக்ரைன் போரில் ரஷிய ராணுவத்துடன் இணைந்து வாக்னர் குழு முக்கியப் பங்காற்றியது. குறிப்பாக அந்நாட்டின் பாக்முத் நகரைக் கைப்பற்றியது. அது ரத்த ஆறு ஓடிய மிக நீண்ட போர் நடைபெற்ற பகுதியாகும். எனினும் ரஷிய ராணுவத்தின் திறமையின்மை, ரஷிய பாதுகாப்புத் துறை சார்பில் வாக்னர் குழுவுக்கு போதிய வெடிபொருள்கள் வழங்கப்படாததை ப்ரிகோஷின் விமர்சித்து வந்தார். இந்தச் சூழலில், உக்ரைனில் உள்ள வாக்னர் குழு முகாம்கள் மீது ரஷிய படைகள் ராக்கெட், பீரங்கி தாக்குதல் நடத்தியதாக ப்ரிகோஷின் குற்றஞ்சாட்டினார்.

உக்ரைன் போரில் ரஷிய பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் ஷோய்குவின் செயல்பாட்டை ப்ரிகோஷின் தீவிரமாக விமர்சித்து வந்தார்.

அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்று ப்ரிகோஷின் வலியுறுத்தி வந்தார். இந்நிலையில், ஷோய்குவை ரஷிய முப்படைத் தலைமைத் தளபதி சந்தித்ததாகவும், அந்தச் சந்திப்பில் தன்னைக் கொல்ல இருவரும் முடிவு செய்து வாக்னர் குழு முகாம்கள் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டதாகவும் ப்ரிகோஷின் குற்றஞ் சாட்டினார்.




இந்தத் தாக்குதலை தொடர்ந்து ரஷிய ராணுவத்துக்கு எதிராக ப்ரிகோஷின் ஆயுதக் கிளர்ச்சியை அறிவித்தார். எனினும் ரஷிய பாதுகாப்பு அமைச்சகத்துடன் தனியார் ராணுவப் படைகள் ஜூலை 1—க்குள் ஒப்பந்தம் மேற்கொள்ள அந்த அமைச்சகம் காலக்கெடு விதித்ததாகவும், அதற்கு அதிபர் புதினின் ஆதரவு இருந்ததாகவும் கூறப்படுகிறது. வாக்னர் படையினரை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு அந்த ஒப்பந்தத்துக்கான காலக்கெடு ஆபத்தாக உள்ளது என்று ப்ரிகோஷின் கருதியதாக தெரிகிறது. இதனால் அவர் ஒப்பந்தத்தில் இணைய மறுத்ததாகவும், இதுவும் அவரின் ஆயுதக் கிளர்ச்சிக்கு காரணமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

பெலாரஸில் அரசியல் தஞ்சம்:

இந்நிலையில், ப்ரிகோஷினுடன் ரஷிய அரசு சமரசம் மேற்கொண்டுள்ளது. அவருக்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சி குற்றச்சாட்டு கைவிடப்படும் எனவும், பெலாரஸில் ப்ரிகோஷின் அரசியல் தஞ் சமடைவார் என்றும் ரஷிய அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

ரஷியாவில் உள்நாட்டு மோதல் ஏற்படுவது, ரத்தம் சிந்தப்படுவது ஆகியவற்றைத் தடுப்பதுதான் அதிபர் புதினின் உச்சபட்ச இலக்கு எனவும், இதனால் ப்ரிகோஷின் மற்றும் கிளர்ச்சியில் ஈடுபட்ட அவரின் படை வீரர்கள் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் டிமித்ரி பெஸ்கோவ் கூறியுள்ளார். மேலும், கிளர்ச்சியில் ஈடுபடாத வாக்னர் படை வீரர்களுக்கு ரஷிய பாதுகாப்பு அமைச்சகம் ராணுவ பணி ஒப்பந்தங்களை வழங்கும் என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பின்வாங்க முடிவு:


ரஷிய பகுதிகளில் வாக்னர் படை முன்னேறிச் செல்வதை தடுக்கவும், ப்ரிகோஷின் ரஷியாவை விட்டு வெளியேறவும் அவரிடம் பேசப்பட்டு வருவதாக ரஷிய அரசு தெரிவித்தது முதல், ப்ரிகோஷின் மௌனமாக இருந்தார். அவரிடம் ரஷிய அரசு சமரசம் பேசியதில் உடன்பாடு ஏற்பட்ட பின்னர், ரஷியர்கள் ரத்தம் சிந்துவதை தவிர்க்க கிளர்ச்சியில் இருந்து பின்வாங்க முடிவு செய்துள்ளதாக ப்ரிகோஷின் தெரிவித்தார். பெலாரஸில் ப்ரிகோஷின் தஞ் சமடைவார் என்று தெரிவிக்கப்பட்டாலும், அவர் பெலாரஸ் வருவதாக ஞாயிற்றுக்கிழமை காலை வரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை. அத்துடன் ப்ரிகோஷினுடன் வாக்னர் படை வீரர்கள் யாரேனும் பெலாரஸில் தஞ் சமடைவார்களா, பெலாரஸில் ப்ரிகோஷினுக்கு என்ன மாதிரியான பணி வழங்கப்படும் என்பன போன்ற பல கேள்விகளுக்கு விடையில்லை.

புதின் வலிமையான தலைவரா?:

இந்த விவகாரம் குறித்து பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான அமெரிக்க ஆய்வு நிறுவனம் ஒன்று கூறுகையில், ‘ரஷிய அதிபர் மாளிகை மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தில் உள்ள கடுமையான பலவீனத்தை ப்ரிகோஷினின் கிளர்ச்சி வெளிப்படுத்தியுள்ளது’ என்று தெரிவித்துள்ளது. இந்த சமரசத்தை தொடர்ந்து அதிபர் புதின் முன்பு போல வலிமையான தலைவராக இனியும் கருதப்படுவாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச அரசியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய அதிபர் புதினின் நெருங்கிய வட்டத்தில் உள்ளவர்கள் யார்? யுக்ரேன் போரை யார் வழிநடத்துகிறார்கள்? தலைமைத் தளபதியாக,

படையெடுப்புக்கான இறுதிப் பொறுப்பு புதினிடமே உள்ளது. ஆனால், அவர் தனக்கென ஒரு சிறிய வட்டத்தைச் சார்ந்திருக்கிறார். அவர்களில் பலர் ரஷ்யாவின் பாதுகாப்புத் துறைக்கான சேவைகளில் தங்களது தொழில்முறை வாழ்வைத் தொடங்கியவர்கள். வாக்னர் குழுமத்தின் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஜின், ஒரு காலத்தில் புதினின் ஆகியோர் புதினின் மூலோபாய முடிவுகளில் முக்கிய பங்கு வகித்துள்ளனர். முதலில் ரஷ்யா யுக்ரேனை ராணுவமயமாக்குகிறது என்றும் பிறகு 'மேற்கு' நாடுகள்தான் போரைத் தொடக்கியது, ரஷ்யா இல்லை என்றும் புதின் கூறியதையே பின்பற்றினார். சில நேரங்களில், அதிபர் புதின் எந்த அளவுக்கு இவர் சொல்வதைக் கேட்பார் என்று




நெருங்கிய, சக்திவாய்ந்த கூட்டாளியாக இருந்தார். ஆனால், அவர் செய்த கிளர்ச்சியின் காரணமாகத் தற்போது அந்த நெருங்கிய வட்டத்தில் அவர் இல்லை. இப்போதைய நிலவரத்தில், போரின் இந்தத் தீர்க்கமான தருணத்தில் புதின் யார் சொல்வதைக் கேட்பார்?

பல மாதங்களாக, பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கேய் ஷோய்கு, ராணுவத் தலைவர் வேலரி கெராசிமோவ் ஆகியோர் ப்ரிகோஜினுடன் மோதிக்கொண்டே இருந்தனர். யுக்ரேனில் நடந்த போரில் பல்லாயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் இறந்ததற்கு இவர்கள் இருவரும்தான் பொறுப்பு என்று ப்ரிகோஜின் குற்றம் சாட்டினார். அதிபருக்கு நெருக்கமாக யாராவது இருந்தால், அது அவரது பாதுகாப்புத்துறை அமைச்சர்தான். நீண்டகால நம்பிக்கைக்கு உரித்தானவர், கடந்த காலத்தில் அவருடன் சைபீரியாவிற்கு வேட்டையாடுதல் மீன்பிடித்தல் போன்ற பயணங்களுக்கு சென்றவர். ஒரு காலத்தில் புதினின் அரசியல் வாரிசு ஆவதற்கான சாத்தியக்கூறு இவருக்கு உண்டு என்றும் கருதப்பட்டது.

வேலரி கெராசிமோவ்(இடது) மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்கேய் ஷோய்கு தெரிந்தால் ஆச்சர்யப்படுவீர்கள். ரஷ்யாவின் ராணுவ பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அது எதிர்பாராத அளவுக்கு யுக்ரேனிடம் இருந்து வந்த எதிர்ப்பு, ராணுவத்தின் குறைந்த மன உறுதி ஆகியவற்றுடன் போராடிக் கொண்டிருந்தது. "ஷோய்குதான் கீயவுக்கு அணிவகுத்துச் செல்ல வேண்டியிருந்தது; பாதுகாப்புத் துறை அமைச்சராக அவர் வெற்றியைக் கொடுத்தாக வேண்டியிருந்தது," என்று ஆயுத மோதலில் நிபுணரான வேரா மிரோனோவா கூறினார்.

இன்னும் அவர் போரில் முக்கியப் பங்கு வகிக்கிறார். இருப்பினும், யுக்ரேனில் களத்திலுள்ள உண்மை குறித்து அவர் அதிபர் புதினிடம் பொய்யான தகவலைக் கூறியதாக ப்ரிகோஜின் குற்றம் சாட்டினார். வலேரி 2014இல் கிரைமியாவை ராணுவம் கைப்பற்றியதன் பெருமையைப் பெற்றார். ரஷ்ய ராணுவத்தின் புலனாய்வு அமைப்பான க்ருவின் பொறுப்பாளராகவும் அவர் இருந்தார். பிரிட்டனில் உள்ள சால்ஸ்பரியில் 2018ஆம் ஆண்டில் நடந்த வேதிமத் தாக்குதல், 2020ஆம் ஆண்டு சைபீரியாவில் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவ்லனி மீதான வேதிமத் தாக்குதல் ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகள் அவர்மீது உள்ளன. மேலும், ரஷ்ய பாதுகாப்பு வல்லுநரும்

எழுத்தாளருமான ஆண்ட்ரி சோல்டடோவ், அதிபர் காதுகொடுத்துக் கேட்கும் மிகுந்த செல்வாக்கு மிக்க குரலாக பாதுகாப்பு அமைச்சரே இருப்பதாகப் தெரிவித்துள்ளார்.

“ஷோய்கு, ராணுவத்தின் பொறுப்பாளர் மட்டுமல்ல. அவர் ஓரளவுக்கு சித்தாந்ததிற்கான பொறுப்பாளராகவும் இருக்கிறார். ரஷ்யாவில் சித்தாந்தம் என்பது பெரும்பாலும் வரலாற்றைப் பற்றியது. ஷோய்கு அதை வடிவமைப்பவராக இருக்கிறார்.” முப்படைத் தளபதி என்ற முறையில், யுக்ரேனை ஆக்கிரமிக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டியது அவருடைய வேலை. ஆகவே, புதினின் நெருங்கிய வட்டத்தில் அவர் மிகவும் தேவையானவராக காணப்படுகிறார். ஆனால், சோவியத் காலகட்டத்திலிருந்து மிக நீண்ட காலம் பதவியில் இருந்த முப்படைத் தளபதியாக அவர் இருப்பதற்கு இன்னொரு காரணம் உள்ளது. விளாதிமிர் புதினுக்கு அவர்மீது நம்பிக்கை உள்ளதுதான் அந்தக் காரணம்.

1999 செச்சென் போரில் ராணுவத்தை வழிநடத்தியதில் இருந்தது, ரஷ்ய ராணுவ பிரசாரங்களில் முக்கியப் பங்கு வகித்தது, பெலாரூஸில் போருக்கு முந்தைய ராணுவப் பயிற்சிகளை மேற்பார்வையிட்டு யுக்ரேன் படையெடுப்புக்கான ராணுவ திட்டமிடலில் முன்னணியில் இருந்தது ஆகியவற்றில் வலேரி பெரும் பங்கு வகித்துள்ளார்.

ரஷ்ய நிபுணர் மார்க் கெலியோட்டி, “சிரிக்காத, கரடுமுரடான, சண்டையை விரும்பக்கூடிய” நபர் என்று ஜெனரல் கெராசிமோவ் குறித்து விவரிக்கிறார். ஜெனரல் கெராசிமோவ் கிரைமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதற்கான ராணுவ பிரசாரத்தில் முக்கியப் பங்கு வகித்தார். யுக்ரேன் மீதான படையெடுப்பின் மோசமான நிலை, துருப்புகள் மத்தியில் மன உறுதி குறைந்து வருவது ஆகியவை குறித்த செய்திகள் காரணமாக அவர் ஓரங்கட்டப்பட்டதாக ஆரம்பத்தில் பேசப்பட்டது.

அவர் மே 2022இல் வருடாந்திர மாஸ்கோ ராணுவ அணிவகுப்பில் தோன்றவில்லை. இருந்தும் கடந்த ஜனவரியில் அவர் யுக்ரேனில் ரஷ்ய படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டார். அவருக்கு முன்பு, இப்போது அவரது துணைத் தலைவராக இருக்கும் ஜெனரல் செர்கேய் சுரோவிகின் தளபதியாக இருந்தார். “ஒவ்வொரு சாலையையும் ஒவ்வொரு படையணியையும் புதினால் கட்டுப்படுத்த முடியாது. அதைச் செய்வதுதான் இவருடைய வேலை,” என்று ஆண்ட்ரி சோல்டடோவ் கூறினார்.

லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் ரஷ்ய அரசியல் தொடர்பான இணை பேராசிரியராக இருக்கும் பென் நோபல், “பட்ருஷேவ் அமைதியான தீர்வுகளை ஆலோசித்து முடிவெடுப்பதைவிட, வலிமையைப் பயன்படுத்தி ஆதிக்கம் செலுத்தக்கூடியவர். பல ஆண்டுகளாக மேற்கு நாடுகள் ரஷ்யாவை கைப்பற்றத் துடிக்கின்றன என்று நினைக்கக்கூடியவர்,” என்று கூறுகிறார். செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரம் லெனின்கிராட் என்று அழைக்கப்பட்ட காலகட்டத்தில் இருந்தே, 1970களில் புதினுடன் பணியாற்றிய மூன்று விசுவாசிகளில் இவரும் ஒருவர்.

பாதுகாப்பு சேவை பிரிவின் தலைவர் அலெக்சாண்டர் போர்ட்னிகோவ், வெளிநாட்டு உளவுத்துறையின் தலைவர் செர்கேய் நரிஷ்கின் ஆகியோர் புதினுடன் அப்போதிலிருந்து இருக்கும் மற்ற இரண்டு உறுதியான விசுவாசிகள். அதிபரின் இந்த நெருங்கிய வட்டம் மொத்தமும் சேர்த்து சிலோவிக்கி என்று அழைக்கப்படுகிறது. அப்படியென்றால் அமலாக்குபவர்கள் என்று பொருள். நிகோலாய் பட்ருஷேவ் போன்ற சிலரே அதிபரின்மீது அதிக செல்வாக்கைக் கொண்டுள்ளனர். கம்யூனிஸ்ட் காலத்தில் இருந்த உளவுத்துறை மற்றும் உள்துறை பாதுகாப்பு நிறுவனமான கேஜிபியில் புதினுடன் பணியாற்றியது மட்டுமின்றி, 1999 முதல் 2008 வரை கேஜிபியின் வாரிசு அமைப்பான எஃப்.எஸ்.பியின் தலைவராகவும் நிகோலாய் பட்ருஷேவ் புதினுக்கு பிறகு உருவானார்.

படையெடுப்புக்கு மூன்று நாட்களுக்கு முன்னர், ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டத்தில், பட்ருஷேவ், அமெரிக்காவின் “உறுதியான இலக்கு” ரஷ்யாவை உடைப்பதுதான் என்ற கருத்தை முன்வைத்தார். அமெரிக்கா “உயிரி போருக்கு” தயாராவதாகவும், அமெரிக்காவும் பிரிட்டனும் ரஷ்யாவை தோற்கடிக்க வேண்டுமென்ற நம்பிக்கையோடு மேற்கு நாடுகளை வழிநடத்துவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட தெற்கு யுக்ரேனில் உள்ள ககோஃப்கா அணை தகர்க்கப்பட்டபோது, அமெரிக்கா, பிரிட்டன், நேட்டோ நட்பு நாடுகள் ஆதரவுடன் யுக்ரேன் அதைச் செய்ததாக அவர் குற்றம் சாட்டினார். அலெக்சாண்டர் போர்ட்னிகோவ், மத்திய பாதுகாப்பு சேவையின் தலைவர் அலெக்சாண்டர் போர்ட்னிகோவ், மத்திய பாதுகாப்பு சேவையின் தலைவர் ரஷ்யாவை கூர்ந்து கவனித்து வரும் வல்லுநர்கள், வேறு வழிகளில் வரும் தகவல்களைவிட பாதுகாப்பு சேவைகளிடமிருந்து பெறும் தகவல்களை அதிபர் அதிகம் நம்புவதாகக் கூறுகின்றனர். அத்தகைய நெருக்கிய வட்டத்தில் ஒருவராக அலெக்சாண்டர் போர்ட்னிகோவ் காணப்படுகிறார்.

லெனின்கிராட் காலத்து கேஜிபியில் இருந்து வந்துள்ள மற்றுமொரு பழைய செல்வாக்கு மிக்க நபர் இவர். நிகோலாய் பட் ருஷேவுக்கு பிறகு மத்திய பாதுகாப்பு சேவையின் தலைமைக்கு இவர் வந்தார். மத்திய பாதுகாப்பு சேவை மற்ற சட்ட அமலாக்க சேவைகளின் மீது கணிசமான செல்வாக்கைக் கொண்டுள்ளது. அதற்கென அலுவலகத்தில் என்று நீண்டகாலமாக அவரது நிழலாக இருந்தவர். அப்படி இருந்தவர், பிறகு இறுதியாக நாடாளுமன்றத்தில் சபாநாயகரானார். அவர் ரஷ்ய வரலாற்று சங்கத்திற்குத் தலைமை தாங்குகிறார். இவர் அதிபரின் செயல்களுக்கான கருத்தியல் அடிப்படைகளை வழங்குவதில் முக்கியமானவர்.




சொந்தமாக சிறப்புப் படைகளும் உள்ளன.

அலெக்சாண்டர் போர்ட்னிகோவ் முக்கியமானவர். ஆனால், அவர் மற்றவர்களைப் போல் ஆலோசனை வழங்கவதற்காக நெருங்கிய வட்டத்தில் இல்லை என்று ஆண்ட்ரி சோல்டடோவ் நம்புகிறார். லெனின்கிராட் காலத்தில் இருந்து புதினுக்கு நெருக்கமாக இருந்து வரும் அந்த மூன்று பேரில், இவர் மூன்றாவது நபர். செர்கேய் நரிஷ்கின் தனது தொழில்முறை வாழ்க்கையின் பெரும்பகுதியில் அதிபருடன் இணைந்தே இருந்தார். இருப்பினும், போருக்கு முந்தைய நிலைமையைப் பற்றி அவரிடம் தொலைக்காட்சியில் கேட்கப்பட்டபோது அவர் சரியாக விவரிக்காத நேரத்தில், அந்த நீண்டகால நட்பு அவர் மீது கோபம் கொள்வதில் இருந்து அதிபர் புதினை தடுக்கவில்லை. அதுமட்டுமின்றி, "புதின் தனது நெருங்கிய வட்டத்திற்குள், (நரிஷ்கினை) ஒரு முட்டாளாகக் காட்டக்கூடிய வகையில் வேடிக்கை செய்வதை மிகவும் விரும்புவார்," என்று ஆண்ட்ரே சோல்டடோவ் கூறினார்.

செர்கேய் நரிஷ்கின், 1990களில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில், 2004இல் புதினின்

கடந்த 19 ஆண்டுகளாக, ரஷ்யாவின் மூத்த ராஜதந்திரியாக இருந்துள்ளார். முடிவெடுப்பதில் அவருக்குப் பெரிய பங்கு இல்லை எனக் கருதப்பட்டாலும்கூட, ரஷ்யாவின் தரப்பு நியாயத்தை உலகுக்கு முன்வைப்பதில் இவர் பங்காற்றியுள்ளார்.விளாதிமிர் புதின் தனது கடந்த கால நட்புகளைப் பெரிதும் நம்பியிருக்கிறார் என்பதற்கு, 73 வயதான செர்கேய் லாவ்ரோஃப் மிகப்பெரிய சான்று. ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கிய சில நாட்களுக்குப் பிறகு, அந்த முடிவைத் தற்காத்து அவர் பேசியபோது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பெரும்பகுதி வெளிநடப்பு செய்தது. ஆனால், அவர் அதைப் பொருட்படுத்திவே இல்லை. ஆரம்பத்திலிருந்தே புதினின் விசுவாசியாக இருந்தாலும், யுக்ரேன் விவகாரத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் அவருக்கு எந்தவொரு பங்கும் இருப்பதாகக் கருதப்படவில்லை. ஆப்பிரிக்கா, தென்னமெரிக்கா மற்றும் பிற இடங்களில் ரஷ்யாவுக்கு ஆதரவைத் திரட்டி, தனது நாட்டை ஒரு காலனித்துவ நாடாக ஊக்குவிப்பதே அவரது பணி.

யுக்ரேனை ஒரு "நாஜி ஆட்சி" என்று சித்தரிக்கும் முயற்சியில் அவர் ரஷ்யாவின் போருக்கான சொல்லாட்சியை உச்சகட்டத்திற்குக்

கொண்டு சென்றார். யுக்ரேனின் அதிபர் யூதர் என்பதெல்லாம் இங்கு ஒரு பொருட்டே இல்லை என்றுகூட அவர் வாதிட்டார். “நான் சொல்வது தவறாகக்கூட இருக்கலாம். ஆனால் ஹிட்லருக்கு கூட யூத ரத்தம் இருந்தது,” என்றுகூட அவர் வாதிட்டார். புதினுடைய பரிவாரங்களில் அரிதாக ஒரு பெண்ணின்

அவருக்கு ராணுவப் பின்னணி இல்லையென்றாலும், யுக்ரேனின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டுப்படுத்த தேசிய காவல் படைக்குப் பரந்த அளவிலான பணிகள் வழங்கப்பட்டுள்ளன. அதோடு, அதில் அவர் பெரும் இழப்பைச் சந்தித்ததாகவும் கூறப்படுகிறது. வாக்னர் குழுவின் தலைவர்




முகம். இவர் மேல்சபையின் வாக்களிப்பை மேற்பார்வையிட்டவர். வெளிநாட்டில் ரஷ்ய படைகளை நிலைநிறுத்துவதை உறுதி செய்து, படையெடுப்பிற்கு வழி வகுத்தவர். வாலென்டினா மாட்வியென்கோ, செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை சேர்ந்த மற்றொரு புதின் விசுவாசி. இவர் 2014இல் கிரைமியாவை இணைப்பதற்கு உதவினார். ஆனால், அவர் முதன்மையான முடிவுகளை எடுப்பவராகக் கருதப்படவில்லை.

அதிபரின் முன்னாள் மெய்க்காப்பாளரான இவர், இப்போது ரஷ்யாவின் தேசிய காவல்படையான ரோஸ்க்வார்டியாவை வழிநடத்துகிறார். இது 2016ஆம் ஆண்டு அதிபர் புதினால் உருவாக்கப்பட்ட ரோமானிய பேரரசை போன்ற பிரிட்டோரியன் காவலர்கள் பாணியில் அமைக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட ராணுவம். அதை உருவாக்குவதற்கு முன்பாக, அதற்கான தனது சொந்த பாதுகாப்புக் காவலரைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், அவர் அந்தப் படையின் விசுவாசத்தை உறுதி செய்தார். மேலும் விக்டோர் ஸோலோடாவ் அந்தப் படையின் எண்ணிக்கையை 400,000 ஆக உயர்த்தினார்.

ப்ரிகோஜின் ஏற்படுத்திய நெருக்கடி எப்படி முடியும் என்பதை முடிவு செய்வதில், ரஷ்யாவின் பாதுகாப்புப் படைகள் மற்றும் குறிப்பாக “தேசிய காவல் படை” முக்கியப் பங்கு வகிக்கும் என்று பிரிட்டனின் உளவுத்துறை கூறியது.

பிரதமர் மிகைல் மிஷுஸ்டினுக்கு பொருளாதாரத்தை மீட்கும் நம்ப முடியாத அளவுக்குப் பெரிய பணி உள்ளது. மாஸ்கோ மேயர் செர்கேய் சோபியானின், ரோஸ்நேஃப்ட் மாகாண எண்ணெய் நிறுவனத் தலைவர் இகோர் செச்சின் ஆகியோரும் அதிபருக்கு நெருக்கமானவர்கள் என்று அரசியல் ஆய்வாளர் யெவ்கெனி மின்சென்கோ கூறுகிறார்.

அதிபரின் குழந்தைப்பருவ நண்பர்களாக இருந்த கோடீஸ்வர சகோதரர்கள் போரிஸ் மற்றும் ஆர்கடி ரோட்டன்பெர்க் ஆகியோர் நீண்டகாலமாக நெருங்கிய நட்புவட்டத்தில் உள்ளனர். கடந்த 2020ஆம் ஆண்டில், ஃபோர்ப்ஸ் பத்திரிகை அவர்களை ரஷ்யாவின் பணக்கார குடும்பமாக அறிவித்தது.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




## சொல்றாங்க... சொல்றாங்க...



"அமிர்த காலம்' என்றால் ஏன் இப்படி வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கின்றன?"

**ராகுல்**

(அப்படின்னா, அவங்க சொன்னது 'அமிழ்ந்த காலமா' இருக்குமோ?)



"பெண்களை கொச்சைப்படுத்துவதுதான் திராவிட மாடலா?"

**குஷ்பு**

(மல்யுத்த வீராங்கனைகளும் பெண்கள்தானே! அவங்களை அவமதிப்பதுதான் தேசிய மாடலான்னு எப்போ கேட்பீங்க? ரசிகர்கள் ஆவலா காத்துக் கிடக்கிறாங்க!)



"அதிகார மிரட்டல்களுக்கு ஒருபோதும் அஞ்சமாட்டோம்!"

**மு.க.ஸ்டாலின்**

(அஞ்சேல் என்பது அவன் ஏடு! அதையே நீவிர் தினம் பாடு!)



"இந்த சர்வாதிகார அரசு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் எதிர்காலத்தில் தேர்தல் இருக்காது!"

**மம்தா பானர்ஜி**

(இப்போ வரப்போற தேர்தலே எப்படி இருக்கும்னு தெரியலே! இப்பவே பலர் புலம்ப ஆரம்பிச்சிட்டாங்கம்மா!)

# பணம் பத்தும்

## டைட்டன் நீர்மூழ்கி பாதுகாப்பானதா?

ஐந்து பேர் பயணித்து மரணமடைந்துவிட்ட 'டைட்டன் நீர்மூழ்கி' அதன் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பாக, கப்பலின் துணைக் குழுவினரால் பயண ஏற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டன.



ஆழ்கடலுக்குள் நீர்மூழ்கி இறங்குவதற்கு முன்னால், துணைக்குழுவினர் அதை வெளியிலிருந்து பூட்டி, பிறகு போல்ட் மூலம் சீல் செய்தனர். பின் ஆழ்கடலுக்குள் இறங்கிய நீர்மூழ்கி, டைட்டானிக் கப்பல் சிதைந்து கிடக்கும் பகுதிக்குள் சென்றுகொண்டிருந்தபோது, அது தன்னுடைய தகவல் தொடர்பை இழந்தது. பிறகு தீவிர தேடுதல் பணியில் அந்த நீர்மூழ்கி உட்புறமாக ஏற்பட்ட வெடிப்பால் உடைந்து விபத்துக்கு உள்ளானது தெரிய வந்தது. இந்த விபத்தில் அதில் பயணித்த ஐந்து பேரும் இறந்துவிட்டனர்.

கடல் மட்டத்திற்குக் கீழே 4000 மீட்டர் ஆழத்தை அடையும் திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களில் 'டைட்டன் நீர்மூழ்கியும்' ஒன்று. இத்தகைய திறன்கொண்ட நீர்மூழ்கியை, ஓஷன்கேட் என்ற தனியார் நிறுவனம் சொந்தமாக வைத்திருக்கிறது.

'டைட்டன் நீர்மூழ்கியை' போலவே 'சைக்ளாப்ஸ்' என்ற நீர்மூழ்கியையும் கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஓஷன்கேட் நிறுவனம் இயக்கி வருகிறது. ஆனால் 'டைட்டானிக் சேதத்தை' பயணிகள் பார்வையிடுவதற்காகவே அந்த நிறுவனத்தால் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டதுதான் இந்த 'டைட்டன் நீர்மூழ்கி'.

'டைட்டன் நீர்மூழ்கி சுமார் 10,432 கிலோ எடையளவைக் கொண்டது. மேலும் இரண்டு குவிமாடம் கொண்ட கார்பன் ஃபைபர் மற்றும் டைட்டானிய மூடிகளோடு,13 செ.மீ அளவிற்கு ஏரோஸ்பேஸையும் இது கொண்டுள்ளது. இதனால் கடலுக்கு அடியில் சுமார் 4000 மீட்டர் (13,123 அடி) ஆழத்திற்கு டைட்டன் நீர்மூழ்கியால் செல்ல முடியும். 'டைட்டானிக் கப்பலின் சிதைந்த பாகங்கள்' கடலின் மேற்பரப்பில் இருந்து

# செய்யும்

## மேட் மர்ஃபி

3,800 மீட்டர் ஆழத்தில் கிடக்கின்றன. டைட்டன் நீர்மூழ்கியால் அதைச் சென்றடைய முடியும்.

மற்ற நீர்மூழ்கி கப்பல்களைப் போல் அல்லாமல், டைட்டன் நீர்மூழ்கி குறைந்த அளவு சக்தியைக் கொண்டே இயங்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதேநேரம், அது தன்னுடைய இயக்கத்தைத் தொடங்குவதற்கும், நிறுத்துவதற்கும் மற்றொரு தனி கப்பலின் துணையும், ஆதரவும் அதற்குத் தேவைப்படும்' என அமெரிக்க தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு, டைட்டன் நீர்மூழ்கி முதன்முதலாக அதன் சோதனை ஓட்டத்தைத் தொடங்கியது. அதன் பின் 2021ஆம் ஆண்டு முதல் அதன் அதிகாரப்பூர்வ பயணம் தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டு மட்டும் டைட்டன் நீர்மூழ்கி 10 ஆழ்கடல் பயணங்களை மேற்கொண்டுள்ளது. ஆனால் இந்தப் பயணங்கள் அனைத்துமே டைட்டானிக் கப்பல் சிதைந்து கிடக்கும் பகுதிக்குச் சென்றவை அல்ல. கப்பல் ஏவுதளத்திலிருந்து புறப்படுவது முதல் மீண்டும் மேற்பரப்புக்குத் திரும்புவது வரை மணிக்கு சுமார் 4 கிமீ வேகத்தில் 'டைட்டன் நீர்மூழ்கி' பயணிக்கிறது.

கப்பலுக்குள் வடிவமைப்பு

இந்த நீர்மூழ்கியின் உட்பரப்பு மிகவும் குறுகலாகக் காணப்படுகிறது. வெறும் 670 செ.மீ ஜ் 280 செ.மீ ஜ் 250 செ.மீ (22 அடி ஜ் 9.2 அடி ஜ் 8.3 அடி) என்ற கணக்கில் மட்டுமே இதன் கொள்ளளவு இருக்கிறது.




ஒரே நேரத்தில் விமானி உட்பட மொத்தம் 5 பேர் மட்டுமே இதில் பயணிக்க முடியும். ஆனால் இந்த அளவு மற்ற நீர்மூழ்கி கப்பல்களைவிட பெரியது எனக் கூறப்படுகிறது.

கப்பலின் முன்புறத்தில் உள்ள குவிமாடத்தில் ஒரு பெரிய துவாரம் இருக்கிறது. அதன் மூலம் நாம் கடலுக்குள் செல்லும் வழியைப் பார்க்க முடியும். இந்தத் துவாரத்தின் அளவு மற்ற

எந்த நீர்மூழ்கிகளிலும் இருப்பதைவிட மிகப் பெரியது என அதன் நிறுவனமான ஓஷன்கேட் தெரிவிக்கிறது. அதேபோல் அத்தகைய ஆழத்தில், நிலைமைகள் மிகவும் குளிராக மாறும் என்பதால், இந்த நீர்மூழ்கியின் சுவர்கள் தொடர்ந்து தன்னைச் சூடாக்கிக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சுவர்களில் பொருத்தப்பட்டுள்ள விளக்குகள் மட்டுமே இந்த பயணத்தின்போது கிடைக்கும் ஒளியின் ஒரே ஆதாரமாக இருக்கின்றன.

நீர்மூழ்கியின் முன்பக்கத்தில் பயணிகளுக்காக சிறியளவில் கழிவறையும் இருக்கிறது. பயணத்தின்போது ஒருவர் கழிவறையை உபயோகிக்க வேண்டுமென்றால், உள்ளே சென்று அங்கிருக்கும் திரைச்சீலைகளை இழுத்துவிட்டுக்கொள்ள வேண்டும். அப்போது மற்றவர்களுக்குத் தொந்தரவு இல்லாமல் இருப்பதற்காக கப்பலின் பைலட் மெல்லிய இசையை ஒலிக்க விடுவார்.

ஆனாலும் இத்தகைய அசாதாரண ஆழ்கடல் பயணத்திற்குத் தயாராகும்போது, பயணிகள் தங்களது உணவுப் பழக்கங்களில் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என ஓஷன்கேட் நிறுவனம் அதன் அதிகாரப்பூர்வ இணையதள பக்கத்தில் தெரிவித்துள்ளது.

அதேபோல் டைட்டானிக் கப்பல் சிதலமடைந்து கிடக்கும் பகுதியை அடைந்த பிறகு, அதன் காட்சிகளை ஒளிரச் செய்யும் வகையில் நீர்மூழ்கியின் வெளிப்புறத்தில் சக்தி வாய்ந்த விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அதோடு அந்தக் காட்சிகளைப் பதிவு செய்வதற்காக 4கே. கேமராக்களும் அதில் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் கப்பலின் பாதையை நிர்ணயிக்க வெளிப்புற லேசர் ஸ்கேனரும், சோனாரும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் தகவல்கள் அனைத்தும் பதிவு செய்யப்படுவதை, நீர்மூழ்கிக்குள் இருக்கும் பெரிய டிஜிட்டல் திரையில், பயணிகளால் காண முடியும்.

டைட்டன் நீர்மூழ்கியில், 96 மணிநேரத்திற்குத் தேவையான ஆக்ஸிஜன் இருப்பு வைக்கப்பட்டிருக்கும். ஆனாலும் இந்தப் பயணத்தின்போது பயணிகளின் சுவாச வீதத்தில் மாறுபாடு ஏற்படலாம். நீர்மூழ்கியின் பெரும்பாலான உட்பகுதி “off-the-shelf technology”இல் வடிவமைக்கப்பட்டிருப்பதாக அதன் நிறுவனம் ஒப்புக்கொள்கிறது. இது இந்த கப்பலின் கட்டுமானத்தை சீரமைக்கவும், இதை எளிதான முறையில் இயக்கவும் பயன்படுகிறது எனவும் அந்நிறுவனம் குறிப்பிடுகிறது.

கடலின் ஆழத்திற்குச் செல்லும் இத்தகைய நீர்மூழ்கி கப்பல்களில் ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தை நம்மால் பயன்படுத்த முடியாது.அதற்குப் பதிலாக, ஒரு பிரத்யேக வகையில் செய்தி பரிமாறப்படும் அமைப்பு செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலமாக கடலின் மேற்பரப்பில் இருக்கும் குழுவுடன், நீர்மூழ்கிக்குள் இருப்பவர்கள் அறிவுறுத்தல்களைப் பெற முடியும்.இந்த அறிவுறுத்தல்களின் அடிப்படையில், நீர்மூழ்கியின் பைலட் கப்பலைச் செலுத்துகிறார். வீடியோ கேம் கண்ட்ரோலர் போல இருக்கும் ஒரு சாதனத்தின் மூலம் அவர் நீர்மூழ்கியைத் தனது கட்டுப்பாட்டில் கடலுக்குள் செலுத்துகிறார்.

தற்போது தொலைந்து போயிருக்கும் டைட்டன் நீர்மூழ்கியின் விமானி ரஷ், கடந்த ஆண்டு சிபிஎஸ் செய்தி நிறுவனத்திடம் பேசும்போது, நீர்மூழ்கியை இயக்குவது அவ்வளவு சிரமமான காரியமல்ல என்று தெரிவித்திருந்தார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள்

கடலின் ஆழத்தில் செல்லும்போது, அங்கு நிலவும் கடுமையான அழுத்தங்களை நீர்மூழ்கி கையாள வேண்டும். இதற்காக ’கப்பலின் ஒவ்வொரு நகர்வையும், உடனுக்குடன் கணிக்கும் கண்காணிக்கும் அமைப்பை’ ஏற்பாடு செய்துள்ளதாக ஓஷன்கேட் நிறுவனம் அதன் இணையதள பக்கத்தில் தெரிவித்துள்ளது. அதேபோல் கடலுக்குள் நிலவும் மாறுபட்ட அழுத்த நிலைகளைக் கண்காணிப்பு செய்ய அதில் சென்சார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நீர்மூழ்கி கடலுக்குள் இறங்குவதற்கு முன்னால், கப்பலின் துணைக்குழு அதை வெளிப்புறத்திலிருந்து பூட்டுகிறது. மேலும் 17 போல்ட்களை கொண்டு வெளிப்புறத்தில் சீல் செய்கிறது.இத்தனை பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்தாலும், இந்தப் பயணத்தில் பல சவால்களும், ஆபத்துகளும் இருப்பதாக ஓஷன்கேட் நிறுவனம், அதன் விளம்பர வீடியோக்களிலேயே குறிப்பிட்டிருந்தது.

ஓஷன்கேட் நிறுவனத்தால் ‘டைட்டன்’ வடிவமைக்கப்பட்டபோது, நீர்மூழ்கி கப்பல்களைச் சோதனை செய்யும் வல்லுநர்கள் தங்களது ஒருமித்த கவலைகளைத் தெரிவித்திருந்தனர். அதன் வடிவமைப்பில் இருக்கும் ‘பேரழிவுக்கான சிக்கல்கள்’ குறித்து அவர்கள் அப்போதே எச்சரிக்கை விடுத்திருந்தனர்.அதேபோல் ‘டைட்டன் நீர்மூழ்கியின்’ வடிவமைப்பு குறித்து பல தவறான கூற்றுகளை ஓஷன்கேட் நிறுவனம் கூறி வருவதாக ஏற்கெனவே சர்ச்சைகள் எழுந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பயிற்சிகள் அளிக்கப்பட்டதா?

இந்தப் பயணங்களில் கலந்துகொள்ள



ஆர்வமுடையவர்களுக்கு, ஆழ்கடல் பயணம் மேற்கொள்வதில் கடந்த கால அனுபவம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என ஓஷன்கேட் நிறுவனம் அதன் இணையதளத்தில் தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் வேறு ஏதேனும் பயிற்சிகள் தேவைப்பட்டால், அது ஆன்லைனில் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


அதேபோல் பயணிகள் நிச்சயம் 18 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும் எனவும், தங்களுக்கு வரையறுக்கப்பட்ட இடத்தில் நீண்டநேரம் அமர்ந்துகொள்ளவும், ஏணியில் ஏறுவதற்கும் திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டுமெனவும், பயணத்தின்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பயணிகளுக்குத் தெரியப்படுத்தப்படும் எனவும், பயணத்தின்போது பயணிகள் எவ்வாறு ஈடுபட விரும்புகிறார்கள் என்பதை அவர்களே தேர்வு செய்யலாம் எனவும் ஓஷன்கேட் கூறுகிறது. தகவல்தொடர்பு குழுக்களுடன் பணிபுரியவோ அல்லது கப்பலின் பைலட்டுக்கு வழிசெலுத்துவதில் உதவும் வாய்ப்பையோ பயணிகள் பெறலாம் எனவும் ஓஷன்கேட் குறிப்பிடுகிறது.

ஓஷன்கேட் நிறுவனத்தின் டைட்டன் நீர்மூழ்கியில் டைட்டானிக் கப்பலின் சிதைவுகளைக் காணச் சென்ற ஐந்து பேர் உயிரிழந்ததன் அதிர்ச்சி இன்னும் விலகவில்லை. இதற்கிடையே அந்த நீர்மூழ்கி தொடர்பான எச்சரிக்கைகளை 'ஆதாரமற்ற கூச்சல்' என்று அதன் தலைமை செயல் அதிகாரியால் நிராகரிக்கப்பட்டதாக மின்னஞ்சல் தகவல்கள் காட்டுகின்றன.

ஓஷன்கேட் நிறுவனத்தினுடைய டைட்டன் நீர்மூழ்கியின் பாதுகாப்பு குறித்த எச்சரிக்கைகளை அந்த நிறுவனத்தின் தலைவரால் மீண்டும் மீண்டும் நிராகரிக்கப்பட்டதாக, ஒரு முன்னணி ஆழ்கடல் ஆய்வுப் பயண வல்லுநருடனான மின்னஞ்சல் பரிமாற்றங்கள் காட்டுகின்றன.அந்த மின்னஞ் சல்களில், ராப் மெக்கல்லம் என்ற வல்லுநர் ஓஷன்கேட் நிறுவனத்தின் தலைவர் ஸ்டாக்டன் ரஷ்ஷிடம் "அவர் தனது வாடிக்கையாளர்களை அபாயத்தில் தள்ளுவதாக" கூறியுள்ளார். மேலும், ஒரு சுயாதீன நிறுவனத்தால் சான்றழிக்கப்படும் வரை டைட்டன் நீர்மூழ்கியைப் பயன்படுத்துவதை நிறுத்தி வைக்குமாறும் ராப் மெக்கல்லம் வலியுறுத்தியுள்ளார்.

வல்லுநர்கள் டைட்டன் நீர்மூழ்கியின் பாதுகாப்பு மற்றும் தனியார் நிறுவனங்களின் ஆழ்கடல் பயணங்கள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன என்று கேள்வி எழுப்பியுள்ளனர். டைட்டன் நீர்மூழ்கியின் சோதனை முறை வடிவமைப்பு, அதை உருவாக்கப் பயன்படுத்தப்படும் கார்பன் ஃபைபர் போன்றவை குறித்தும் கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. ஓஷன்கேட் நிறுவனத்தின் அணுகுமுறை 'பேரழிவு மிக்க' சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்று எச்சரித்து, இந்தத் துறையைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட முன்னணி தலைவர்கள் 2018ஆம் ஆண்டில் ஸ்டாக்டன் ரஷ்ஷுக்கு கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டவர்களில் ராப் மெக்கல்லமும் ஒருவர்.

"இந்தத் துறையைச் சேர்ந்த முக்கிய தொழில்முனைவோர்கள், இரண்டு காரணங்களுக்காக ஸ்டாக்டன் ரஷ்ஷின் திட்டத்தை நிறுத்தப் பல ஆண்டுகளாக முயன்று வருகின்றனர்," என்று தனது சொந்த கடல்



**From:** Rob McCallum
**To:** Stockton Rush
**Sent:** March 22, 2018
**Subject:** Sea Trials

... you are wanting to use a prototype un-classed technology in a very hostile place. As much as I appreciate entrepreneurship and innovation, you are potentially putting an entire industry at risk.

**From:** Stockton Rush
**To:** Rob McCallum
**Sent:** March 26, 2018
**Subject:** RE: Sea Trials

...
I know that our engineering focused, innovative approach (as opposed to an existing standards compliance focused design process) flies in the face of the submersible orthodoxy, but that is the nature of innovation.
...
I have grown tired of industry players who try to use a safety argument to stop innovation and new entrants from entering their small existing market. Since Guillermo and I started OceanGate we have heard the baseless cries of "you are going to kill someone" way too often. I take this as a serious personal insult.

**From:** Rob McCallum
**To:** Stockton Rush
**Sent:** March 27, 2018
**Subject:** RE: Sea Trials

...
I think you are potentially placing yourself and your clients in a dangerous dynamic. Ironically, in your race to Titanic you are mirroring that famous catch cry "she is unsinkable". Having dived the Titanic, and having stood in a Coroners Court as a technical expert, it would be remiss of me not to bring this to your attention.

BBC

பயண நிறுவனத்தை நடத்தி வரும் வல்லுநரான மெக்கல்லம் தெரிவித்தார்.

"கார்பன் ஃபைபர் ஆழ்கடல் பயணத்திற்கு உகந்த பொருள் அல்ல என்பது முதல் காரணம். இதுதான் வகைப்படுத்தப்படாமல், சுயாதீன நிறுவனத்தால் சான்றளிக்கப்படாமல், வணிகரீதியிலான ஆழ்கடல் பயணத்தை மேற்கொள்ளும் ஒரே நீர்மூழ்கி என்பது அவரது முயற்சியை நிறுத்த முயன்றதற்கான இரண்டாவது காரணம்," என்று விளக்குகிறார் மெக்கல்லம்.

நீர்மூழ்கிகள், கடலியல் நிறுவனங்களால் சான்றளிக்கப்பட வேண்டும் அல்லது "வகைப்படுத்தப்பட வேண்டும்." எடுத்துக்காட்டாக, அமெரிக்கன் பியூரோ ஆஃப் ஷிப்பிங், நார்வேவில் உள்ள உலகளாவிய அங்கீகார அமைப்பு அல்லது லாயிட்ஸ் ரெஜிஸ்டர் போன்ற சுயாதீன அமைப்புகள் சான்றளிக்க வேண்டும். இதன் அடிப்படையில், உறுதிப்பாடு, வலிமை, பாதுகாப்பு மற்றும் செயல்திறன் உள்ளிட்ட அம்சங்களில் குறிப்பிட்ட தரத்தை நீர்மூழ்கி எட்ட வேண்டும். ஆனால், இந்தச் செயல்முறை ஒரு கட்டாயமான செயல்முறை இல்லை.

கடந்த 2019இல் ஒரு வலைப்பதிவில், ஓஷன்கேட் நிறுவனம் இந்த நீர்மூழ்கி வடிவமைக்கப்பட்ட விதம் இப்போது நிலவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டமைப்புக்கு அப்பாற்பட்டு உள்ளதாகக் கூறியது. ஆனால், "அதற்காக ஓஷன்கேட் நிறுவனம் அந்த அமைப்பு கூறும் தரநிலைகளை எட்டவில்லை என்று அர்த்தமல்ல," என்றும் கூறியது.

"ஸ்டாக்டன் தன்னை ஒரு பெரிய தொழில்முனைவோராகக் கருதினார். அவர் இப்போது நிலவும் கட்டமைப்புக்கு அப்பாற்பட்டு சிந்திக்க விரும்பினார். அவர் விதிமுறைகளால் கட்டுப்படுத்தப்படுவதை விரும்பவில்லை. ஆனால், விதிமுறைகள் உள்ளன. அதோடு, ஆழமான பொறியியல் கொள்கைகளும் இயற்பியல் விதிகளும் உள்ளன," என்று கூறும் மெக்கல்லம், டைட்டன் நீர்மூழ்கியில் யாருமே பயணம் செய்திருக்கக்கூடாது என்ற தனது வாதத்தில் உறுதியாக இருக்கிறார்.

"உறுதியான வெற்றி அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட பொறியியல் கொள்கைகளில் இருந்து நீங்கள் விலகிச் சென்றால், அதற்குச் செலுத்த வேண்டிய விலை பயங்கரமானதாக இருக்கும். எனவே அது மீண்டும் நடக்க அனுமதித்துவிடக்கூடாது. இந்த முறையே இது நடக்க அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடாது," என்று மெக்கல்லம் கூறுகிறார்.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

கட்டுரை

# தமிழே

## வள்ளுவர் விரும்பிய வல்லரசு!

உலக அற இலக்கியங்களில் முதலாவதாகப் போற்றப் பெறுவது திருக்குறள். உலகப் பொதுமறை என்னும் சிறப்புடன் நாடு, இனம், மொழி என்கிற பேதங்களையெல்லாம் கடந்து அறத்தை முதன்மைப்படுத்தி மானுட விழுமியத்தையே குறிக்கோளாகச் சுட்டியது வான்புகழ் வள்ளுவம்.

நூல்வேறு, ஆசிரியர்வேறு என்று பிரித்தறிய இயலா வண்ணம் வள்ளுவரின் உள்ளமே வள்ளுவமாக மலர்ந்திருக்கிறது. உலகு தழுவிய ஒரு முழுவாழ்வியல் வள்ளுவத்திற்குள் பொதிந்திருக்கிறது. தனிமனித ஒழுக்கத்தில் முளைவிடுகிற அறவியல் சூழல் குடும்பம், சமூகம் எனக் கிளைத்து நாடு எனப் பரந்து பின் உலகு தழுவியதாக விரிகிறது.

வட்டத்தின் விட்டம்போல அரசு காப்பாக அமைகிறது என்றால், வட்டத்தின் புள்ளியாக அமைபவன் தனிமனிதன். ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒவ்வொரு புள்ளி அமைவது போல, ஒவ்வொரு புள்ளிக்கும் ஒரு வட்டமுண்டு. அதாவது தனிமனிதனுக்கும் அரசுக்கும் இருக்கிற பிரிக்க முடியாத நேரடித் தொடர்பைத் திருவள்ளுவர் அவ்வாறு அடிப்படையாக்குகிறர்

இந்தப் பொருத்தம் அரசனுக்கும் அரசுக்கும் பொருந்தும். திருவள்ளுவரின் காலத்தில் முடியாட்சியே மேலோங்கியிருந்தது. ஆனால், அவர் குடியாட்சியைப் பெரிதும் விரும்பினர் அவர் காலத்தில் குடியாட்சி சாத்தியமில்லை என்று கூற முடியாது. ஆதலால் அவர் நுட்பமான அரசாட்சி முறையை அமைத்தர்

திருக்குறளின் பல இடங்களில் அவர் ‘அரசன்’ என்றும் ‘அரசு’ என்றும் இரண்டு விதமாகக் கூறுவர் அரசனை முதலாகக் கொண்டதே அரசு என்பதில் அவருக்கு மாறுபாடில்லை. ஆனால் அந்த அரசன் கொடுங்கோன்மையாளனாக இருப்பதில் அவருக்கு சம்மதமில்லை; செங்கோன்மையாளனாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினர்

அரசு என்னும் கட்டமைப்பில் அரசனையும், அமைச்சரையும், குடிமக்களையும் திருவள்ளுவர் படிநிலைகளில் வடிவமைக்கிறர் அரசனைத் தலைவனாக்கியதைப் போலவே அமைச்சர்களை அதிகாரிகளாக்கிக் காட்டினர் இதில் உச்சமானது குடிமக்களை அரசர்களாக்கிக் காட்டுவதுதான். அரசனைத் தொண்டனாகவும் காவலனாகவும் ஆக்கி அமைச்சர்களை அதிகாரிகளாக, சேவகர்களாக ஆக்கி மக்களையே உண்மையான அரசர்கள் ஆக்குவதுதான் வள்ளுவர் விரும்பிய வல்லரசின் நோக்கம்.

‘கடையனுக்கும் கடைத்தேற்றம்’ என்ற ஜான் ரஸ்கினுடைய முழக்கத்திற்கு முந்தைய முழக்கம் தமிழில் திருவள்ளுவர் காலத்திலேயே தோன்றியிருக்கிறது. பின்னாளில் பக்தி மரபு இதையே அடியொற்றி எல்லாம் வல்ல கடவுளையே ‘அடியார்க்கும் அடியேன்’ என்று அடியார்களின்





## அருணன் கபிலன்


தொண்டனாகப் போற்றிக் கொண்டது. கடவுளே பக்தனாகிய குடிமகனின் அடியவன் என்றால் அரசனின் நிலை குறித்துத் தனித்துக் கூறத் தேவையில்லை.

அறத்துப்பாலில் தனிமனித ஒழுக்கங்களை வலியுறுத்திக் காட்டும் திருவள்ளுவர் அதனோடு இணைத்து இல்லறத்தையும் பெண்மையின் சிறப்பினையும் மக்கட்பேற்றின் மாண்பினையும் போற்றிக் காட்டுகிறர் இன்பத்துப்பாலில் காதலின் சிறப்பினை எடுத்து மொழிகிறர்

திருவள்ளுவர் அறத்துக்கும் இன்பத்துக்கும் நடுவில் வைத்துத் தருகிற பொருள் என்னும் பொருண்மை நாட்டைக் குறித்ததேயாகும். பொருட்பாலில் அவர் அரசியலையும் அமைச்சியலையும் விரிவாக உணர்த்துகிறர் ஒரு நாடு வள்ளன்மையும் வல்லமையும் கொண்டதாக விளங்க எவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை அரசியலிலும் அமைச்சியலிலும் வரையறுக்கிறர்

திருக்குறளில் அதிக இயல்களைக் கொண்டது பொருட்பாலேயாகும். அரசியலுக்கு 25 அதிகாரங்களையும் அமைச்சியலுக்கும் ஏனைய இயல்களுக்கும் அதிகாரங்களை வகுத்து மொத்தம் 70 அதிகாரங்களால் பொருட்பாலை வடிவமைக்கிறர் திருக்குறளின் மையமே நாட்டைக் குறித்ததுதான் என்பதனை இதன்மூலம் ஆழமாக உணர்ந்து கொள்ளலாம்.

அரசையே அவர் இறையாளுகையின் கருணையாகத்தான், இறைமாட்சியாகத்தான் காணுகிறர் அரசியலின் முதல் அதிகாரமே 'இறைமாட்சி' என்று தொடங்குகிறது. அதில் அரசனுக்கான பொதுப்பண்புகளையும் நாட்டுக்கான இயல்புகளையும் குறித்துவிட்டு இறைமாட்சியின் வெளிப்பாடாக விளங்கும் அரசு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு 'மானமுடையது அரசு' என்றும் 'இயற்றல் தொடங்கி ஈட்டல், காத்தல், இவற்றோடு காத்து வகுத்தலும் வல்ல தரசு' என்றும் அரசினைக் குறித்துக் காட்டுகிறர்




அதேவேளையில் அவர் வரையறுக்கும் நல்லரசனின் இயல்புகளை ஒரு மன்னன் கொண்டு விளங்கினால் உலகமே அவனுக்கு வசப்படும் என்றும் அறிவுறுத்துவது ஆழமுடையது. ஆட்சியின் நோக்கம் அதிகாரத்தினால் ஒரு நாட்டைப் பிடிப்பது அன்று. அன்பினால் இந்த உலகத்தையே தழுவிக் கொள்வது என்பதுதான் வள்ளுவர் உணர்த்தும் வல்லரசின் அடிப்படை.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவனை இறைவனாக்கிப் போற்றச் செய்தவர் திருவள்ளுவர். ஆனால் அதே வேளையில், நாடொறும் நாடி முறை

செய்யாமல் அவன் ஏமாற்றும் சமயத்தில் அவனாலேயே நாடொரும் அந்த நாடே கெடும் என்று அவனைக் குட்டவும் தவறவில்லை.

திருவள்ளுவர் பார்வையில் அரசு என்பது வரிவசூலிக்கும் இயந்திரமோ, அதிகாரச் சின்னமோ, தண்டனை வழங்கும் நிறுவனமோ அன்று. மக்களைக் குற்றச் செய்கைகளிலிருந்து மீட்டெடுத்து அறப்பண்புகளில் நம்பிக்கையும் உறுதியும் கொள்ளச் செய்வதே நல்ல அரசு.

அத்தகைய அரசைத் தோற்றுவிக்கும் மக்களின் தொண்டனாகிய அரசனின் ஆளுமையைச் செங்கோன்மையில் விவரிக்கிறர் அத்தகு பெருமையுடையவனின் ஆட்சி நாடு என்னும் எல்லைக்குள் அடங்கி விடாமல் உலகம் வரையிலும் விரியும் என்று குறிப்பிடுகிறர்

வேதநூல்களுக்கும் கூட வழிகாட்டியாக விளங்க வேண்டியது அவனுடைய அறமாகிய செங்கோன்மை. அந்தச் செங்கோன்மையின் விளைவாக பருவமழையும் நிறைந்த விளைச்சலும் ஏற்படும் என்று குறிப்பிட்டு நல்ல அரசன் இயற்கையின் தோழனாக இருப்பதையும் அதனால் உலகத்தில் மிக உயர்ந்த தொழிலாகிய உழவுத் தொழில் மேம்படும் என்பதையும் நயமாக உணர்த்திக் காட்டுகிறர்


ஒரு நாட்டின் நல்ல தலைவனுக்குப் பெருமை தருவது போர்க்களமன்று; நீதிமன்றமே. தன் நாட்டை, — உலகத்தை அவன் நீதியினால் காத்தால் அந்த நீதியே அவனைக் காக்கும் என்கிறர் குற்றங்களைப் பற்றியும் தண்டனைகளைப் பற்றியும் அதிகம் பேசாத நூல் வள்ளுவம் என்பதே அதன் சிறப்பு. ஆனால் அறத்தினை நிலை நாட்டுவதற்கு அரசன் முயல்கிற தண்டனை உத்திகளைத் திருவள்ளுவர் ஏற்றுக் கொள்ளவே செய்கிறர் அந்த தண்டனை முறை அவனுக்குரிய தொழில் என்றும், பயிர்களுக்கிடையே மண்டும் களைகளை உழவர்கள் பறிப்பதைப் போன்றது என்று உவமைப்படுத்துவது திருவள்ளுவரின் ஆழ்மனத்தைப் புலப்படுத்துகிறது.




இதேநிலையினை திருவள்ளுவர் கொடுங்கோன்மையில் குறிப்பிடுகிறர் நல்ல தலைவனாகிய அரசன் தன் குடிமக்களின் குற்றங்களைத் தண்டிக்காது விட்டால் அந்தக் குற்றவாளிகளே அரச பதவிக்குப் போட்டியிடுவார்கள் (களைகளே பயிராகும்) என்கிறர்

கொலையாளிகளின் கொலை வெறியினும் கொடியது குடிமக்களைத் துன்புறுத்துபவனின் ஆட்சி. இரவுப் பொழுதில் வேலோடு கொள்ளையிடக் காத்திருக்கும் கொள்ளையனை விடவும் கொடுமையானது கொடுமையான ஒருவனின் ஆட்சி.

வயிற்றுக்குத் தேவையான உணவையும் வாழ்வுக்கு அடையாளமாகிய மானத்தையும் ஒருங்கே இழந்து விடும் கொடுங்கோன்மையாட்சி. அத்தகைய





மகனைச் சான்றோனாக வளர்ப்பதைத் தந்தையின் கடமையாகவும் இவனைச் சான்றோனாக அடைய அந்தத் தந்தை என்ன தவம் செய்தானோ என்று வடிவமைப்பது அறவியல் அரசியல் அமைப்புடைய தனிமனித, குடும்ப, சமூக, அரச மரபினையே திருவள்ளுவர் முதன்மைப்படுத்துவதைக் காட்டுகிறது.

பொதுவுடைமைக் கருத்தின் மூலங்கள் பல திருக்குறளில் காணப்படுகின்றன என்று உணர்த்தும் குன்றக்குடி அடிகளார், திருக்குறள் அதன் பொருளடைவுக்கு ஏற்றவாறு தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் சமுதாய மாற்றத்தைத் தோற்றுவிக்காதது ஏன்? பிரெஞ்சு எழுத்தாளர்கள் வால்டேர், ரூசோ போன்றவர்களின் படைப்புகளில் பிரெஞ்சுப் புரட்சியும், மார்க்ஸ், லெனின் ஆகியோர் எழுத்தாற்றலால் சோவியத் புரட்சியும் எழுந்ததைப் போன்று தமிழகத்தில் திருக்குறளைத் தொடர்ந்து சமுதாய மாற்றம் நிகழாதது ஏன் என்று ஒரு வினாவை எழுப்புகிறர்

அரசனின் ஆட்சியை அழிப்பதற்குப் பகை நாட்டின் படைகள் தேவையில்லை. அவனது கொடுமை தாங்காமல் மக்கள் சிந்தும் கண்ணீரே அதனைச் செய்து விடும் என்று எச்சரிக்கிறர். மழையில்லா வறட்சியை விடவும் கொடுமையானது அன்பற்ற ஒருவனின் ஆட்சி. இப்படிப்பட்ட ஆட்சியில் ஒருவன் செல்வனாய் வாழ்ந்த போதும் அது வறுமையிலும் வறுமையாகவே இருக்கும் என்று தனிமனித வாழ்வுக்கும் அரசாட்சிக்கும் உள்ள தொடர்பினையும் சுட்டிக் காட்டுகிறர்

கட்டிளங்காளையாகிய இளைஞனை போர்க்களத்துக்குரிய வீரனாகத் தயார் செய்வதே சங்ககால அரசனுக்குரிய பண்பு. ஆனால், அரசனையே நாட்டின் தந்தையாக்கி தந்தை மகனுக்கும் மகன் தந்தைக்குமாகச் செய்ய வேண்டிய கடமைகளை முன்வைக்கிறார் திருவள்ளுவர்.

அவ்வினாவுக்கு விடையாக அவரே, ‘திருக்குறள் அப்பட்டமான இலக்கியமாகக் கருதப் பெற்றுப் பதவுரை, பொழிப்புரை காணும் நிலையில் மட்டுமே பயன்படுத்தப் பெற்றது. அதை ஒரு வாழ்வியலாகப் பார்க்கும் பார்வை யாருக்கும் வரவில்லை. இன்றைய இந்திய நாட்டுக்குத் திருக்குறள் கூறும் அரசியல், பொருளியல் முற்றிலும் ஏற்றவை. திருக்குறள் நெறியில் இந்திய அரசியல் இயங்குமானால் வளரும்; வாழும்’ என்று உறுதிபடக் கூறுகிறர்




வள்ளுவர் விரும்பிய வல்லரசு தனிநாட்டுக்கு மட்டுமன்று உலகத்துக்கே வழிகாட்டியாக அமையும்; அமைய வேண்டும்.

# உயிர் மதியா தேர்தல்

## மணிப்பூர்

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் கண்காணிப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக அங்கு ஏற்பட்ட கலவரம் மற்றும் இன மோதல்களால் குறைந்தபட்சம் 52 பேர் கொல்லப்பட்டனர். 35,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அந்த மாநிலத்தில் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.

மணிப்பூரின் மக்கள்தொகை சுமார் 30 முதல் 35 லட்சம் வரை இருக்கும். இங்கு மெய்தெய், நாகா மற்றும் குகி என்ற மூன்று பெரிய சமுதாய மக்கள் வாழ்கின்றனர். மெய்தெய் சமூகத்தினரில் பெரும்பாலானவர்கள் இந்துக்கள். அவர்களில் இஸ்லாமியர்களும் இருக்கின்றனர். மெய்தெய் சமூகத்தின் குடிமக்களின் விகிதம் மக்கள்தொகையில் அதிகமாக உள்ளது. நாகர்கள் மற்றும் குக்கிகள் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாக உள்ளனர். சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, 60 பேரில் 40 பேர் மெய்தெய் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். மீதமுள்ள 20 பேர் நாகா மற்றும் குகி சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இதுவரை, மணிப்பூரின் முதலமைச்சர்களாக பதவி வகித்த 12 பேரில், இருவர் மட்டுமே பட்டியல் சாதியைச் சேர்ந்தவர்கள். மணிப்பூரின் புவியியல் அமைப்பு ஒரு கால்பந்து மைதானம் போல் உள்ளது. இம்பால் பள்ளத்தாக்கு அந்த கால்பந்து மைதானத்தில் உள்ள விளையாடும் இடத்தைப் போன்றது. விளையாட்டு மைதானத்தின் நான்கு புறமும் உள்ள பார்வையாளர் அமரும் இடங்களைப் போன்று இந்த மாநிலத்தைச் சுற்றிலும் மலைப்பாங்கான பகுதி உள்ளது. மாநிலம் முழுவதும் 10 சதவீத நிலங்கள் மெய்தெய் சமூகத்தினர் வசம் உள்ளன.




மியான்மரின் எல்லையில் உள்ள மாநிலத்தில் மே 3 அன்று பழங்குடியினர் குழுக்கள் பழங்குடியினரல்லாத குழுவான, பெரும்பான்மை இனத்தவரான மெய்தெய் உடன், பொருளாதார நன்மைகள் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்படும் ஒதுக்கீடுகள் தொடர்பாக மோதலில் தொடங்கியது. வட கிழக்கு மாநிலமான மணிப்பூரில் பெரும்பான்மையாக வாழும் மெய்தெய் சமூகத்திற்கு பழங்குடியினர் அந்தஸ்து வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. இது தொடர்பாக பழங்குடியினரும், மெய்தெய் சமூகத்தினரும் ஊர்வலங்கள் மற்றும் பேரணிகள் நடத்தியது வன்முறையாக மாறியது.

# அரசியல்

ச.கோபாலகிருஷ்ணன்

இம்பால் பள்ளத்தாக்கில் மெய்தெய் சமூகத்தினர் பெரும்பாலான எண்ணிக்கையில் வசிக்கின்றனர். மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள 90 சதவிகித நிலங்கள் பழங்குடியினர் வசம் உள்ளன. மணிப்பூரில் 34 பழங்குடியினர் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் நாகா மற்றும் குகி சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

மாநிலத்தில் பெரும்பான்மையாக அதாவது 64 சதவீத மக்கள்தொகை கொண்ட மெய்தெய் சமூகம், பட்டியல் பழங்குடி அந்தஸ்து கோருகிறது. இந்தக் கோரிக்கை பல ஆண்டுகளாக எழுப்பப்பட்டு வந்த நிலையில், மெய்தெய் சமூகத்தினர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அதில் கடந்த மாதம் உயர்நீதிமன்றம் அளித்த புதிய தீர்ப்பால் இடஒதுக்கீடு விவகாரம் மீண்டும் விவாதத்துக்கு வந்தது.





மணிப்பூர் உயர் நீதிமன்றம், ஏப்ரல் 19 அன்று தனது உத்தரவில், பட்டியலிடப்பட்ட பழங்குடியினரில் உள்ள மெய்தெய் சமூகத்தைச் சேர்ந்த மக்களின் நிலையை நான்கு வாரங்களுக்குள் பரிசீலிக்குமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டது. மேலும், இதை பரிசீலிக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமாறும் மாநில அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதை எதிர்த்து தலைநகர் இம்பாலில் இருந்து 65 கிமீ தொலைவில் உள்ள சுராசந்த்பூர் மாவட்டத்தின் டோர்பாங்கில் கடந்த 3—ம் தேதி அனைத்து பழங்குடியின மாணவர் சங்கம் மணிப்பூர் பேரணிக்கு ஏற்பாடு செய்தது.

'ஆதிவாசி ஏக்தா மார்ச்' என்ற பெயரில் இந்த பேரணி நடத்தப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அதே நேரத்தில் வன்முறையும் தொடங்கியதாக கூறப்படுகிறது. சுராசந்த்பூர் மாவட்டத்தைத் தவிர, சேனாபதி, உக்ருல், காங்போக்பி, தமெங்லாங், சண்டேல் மற்றும் தெங்னௌபால் உள்ளிட்ட அனைத்து மலைப்பகுதிகளிலும் இத்தகைய கூட்டங்களும் அணிவகுப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. ஒரு மூத்த காவல்துறை அதிகாரியின் கூற்றுப்படி, டார்பந்தில் இதேபோன்ற அணிவகுப்பில் பல்லாயிரக்கணக்கான பழங்குடியினர் திரண்டபோது பழங்குடியினர் மற்றும் பழங்குடியினர் அல்லாதவர்களுக்கு இடையே மோதல் வெடித்தது. விஷ்னுபூர் மற்றும் சுராசந்த்பூர் மாவட்டங்களில் பெரும்பாலான வன்முறைகள் நிகழ்ந்துள்ளன, தலைநகர் இம்பாலில் அதற்கடுத்த நாள் வன்முறை வெடித்தது. பின்னர் வன்முறை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. வன்முறையால் பாதிக்கப்பட்ட கிராமப்புறங்களில் இருந்து இதுவரை 4000 பேர் பாதுகாப்பாக

வெளியேற்றப்பட்டுள்ளனர். நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர கொடி அணிவகுப்பும் நடத்தப்பட்டுள்ளது.

ராவத்தின் கூற்றுப்படி, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க அனைத்து சமூகங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மெய்தெய் சமூகத்திற்கும் மலைவாழ் பழங்குடியினருக்கும் இடையே உள்ள முரண்பாடு என்ன?




மணிப்பூர் மக்கள்தொகை 30 வட்சம் — 35 லட்சம். இதில் மெய்தெய் சமூகத்தினர் 64 சதவீதமாக உள்ளனர். இவர்கள் இம்பால் பகுதியில் வசிக்கின்றனர். மெய்தெய் சமூகத்தை ஒரு பட்டியிலின பழங்குடியாக அறிவிப்பதை எதிர்க்கும் பழங்குடியினரில் குகி என்ற ஒரு குழுவும் உள்ளது. இதில் பல பழங்குடியினர் அடங்குவர். மணிப்பூரின் முக்கிய மலைப்பகுதிகளில் வசிக்கும் குகி பழங்குடியினரின் மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 30 சதவீதம் ஆகும். எனவே, மெய்தெய் சமூகத்தினருக்கு இடஒதுக்கீடு வழங்கினால், அந்த சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் பலனடைவார்கள் என்பதால், அரசு வேலை, கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு கிடைக்காமல் போய்விடும் என மலைவாழ் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.மணிப்பூரில் நடந்த சமீபத்திய வன்முறை சம்பவங்கள், மாநிலத்தின் சமவெளிகளில் வாழும் மெய்தெய் குழுவிற்கும் மலைவாழ் பழங்குடியினருக்கும் இடையே பழைய வகுப்புவாத மோதலை மீண்டும் கிளப்பியுள்ளது.

1949 இல் மணிப்பூர் இந்தியாவுடன் இணைந்ததற்கு முன்பு, ஒரு பட்டியல் பழங்குடி என்ற அந்தஸ்து இருந்ததாகவும், இருப்பினும், இணைப்புக்குப் பிறகு அது முடிவுக்கு வந்ததாகவும் மெய்தெய் இனத்தினர் கூறுகின்றனர். மியான்மர் மற்றும் வங்கதேசத்தில் இருந்து பெரிய அளவிலான சட்டவிரோத குடியேற்றத்தால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மெய்தெய் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

மெய்தெய் சமூகத்திற்கு பழங்குடியின அந்தஸ்து வழங்குவதில் சர்ச்சை ஏன்?

நீதிமன்றம் மாநில அரசுக்கு ஒரு கருத்தை அளித்துள்ளது. ஏனெனில் மணிப்பூரில் மெய்தெய் சமூகத்தினர் நீண்ட காலமாக பழங்குடியினர் அந்தஸ்து கோரி வருகின்றனர்.இந்த கோரிக்கை மெய்தெய் குழுவை பிளவுபடுத்தியுள்ளது. மெய்தெய் மக்களில் ஒரு பகுதியினர் இக்கோரிக்கையை ஆதரிக்கின்றனர். சிலரிடம் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

முதல்வர் பிரேன் சிங் ஏன் விமர்சனத்திற்கு உள்ளானார்?

வன்முறைக்குப் பின்னால் வேறு காரணங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. மணிப்பூர் அரசாங்கத்தின் ஆதரவாளர்களின் கூற்றுப்படி, முதல்வர் பிரேன் சிங், அபின் சாகுபடியை முடிவுக்குக் கொண்டு வர முயற்சிப்பதாகவும், இந்த முயற்சி வெற்றி பெற்றால், அது பழங்குடியினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் மியான்மர் நாட்டிலிருந்து சட்டவிரோதமாக மணிப்பூருக்கு வந்து குடியேறுபவர்களுக்குத் தடை ஏற்படும் என்றும் இது தொடர்பான அச்சத்தின் காரணமாக அவரைப் பதவியில் இருந்து அகற்ற சதி நடப்பதாகவும் தெரிய வருகிறது.

மணிப்பூரை மீட்டெடுப்பதற்குச் சரியான வழி

கடந்த பல வாரங்களாக மணிப்பூர் எதிர்கொண்டிருக்கும் மானுடசோகத்துக்கும் சமூகக் கொந்தளிப்புக்கும் பிரிவினைவாத அரசியலே காரணம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால், இனவரைவியல் சொற்கள் சார்ந்து ஏற்பட்ட குழப்பம், வெவ்வேறு சமூகங்களின் தோற்றம் குறித்த தரவுகளின் போதாமை, அறிவியல்பூர்வமான மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இல்லாதது ஆகிய பிரச்சினைகளும் இந்த நெருக்கடிக்குப் பங்களித்துள்ளன.

மாநிலத்தில் முதன்மையாக மெய்தேய்கள், குகிகள், நாகாக்கள் ஆகியோர் வசிக்கின்றனர். இம்மூன்று பிரிவினரும் திபெத்திய—பர்மிய மொழிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள். ஆனால், இன்னும்




Emptying Plates & Empty Plates.........

உற்றுநோக்கினால் இம்பால் மாவட்டத்தின் துணைப் பிரிவான ஜிரிபம் பகுதியில், ஆஸ்த்ரோ — ஆசிய மொழிகளைப் பேசுவோரும் சந்தேல் மாவட்டத்தில் சர்வதேச எல்லையை ஒட்டி அமைந்துள்ள மோரே என்னும் ஊரில் திராவிட மொழிகளைப் பேசுவோரும் தலைநகர் இம்பாலில் முதன்மையாகவும் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் இந்தோ — ஆரிய மொழிகளைப் பேசுவோரும் வசிப்பதைக் காண முடியும்.

மணிப்பூருக்கு உள்ளேயே மக்கள் வாழும் பிராந்தியத்துக்கு ஏற்ப வெவ்வேறு வழக்குகளில் மணிப்புரி மொழி பேசப்படுகிறது. பேச்சுவழக்கில் உள்ள இந்த வேறுபாடு அனைவருக்கும் புரியும். மாநிலத்தின் அலுவல் சார்ந்த பரிமாற்றங்களில் வங்காள வரிவடிவம், மெய்தேய்—மயெக் வரிவடிவம்,ரோமானிய வரிவடிவம் ஆகிய மூன்று வரிவடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மெய்தேய் சமூகத்தினர் எழுதுவதற்கு வங்காள வரிவடிவத்தை ஏற்பதற்கு முன் மெய்தேய்—மயெக் வரிவடிவத்தைப் பயன்படுத்திவந்தனர்.

இன்று உள்ளூர் வரிவடிவமாகக் கருதப்படும் மெய்தேய்—மயெக் அலுவல்பூர்வமாக, அலுவல்பூர்வம் அல்லாத வகை என இரண்டிலும் அதிக முக்கியத்துவம் பெற்றுவருகிறது. சில மெய்தேய் சமூகங்கள் (மெய்தேய் என்பது ஒற்றைக் குழு அல்ல) ஏற்கெனவே பட்டியல் சாதி அல்லது இதர பிற்படுத்தப்பட்ட சாதிகளின் பட்டியலில் இடம்பெற்றுவிட்டன.இது தவிர, பண்பாடு சார்ந்த எழுத்துப் பிரதிகளில் குறிப்பாக, காலனி ஆதிக்கக் காலத்தில் ‘மராத்தா’வும் ‘மகாராஷ்டிர’மும் ஒன்றே என்று பொருள்படும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், மகாராஷ்டிரர்கள் அனைவரும் மராத்தாக்கள் அல்ல, மராத்தி பேசும் மக்கள் அனைவரும் மராத்தா சமூகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்ற புரிதல் அனைவருக்கும் உள்ளது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு: பெரும்பான்மைச் சமூகத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் அரசுக்கு உண்மையான அக்கறை இருந்திருந்தால் நீண்ட காலமாகக் கிடப்பில் கிடக்கும் நடவடிக்கையான — மாநில அளவிலான சமூகங்களின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பை — நடத்தியிருக்கும். ஒழுங்கான கணக்கெடுப்பு இல்லாத காரணத்தால் மணிப்பூர் மக்களின் கனவுகள், நம்பிக்கைகள், உணர்வுகள், மொழி மரபுகள், சமூக அடையாளங்கள் ஆகியவற்றை அரசியல்வாதிகள் தமது லாபத்துக்காகத் தவறாகப் பயன்படுத்திவருகிறார்கள்.

மணிப்பூர் நீண்ட காலமாகக் கடுமையான ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் நிலப்பகுதியாக இருந்துவந்துள்ளது. தீவிரமான சுதந்திர மனநிலையுடன் தமது பண்பாட்டு மரபுகளின் மீது பெருமிதம் கொண்ட இந்த மக்கள் மத்திய அரசின் விருப்பங்கள் தம்மீது திணிக்கப்படுவதற்கு எதிரான நீண்ட போராட்டங்களை நடத்தியுள்ளனர். அறிவியல்பூர்வமான மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, மணிப்பூரின் பல்வேறு இன— மொழிசார் சமூகங்களின் தேவைகளைச் சரியாக மதிப்பிடுவதற்கு வருங்கால மாநில அரசு நிர்வாகத்துக்கு உதவிகரமாக இருக்கும். இந்த நொடியில் மணிப்பூர் மிகப் பெரிய மானுடப் பேரிடரை எதிர்கொண்டுள்ளது. இனம், மொழி, மதம் எதுவென்றாலும், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இப்போது தேவைப்படுவது ஆறுதலும் அக்கறையும் கவனிப்பும்தான். ஆனால், நீண்ட கால நோக்கில் மணிப்பூரில் காவல், ராணுவக் கண்காணிப்பை அதிகரிக்க வேண்டியதில்லை.

முறையான சமூகவியல் புரிதலும், அனைவருக்குமான வளர்ச்சியை உறுதிசெய்வதே ஒவ்வொரு அரசுக்கும் அரசமைப்பு விதித்துள்ள கடமை என்பதைப் புரிந்துகொண்ட அரசும்தான் தேவை. மாறாக, பிரிவினை அரசியல் அந்த அழகான மாநிலத்தை மேலும் துன்பத்துக்கும் வேதனைக்கும் மோதல்களுக்கும்தான் இட்டுச் செல்லும்.




## 37. ஆளுகின்றான் அந்த ஆண்டவனே!

கொற்றவன்

இசைக் குழுவினர் பாடிய இறை வணக்கப் பாடலாக மலர்ந்த பாடலுக்கு அபிநயம் பிடித்து ஆடத் தொடங்கிய காஞ்சனாமாலா, மலரைப் போன்ற தன் மென்பட்டுப் பாதங்களால், அன்ன நடையிட்டு அலுங்காமல் குலுங்காமல் அரங்கை வலம் வந்தபடி ஆடினாலும், அவளது சலங்கையிலிருந்து எழுந்த ‘ஜல் ஜல்’ என்ற நாதம் கூட அப்பாடலுக்கு ஏற்ப ஒத்திசைவாய் பக்கவாத்தியம் வாசித்தது.

உலகத்து உயிர்கள் எல்லாம் ஆண்டவனை நினைத்து ஆடுவது போன்று அந்தப் பாடல் வரிகள் அமைந்திருந்ததால், அதற்கேற்றவாறு தனது அற்புத ஆட்டத்திலே விதவிதமான பாவங்களையும் முத்திரைகளையும் காட்டியவள், பறவைகளும் விலங்குகளும் பிற உயிரினங்களும் இறைவனை எப்படியெல்லாம் வணங்குகின்றன என்பதை நுட்பமாய் வெளிப்படுத்தினாள் காஞ்சனா மாலா.

குயில்கள் கூவும் இன்னிசையினூடே அவை எவ்விதம் தலைசாய்த்து உடல் அசைத்து இறைவனின் நாமகரணத்தை எழுப்புகின்றன என்பது போன்று ஆடினாள்.

அதையடுத்து, மயிலொன்று தன்னைப் படைத்த இறைவனுக்கு நன்றி நவிலும் விதமாய், பணிந்த நடையும், விரிந்த தோகையும், குனிந்த தலையுமாக பாவனையுடன் ஆடிய காஞ்சனமாலா காட்டிய கண்ணசைவும் செவ்விதழ் அசைவும் காண்பவரை ஈர்த்தன.

அடுத்ததாய், அன்னப்பறவை ஒன்று நீரிலே மல்லாந்து மிதந்து, தன் சிறகுகளை அளவாய் அசைத்தபடி நீந்தியவாறே அவ்வப்போது தன் சிறகுகளால் இறைவனை வணங்குவது போலவும் ஒரு ஆட்டத்தை ஆடிக் காட்டினாள்.

அன்னமாய் நீந்தியவள், சட்டெனத் தரையில் தவழ்ந்தாள். படம் விரித்த நாகம் ஒன்று மலர் கொய்து வந்து இறைவன் முன்வைத்து நடமிடும் காட்சியைப் போல அழகாக ஆடிக் காட்டினாள்.


முன்னமே அவளது உடல் அசைவும் வளைவு நெளிவுகளும் பார்ப்பவர்களுக்குப் பரவசத்தை ஏற்படுத்தியிருந்தாலும், அவள் நாகமாக மாறி நளினமாக ஆடியபோது, இவள் என்ன எலும்புகளே இல்லாத அதிசயப் படைப்பா எனப் பிரமித்துப் போனார்கள்.

மக்கள் அவ்வாறு சிந்தித்த வேளையில் நாகத்திலிருந்து உருமாறி, தூக்கிய துதிக்கையுடன் ஆனை ஒன்று ஆண்டவனை வழிபடுவது போன்று அபிநயம் பிடிக்கத் தொடங்கியவளைக் கண்டு அங்கிருந்தோர் ஆரவாரம் செய்தனர்.

அதற்கு காரணம் இல்லாமல் இல்லை! மென்மையான பாதங்களால் அரங்கம் அதிராவண்ணம் ஆடியவளின் நடையே இப்போது மாறிப் போயிருந்தது.

ஆனை ஒன்று அங்கே புகுந்து அரங்கம் அதிரும்

வண்ணம் நடையிடுவது போல் அங்கம் குலுங்க, அரங்கம் அதிர 'தொம் தொம்' என நடையிட்டவளைக் கண்டு கூட்டம் ஆர்ப்பரித்தது.



அசைந்து அசைந்து நடமிடும் ஆனையைப் போல் அரங்கை வலம் வந்தபடி துதிக்கையால் இறைவனை மாலையிட்டு வணங்குவது போன்று வணங்கியவள், இறைவனுக்குச் சூட சோலையொன்றில் மாலையொன்றைத் தேடுகையில், காற்றில் அசைந்தாடும் ஒரு கொடியினை தன் துதிக்கையால் வளைத்து இழுத்து தூக்கிச் சுழற்றுவது போல, அங்கிருந்த தோரணம் ஒன்றைத் தன் மலர்க் கரங்களால் இழுத்து சுழற்றத் தொடங்கினாள்.

தலைக்குமேலே சுழற்றியபடியே அந்தத் தோரணத்தின் இருமுனைகளையும் சட்டென முடிச்சிட்டு மாலையாக்கியவள், அரங்கின் நடுவே வந்து நின்று தலைக்குனிந்தவாறே முழந்தாளிட்டு மண்டியிட்டு அமர்ந்து ஆனை துதிக்கையில் சுழற்றுவது போல மாலையைச் சுழற்றினாள்.

பாடல் முடிவுக்கு வரும் வேளையில் மாலையை இறைவனுக்கு அவள் சூட்ட ஆயத்தமாவது அனைவருக்கும் தெரிந்தது.

தலையை ஒருமுறை நிமிர்த்தி வானத்தை நோக்கி வணங்கியவள், மீண்டும் குனிந்து மாலையை விர் விர்ரென சுழற்றி வான் நோக்கி வீசியெறிந்தாள்.

அடேயப்பா! இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு பலமா என ஆடவரே வியக்கும் வண்ணம் அம்மாலை உயரே உயரே எழும்பிப் போய்க் கொண்டிருந்தது.

மிக உயரம் சென்ற அம்மாலை தரை நோக்கித் திரும்புவதையே மொத்த கூட்டமும் ஆவலாய் கூர்ந்து நோக்க, அங்கே முன்வரிசையில் முண்டியடித்து வந்து காத்திருந்த இளைஞர் கூட்டமோ அம்மாலை தங்கள் பக்கம் விழுந்தால் தாவிப் பிடித்திடும் முனைப்பில் இருந்தது.

காஞ்சனமாலாவோ குனிந்த தலை நிமிராமல் ஆண்டவனை நோக்கி வணங்கும் ஆனை போல முழந்தாளிட்ட நிலையிலேயே வணங்கியபடி இருந்தாள்.

தரை நோக்கித் திரும்பிய மாலை எங்கே விழப் போகிறோதோ என எல்லாக் கண்களும் ஆவலாய் கவனித்துக் கொண்டிருக்க...


யாருமே எதிர்பாராவண்ணம் அம்மாலை ஏதோ மந்திரத்துக்குக் கட்டுப்பாட்டாற்போல காற்றில் சற்றே விலகிச் சென்று இளங்கோவின் தோள்களை வந்தடைந்தது.

அதைக் கண்டு மொத்தக் கூட்டமும் 'ஆகா!. ஓகோ!' என ஆரவாரம் செய்தது.

"இதென்ன விந்தை!" என்றார் புலவர் இளங்குமரனார்.

"இதுதான் இறை சித்தமோ என்னவோ?" என்றார் முதுபுலவர் குளமுற்றத்தார்.

"ஆம்! இது இறைவனின் சித்தம்தான்!" எனக் கம்பீரக் குரலில் மாமன்னர் கூறும்போதுதான் காஞ்சனமாலை நிமிர்ந்தாள்.



மாலை! அது மேலே சென்றபோதே இறைவன் ஏற்றுக் கொண்டுவிட்டான். இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டு பிறகு தரையிறங்கியபின் உன் தோளை அலங்கரிக்கிறதென்றால் அது இறைசித்தம் அன்றி வேறென்ன?" எனப் பேரரசர் கூறியதும், அவையோரும் ஆமோதித்து கரவொலி எழுப்பினர்.

"ஆம்! இப்போது நீ அந்த ஆண்டவனின் பிரதிநிதி! காஞ்சனமாலா உயர வீசிய மாலை, காற்றில் திசைமாறி வந்து உன் தோளில் விழுந்ததாக நான் நினைக்கவில்லை! ஏதோ மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டாற்போல அம்மாலை உன்னை நோக்கி வந்ததாகத்தான் உணர்கிறேன்! எனக்கென்னவோ உன்னைப் 'புலவர் இளங்கோ' என்பதை விடவும் 'அடிகளார் இளங்கோ' என்றுதான் எனக்கு அழைக்கத் தோன்றுகிறது." எனப் பேரரசர் கூறியதுதான் தாமதம்! கூடிருந்த கூட்டத்தினரிடையே 'ஆம்! ஆம்!' என்ற குரல் ஆங்காங்கே ஒலித்தது.

"கற்புக்கரசி கண்ணகியின் காப்பியம் வடிக்கும் இளங்கோ அடிகள் வாழ்க!" எனக் குளமுற்றத்தார் முழங்க, "வாழ்க!.. வாழ்க!.." என வாழ்த்தொலி எங்கும் எதிரொலித்தது.

இளங்கோவுக்கு என்ன பதில் கூறுவதென்று தெரியாமல் அமைதி காத்தார்.

என்ன நடந்தது என்பதை அறியாதவளாக மாமன்னரைப் பார்த்தவள், அவரது பார்வை எதிர்ப்புறம அமர்ந்திருந்த இளங்கோவின் மீது பதிந்ததைக் கண்டு அப்பக்கம் திரும்பியவள், மாலையுடன் அமர்ந்திருக்கும் இளங்கோவின் திருக்கோலத்தைக் கண்டு மலைத்தே போனாள்.

தான் வீசிய மாலை இவர் தோளை அலங்கரிக்கிறதே! எனும் வியப்பும் கூடவே நாணமும் கூடியவளாய் எழுந்தவள், அரசரையும் அவையோரையும் அரங்கில் கூடியிருந்தோரையும் வணங்கினாள்.

மக்கள் கூட்டம் கரவொலி எழுப்பி அரங்கை அதிரச் செய்தது.

காஞ்சனமாலா பின்னாலே சில அடிகள் நடந்து அரங்கின் திரையை விலக்கிக் கொண்டு உள்ளே சென்று மறைந்தாள்.

கூட்டத்தினரின் கரவொலி அடங்க வெகு நேரம் பிடித்தது.

இளங்கோ அந்த மாலையைக் கழற்ற முற்படும் வேளையில், செங்குட்டுவர் குரல் ஒலித்தது.

"வேண்டாம் இளங்கோ! அந்த மாலை காஞ் சனமாலா இறைவனை நோக்கி அர்ப்பணித்த

ஆர்ப்பரிப்பு அடங்கியதும், காசிநகர் கலைக் குழுவின் பெண்ணொருத்தி எழுந்து பணிவோடு வணங்கியபின் பேசத் தொடங்கினாள்.

இறைவணக்கப் பாடலைத் தொடர்ந்து, காதலின் மேன்மையை உணர்த்தும் ஒரு பாடலுக்கு நடனம் ஆடப்போவதையும், அது நுட்பமான நாட்டியச் சிறப்பினை வெளிப்படுத்தும் என்றும், இது நாட்டியப் பேரரசியான மாதவியின் நடனத்துக்கு இணையான நடனம் என முந்தைய தலைமுறையைச் சார்ந்த பெரியோர்கள் கூறக் கேட்டதையும் விளக்கியவள், இன்னும் சில நொடிகளில் காஞ்சனமாலா இங்கே தோன்றுவாள் என்றும் கூறி அமர்ந்தாள்.

அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்க, அவர்களை அதிகநேரம் காக்க வைக்காமல் பச்சைப் பட்டுடுத்திய பைங்கிளியாய் புதிய கோலத்தில் மீண்டும் அங்கே தோன்றினாள் காஞ்சனமாலா.

புதிய உடையில் அவள் வானத்து தேவதை போலத் தோன்றியதாக கூட்டத்தினர் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

மீண்டும் அவையினருக்கு வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்ட காஞ்சனமாலா,

கண்ணசைவைக் காட்ட, இசைக்குழுவினர் ஒரு இனிய ராகத்தை இசைக்கத் தொடங்கினர்.

யாழிசை போன்ற குரலில் பெண்ணொருத்தி பாட ஆரம்பித்தாள்.

ஒரு பெண்ணின் மனதில் மலரும் காதலையும், அது கனிந்து தரும் இன்பத்தையும், இடையிடையே நிகழும் ஊடலையும் விவரித்தபடி தொடர்ந்த அப்பாடலுக்கு காஞ்சனமாலா அபிநயம் பிடிக்கத் தொடங்கியதுமே, அதைக் கண்டவர்கள், தங்கள் மனதுக்குள் ஒளிந்திருக்கும் காதல் வெளிப்படத் தொடங்குவது போன்ற ஒரு பிரமையில் ஆழ்ந்தார்கள்.



காதலை உணரும் உள்ளங்களில் உண்டாகும் உற்சாகத்தையும், அதனால் உடலில் உண்டாகும் அதிசயமான மாறுதல்களையும் காஞ் சனமாலா அபிநயம் பிடிக்க, அந்த அபிநயம் தங்கள் உடலிலும் மாறுதல் செய்வதை உணர்ந்தார்கள்.



வார்த்தைகளால் விவரிக்க முடியாத உணர்ச்சிகளை, தனது அபிநயத்தில் காட்டிய காஞ்சனமாலாவின் நாட்டியத்தில் மொத்தக் கூட்டமும் கட்டுண்டு போனது.

இது உன்னதக் காதல் என்பதையும் தாண்டி இறைவனின் மீது கொண்ட காதலோ என்ற தோற்ற மயக்கத்தை அடைந்தனர் பலர்.

மானிடக் காதலைத் தாண்டி கடவுளை நினைக்கும் நிலைக்கு காஞ்சனமாலா செல்வதை முதலில் உணர்ந்தவர் இளங்கோதான்!

அவருக்குத்தான் அதனை அதிகம் உணர முடிந்தது. அனைத்தும் அந்த இறைவனின் அம்சம் என்று நம்பக்கூடிய இளங்கோ, முன்பு மாதவியும் அந்த நிலையைத்தான் எய்தியிருந்தாள் என்பதையும், இங்கே காஞ்சனமாலாவும் அதைத்தான் தனக்கு விளக்கிக் கொண்டிருக்கிறாள் என்பதையும் விளங்கிக் கொண்டார்.

இடையிடையே ஒருவரும் அறியாவண்ணம் அவள் தன்னைக் கண்களால் அளந்தபடியே நாட்டியத்தைத் தொடர்வதையும் அவர் அறியாமலில்லை!

காதலின் முழுமையான உணர்ச்சிகளையெல்லாம் தன் முகபாவத்திலும் விழியசைவுகளிலும் நாட்டிய முத்திரைகளிலும் காட்டியவளைக் கண்டு அந்த வஞ்சி மாளிகையில் கூடியிருந்த அத்துணைப் பேருமே அதிசயித்துப் போனதோடல்லாமல், காதலின் மேன்மையை உணராதவர்களும் கூட அன்றைக்கு உணரத் தொடங்கியிருந்தனர் என்பதுதான் அங்கே நிகழ்ந்த அதிசயம்!

அந்தப் பாடல் முடிவுக்கு வரும் வேளையில் காஞ் சனமாலா, பம்பரம் போல கரகரவென சுழன்றபடி இருந்தாள்.

அவள் சுற்றுவதைக் கண்டவர்களுக்கோ தாங்களும் சுழல்வது போலவே இருந்தது.

பாடல் முடிந்தது! ஆனால்...

பாவையவளோ சுற்றுவதை முடிக்கவில்லை!

அப்போது பின்னணியில் இருந்து ஒரு குரல் ஒலித்தது.



“இறைவனை நோக்கி கோள்கள் சுழல்வதைப்போல் சுழன்று கொண்டிருக்கும் எங்கள் காஞ்சனமாலா அடுத்து ஆடுவது ஒரு பக்திப் பாடலுக்கு... இந்தப் பாடல், தில்லையம்பதிக்கு நாங்கள் சென்றிருந்த காஞ்சனமாலாவின் உள்ளத்தில் பிறந்தது என்பது இப்பாடலின் சிறப்பு!”

ஒலித்த குரல் ஓய்ந்தது!

மீண்டும் முன்பு பாடிய அதே யாழிசையாளின் குரலில் ஒரு பாடல் ஒலிக்கத் தொடங்கியது.

“ஆளுகின்றான் அந்த ஆண்டவனே! தில்லை
அம்பலத் தாடிடும் தாண்டவனே!
ஆளுகின்றான் அந்த ஆண்டவனே! தில்லை
அம்பலத் தாடிடும் தாண்டவனே!

ஆதியு மாகி அந்தமு மாகி
திருமறை தேடிடும் அருமறை யாகி
ஆளுகின்றான் அந்த ஆண்டவனே! தில்லை
அம்பலத் தாடிடும் தாண்டவனே!

அப்பாடலின் பொருளுக்கேற்ப முகபாவத்திலும் முத்திரைகளிலும் அபிநயம் பிடித்த காஞ்சனமாலாவின் பாதங்கள் தாவியும் துள்ளியும் அம்மேடையில் தவழ்ந்தபோது எழுந்த சலங்கையொலி, அப்பாடலுக்கு ஏற்றாற்போல் இசைநயத்தைக் கூட்டியதோடு, அந்த சலங்கையோசை இல்லாவிடில் பாடலின் சுவை குன்றிடுமோ எனும் ஐயத்தையும் ஏற்படுத்தியது.

ஒலித்த பக்திமணம் கமழும் பாடலுக்கு காஞ்சனமாலா அபிநயம் காட்டியபோது, கூடியிருந்தோர் அனைவரும் தங்களை மெல்ல மெல்ல மறக்கத் தொடங்கினார்கள். தத்தமது இயல்பினை மறந்தார்கள்.

தாம் வஞ்சிக் கோட்டையில் இருக்கிறோம் என்பதையும், மாமன்னரும் அரசப் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள் என்பதையும் மக்கள் மறந்தனர்.

அவ்வளவு ஏன்? நேரம் கூடக்கூடத் தங்கள் முன்னால் அபிநயம் காட்டிக் கொண்டிருந்த காஞ்சனமாலாவைக்கூட அவர்கள் மறந்தே போயினர்!

ஆம்! அங்கே அத்துணை பேர் கண்களிலும் காஞ்சனமாலா மறைந்தாள்!

ஆடற்கலையின் ஆதிநாயகன் ஆனந்த நடராஜனே அங்கே தத்ரூபமாக தோன்றியதைக் கண்டார்கள்!

அதுமட்டுமா கண்டார்கள்? ஈசனின் திருக்கரத்தில் திரிசூலத்தையும், தோடுடைய செவியன் எனும் பெயருக்கேற்றாற்போல் காதிலே வெண் குழையையும், புலித்தோல் தரித்த அந்தப் பொன்னார் மேனியனின் பிறைநுதலில் துலங்கும் திருநீற்றையும், அதன்நடுவே ஒளிர்ந்த முக்கண்ணன் எனும் பெயருக்கேற்ற திருஞானக்கண்ணையும் கண்டார்கள்!

அந்தத் தெய்வீகக் காட்சியில் அரசர் முதல் ஆண்டி வரை அனைவருமே தங்களை மறந்து தில்லையம்பலத்தே ஆடும் தாண்டவனின் ஆட்டத்தில் இணைந்தார்கள்!

அப்போது காஞ்சனமாலா மீண்டும் அங்கே சுழலத் தொடங்கினாள்.

அவளது ஒவ்வொரு சுழற்சியிலும் மூன்று உருவங்களை அங்கே மாறி மாறிக் கண்டவர்கள் உணர்ச்சிப் பெருக்கில் அதிசயத்தின் உச்சிக்கே சென்றனர்.

முதல் சுழற்சியில் ஆனந்தத தாண்டவமிடும் ஈசனைக் கண்டார்கள்!

இரண்டாம் சுழற்சியில் ஆதிசக்தியான அன்னையைக் கண்டார்கள்!

மூன்றாம் சுழற்சியில் விரிசடையுடன் காஞ்சனமாலா சுழலக் கண்டார்கள்!

அங்கே அனைத்தும் சுழலத் தொடங்கியது!..

இதென்ன விந்தை? மக்கள் தங்களைச் சுற்றிலும் உள்ள மரம் செடி கொடிகள் சுழல்வதைக் கண்டார்கள்!

பின்னர் அந்த வஞ்சி மாளிகையே சுழல்வது போன்ற நிலையில், தலைச்சுற்றத் தொடங்கி பிரமிப்பில் ஆழ்ந்தனர்.

சிவனும் சக்தியும் காஞ்சனமாலா உருவுடன் இணைந்து மாறி மாறித் தோன்றி சுழலக் கண்டதில் பூவுலகமே சுழல்வது போன்ற மாய மந்திரத்தில் திளைத்தபடி அண்ட சராசரமே சுழலத் தொடங்கியது!

ஒலித்த அந்தப் பாடலோ பிரபஞ்ச வெளியில் ஒலிப்பதுபோல் இருந்தது.

"ஆளுகின்றான் அந்த ஆண்டவனே! தில்லை
அம்பலத் தாடிடும் தாண்டவனே!
ஆளுகின்றான் அந்த ஆண்டவனே! தில்லை
அம்பலத் தாடிடும் தாண்டவனே!.."

நேரம் கூடக்கூட ஆட்டத்தின் வேகமும் சுழற்சியும் கூடிக் கூடி அனைத்துமே சுழலுக்குள் சிக்கியது!...

எங்கும் சுழல்!... எதிலும் சுழல்!...

எல்லாம் சுழல்!.. எம்பெருமான் சுழல்!.. அங்கே எவருமே சுயநிலையில் இல்லை!



அனைத்தையும் கடந்தவொரு மோனநிலை! அந்த ஆட்டமும் பாட்டும் எவ்வளவு நேரம் நீண்டது என்பது யாருக்கும் நினைவில்லை!



ஒருவழியாக அந்த அதிசய ஆட்டமும் பாட்டும் ஓய்ந்தபோதுதான் அனைவரும் தங்கள் சுயநிலைக்குத்திரும்பத் தொடங்கினர்.

மெல்ல மெல்ல நிகழ்வுலகிற்கு வரத் தொடங்கினார்!

(கனவு தொடரும்...)

# உயரப்பறக்கும் ஊர்க்குருவி

ஒவ்வொரு முறையும் பறக்கும்
சிறகுடைந்து
மனதோடு இறகும் சருகென
விழத்தான் செய்கிறது
யாருடனும் கலந்துரையாடவோ
கலந்துகொள்ளவோ மனம்
ஒப்புவதில்லை
யாருடைய புன்னகையும்
தனது அழுகையைத்தாண்டி
ஒன்றும் சொல்லிவிடப் போவதில்லை

நகர்ந்துகொண்டே இருக்கும்
காலத்தின் நகர்வில்
ஆணியடித்த ஆற்றின்
வளைவு நெளிவுகளாய்
நகராமலே வட்டமிடுகிறது
நாளைய கனவுகளும்
நேற்றைய இழப்புகளும்

தூண்டிலை வீசியவனுக்கு கூட
விறகோ காலிப்பைகளோ
கரைவந்து சேரும்
கற்ற பிறகும் கைக்கட்டி நிற்பதும்
காரணமில்லாமல்
கரங்களில் வியர்ப்பதுமாகத்தான்
ஒழுகலாகிறது நாட்கள்
கழுத்துப்பட்டனை
அவிழ்த்து விட்டு நடந்தாலும்
ஒருபோதும் கழுத்தை
நெறித்துவிடவில்லை
அமைதியாக என்னைப்பார்த்திடும்
எனது பிம்பம்...

**சே கார்கவி கார்த்திக்**

## மாயம்

மனச் சங்கு ஊதியது
மத்தளமும் கொட்டியது
ஏனோ அன்று மட்டும்
வரும் போது
ஓரடுக்காய்த்
தோன்றிய மேகங்கள்
பற்பல வானங்களாய்ப்
பரந்ததை எண்ணிக் கொண்டேன்.
இதென்ன மாயம்
நான் வாழ்த்துமிடத்திலும்
அவள் பெறுமிடத்திலும்.

**பூர்ணிமா**

# கோடைத் தெருக்களில்

வெயிலிற்கு பழக்கப்பட்ட
அலுமினிய குண்டான்களில்
பனங்கீற்று கூப்புகளுக்குள்
பிய்த்த நுங்குகள்

பறித்து நிரப்பி வைக்கப்பட்ட
தலையில்லாத இளநீர்கள்

நீரற்றக் கண்ணாடித்
தொட்டிகளுக்குள்
நீந்திடாத பலாசுளைகள்

இன்னும் மெழுகு பூசை
நடைபெறாத
மாம்பழங்களும்
கோடை ஆரஞ்சும்

முழுதாகவோ
சட்டையுரித்த
துண்டங்களாகவோ
கோசாப் பழங்கள்

உட்புகுத்தப்பட்ட
மலர் ஒப்பனைகள்
அணிந்த முலாம் பழங்கள்

பழக்கப்படுத்திய
மண் பானைகளில்
கம்பு கேழ்வரகு கஞ்சியுடன்
நீர்மோரும் மிளகாய் வற்றலும்

இவ்வளவுக்கு மத்தியிலும்
மிதிவண்டியின் வேகத்தில்
விரைகிறான் சிறுவன் ஒருவன்
குளிரூட்டப்பட்டு நெகிழிகளில்
அடைபட்ட குச்சி ஐசையும்
சோடாக்களையும் வாங்க!!!

**அனிதா கோகுலகிருஷ்ணன்**

# முதல் தனிமை

ஏதுமற்ற நாட்களில் வந்துவிடுகிறது
எல்லாமிருப்பதைப் போல்
ஒரு நாள்.

இறந்தகாலம் என்கிறார்கள்
வாழ்ந்த காலத்தை.

பூச்சரத்தின்
அடுத்தடுத்து முடிச்சுகளில்
பூக்களை
வரிசைப்படுத்தி
தூக்கிலிடுகிறேன்
அதன் செடிகளுக்கு
நீரூற்றுகிறேன்
பூக்களுக்கு அது
இரக்கமற்ற கொலை
நான் செய்வதோ
கருணையற்ற அன்பு

**இந்திரலேகா**

## ‘தங்கலானை’ நிறைவு செய்த பார்வதி!



## தடங்கலாகாமல் வந்தால் சரி!

பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடித்துவரும் ‘தங்கலான்’ படத்தின் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. பசுபதி, பார்வதி, மாளவிகா மோகனன் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்து வருகின்றனர். ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். கோலார் தங்கச் சுரங்கத்தில் தமிழர்கள் பட்ட துயரத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் ‘தங்கலான்’ ஏற்கெனவே தடங்கல் பலவற்றை சந்தித்து வந்த நிலையில், தற்போது நடிகை பார்வதிக்கான காட்சிகள் எடுத்து முடிக்கப்பட்டுள்ளதை அவர் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டு வருகிறார்.

## அடுத்த பரபரப்பில் ஆண்டனி!



## வள்ளி மயில் துள்ளி வரட்டும்!

விஜய் ஆண்டனி எழுதி, இயக்கி, இசையமைத்து நடித்த ‘பிச்சைக்காரன் 2’ தெலுங்கு மொழிமாற்றுப் படத்துக்கு, ஆந்திராவில் நல்ல வரவேற்பு ! இந்த உற்சாகத்தில், சுசீந்திரன் இயக்கத்தில் ‘வள்ளி மயில்’ படத்தின் இறுதிக்கட்டப் படப்பிடிப்பில் நடிக்கிறார் விஜய் ஆண்டனி. இப்படத்தில் அவருக்கு ஜோடியாக ஃபரியா அப்துல்லா நடிக்கிறார். பாரதிராஜா, சத்யராஜ், சுனில் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். படத்துக்கு இசை டி. இமான். கிராமியத் தெருக்கூத்து நாடகக் குழு ஒன்றின் பின்னணியில் பழிவாங்கும் கதையாக உருவாகி வருகிறது ‘வள்ளி மயில்’.

# அப்டேட் தரும் அப்சரஸ்!



## ராஷ்க்கு எப்போதும் ரஷ்தான்!

அர்ஜுன் ரெட்டி தெலுங்கு படத்தை இயக்கியவர் சந்தீப் வங்கா. அதே படத்தை இந்தியில் கபீர் சிங் என்ற பெயரில் இயக்கினார் . இப்போது ‘அனிமல்’ படத்தை ரன்பீர் கபூர், பாபி தியோல், ராஷ்மிகா நடிப்பில் இயக்கியுள்ளார். படம் பான் இந்தியா முறையில் ஆகஸ்ட் மாதம் 11ம் தேதி வெளியாகவுள்ளது. இதில் தனக்கான படப்பிடிப்பு நிறைவடைந்ததை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், ‘அனிமல்’ பட ஷூட்டிங் முடித்து ஐதராபாத் திரும்பவிட்டேன். ‘புஷ்பா 2’ தொடங்கிவிட்டேன். இப்படப்பிடிப்பை மறக்க முடியாத அனுபவமாக மாற்றிய படக்குழுவுக்கு நன்றிகள்’ என ராஷ்மிகா பதிவிட்டுள்ளார்.

## தெலுங்கு பேசவிருக்கும் சூர்யா!

## மசாலா நெடி அடிக்காமல் இருக்குமா?

நடிகர் சூர்யா தெலுங்கு இயக்குநர் இயக்கத்தில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தற்போது சிவா இயக்கத்தில் ‘கங்குவா’ படத்தில் நடித்து வரும் சூர்யா, அடுத்து சுதா கொங்கரா இயக்கத்திலும், ஹிந்தி படம் ஒன்றிலும் நடிக்கிறார். கடந்த 2021ம் ஆண்டில் இருந்தே தெலுங்கு சினிமாவின் மசாலா இயக்குனர் போயபதி ஸ்ரீனு இயக்கத்தில் சூர்யா நடிக்கவுள்ளதாக தகவல் பரவிய நிலையில், விரைவில் போயபதி ஸ்ரீனு சூர்யா வைத்து புதிய படம் இயக்கவிருக்கிறார் இப்படத்தை கீதா ஆர்ட்ஸ் தயாரிக்கிறது.

# தல வலம்

## திருவட்டத்துறை

புலனகிரி செயபாலன்

திருநெல்வாயில் அரத்துறை

நீலமாமணி மிடற்று நீறணி சிவனெனப் பேணும்

சில மாந்தர்கட் கல்லார் சென்றுகை கூடுவதென்றால்

கோலமா மலரருந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்

அழுந்துஞ் சோலை நெல்வாயிலாந் துறையடிகள் தம்மருளே' திருஞான சம்பந்தரின் பதிகம்.



தேவாரப் பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 212வது தலமாகும்! மூர்த்தி, தலம், தீர்த்தம் முன்றாலும் சிறப்பு வாய்ந்த தேவாரப் பாடல் பெற்ற நடுநாட்டுத் தலங்கள் 22ல் முதன்மையானது!

அப்பர், சுந்தர், சம்பந்தர் என மூவராலும் பதிகங்கள் பாடப்பெற்ற சிவஸ்தலம் 44ல் இதுவும் ஒன்று!

இத்தலம் மகாபாரத இதிகாச காலத்துக்கும், புராண வரலாற்று காலத்துக்கும் முற்பட்ட தொன்மை மிக்க திருத்தலம். 'காசியிலும் வீசம் பெரியது விருத்தகாசி என்னும் விருத்தாசலம் என்பது பழமொழி.

காசியை (வாரணாசி) பால காசி எனவும் விருத்தாசலத்தை விரிந்த காசி என்றும் கூறுவர். இவை இரண்டும் முக்தி தலம் என்பது ஐதீகம்! இவை இரண்டையும் விட முக்தி தரும் திருத்தலங்களில் முதன்மையானது

திருநெல்வாயில் அரத்துறை என்று தலபுராணம் கூறுகிறது.

திருவட்டத்துறை

நீவா நதி என்று அழைக்கப்படும் வட வெள்ளாற்றங்கரையில் அமைந்துள்ளது திருநெல்வாயில் அரத்துறை என்னும் திருநெல்வாயில் அரத்துறை. ஆற்றங்கரையோரம் அமைந்து தலம் என்பதாலும், அரம் என்னும் நாகம் வழிபட்டதாலும், அரத்துறை என்று வழங்கப்படுகிறது.

இறைவன் இறைவி.

ஈசன் அரத்துறை நாதர் என்னும் தீர்த்த ஈஸ்வரர் சுயம்பு மூர்த்தியாக உள்ளார். அம்பாள் ஆனந்தநாயகி என்னும் திரிபுரசுந்தரி.

தல விருட்சம் ஆலமரம், தீர்த்தம் அன்னமலர், பொய்கை ஆக்கிரமிப்பில் உள்ளது. நீலமலைத் பொய்கை நீவா நதி என்னும் வெள்ளாறு.

புராணம்

வெள்ளாற்றின் தென்கரையில் திரு ஆதிசக்திதுறை திருஆலந்துறை, திருவாடுதுறை, திருமாந்துறை, திருக்கரந்தைத்துறை என 5 திருத்தலங்களும் திருவட்டத்துறை, திருநெல்வேலி வாயில் அரத்துறை, திருவட்டத்துறை என இரு தலங்களும் 7 துறைத்தலங்கள் என்கிறது தலபுராணம். இவற்றில் முதன்மையானது திருநெல்வாயில் அரத்துறை.

மக்களின் பாவங்களை நீக்க இறைவன் இங்கு எழுந்தருளி அருள்பாலிப்பதாக கூறப்படுகிறது. இந்த பூமி, நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனும் ஐந்து பூதங்களால் ஆனது, இதை ஐந்து தலைகள் கொண்ட ஆதிசேஷன் தாங்கி நிற்கின்றது என்கிறது புராணம்.

ஒருசமயம் ஆதிசேஷனுக்கும் வாயு பகவானுக்கும் யார் பலசாலி எனக் கடும் போட்டி ஏற்பட்டது. ஆதிசேஷன் தன் பலத்தை நிரூபித்திட மேருமலை உச்சியினை தனது ஐந்து தலை கொண்டு மூடிவிட்டு, வாயு பகவானிடம் 'என்னால் மூடிய மேருமலையை உன் வலிமையால் முன்போல் போல் இருக்கச் செய்து உன் வீரத்தினை காட்டு!' என சவால் விட்டது. வாயு பகவான் எவ்வளவு முயன்றும் ஆதிசேஷன் 5 தலைகளின் ஒன்றைக் கூட சிறிதும் நகர்த்த முடியவில்லை!

இந்த சூழ்நிலையில் நாரதர் அங்கு வந்தார். நிலைமை உணர்ந்து இருவரின் போட்டியை தடுத்து நிறுத்தும் விதத்தில், தனது நாரத கானத்தை காற்றில் பரவ விட்டார். நாரதரின் இன்னிசையைக் கேட்ட ஆதிசேஷன் மயங்கி மேருமலையை போர்த்தியிருந்த தனது ஐந்து தலைகளும் மேலே உயர்ந்தி களிநடனம் புரியத் தொடங்கியது.

இந்த சந்தர்ப்பத்தில் வாயு பகவான் தன் முழு பலத்தையும் பிரயோகித்து மேருமலையின் மூன்று சிகரங்களைப் பெயர்த்து கீழே உருட்டி விட்டது. இதனால் அவமானமும் ஆத்திரமும் அடைந்த ஆதிசேஷன் வாயு பகவான் பலத்தை அடக்கிட சபதம் எடுத்து அதற்காக வெள்ளாற்றில் வடகரை மீது இருந்த இத்தல ஈசனை எண்ணி கடும் தவம் மேற்கொண்டது.



ஆதிசேஷன் தவதை அறிந்த ஈசன் இத்தலத்தில் எழுந்தருளி காட்சி கொடுத்தார்.

‘தங்களது ஐந்து சக்திகளையும் உள்ளடக்கிய பேருருவை காட்டி அருள் புரிய வேண்டும்!’ என ஆதிசேஷன் வேண்ட, ஈசன் தன் பேருருவைக் காட்டி அருளினார். ‘வாயு பகவானை நான் வழங்கிட அருள் புரிய வேண்டும்’ என வேண்ட, ஐம்பூதங்களில் வாயு பகவானும் ஒருவர்! அதனால் அதுபோன்ற வரத்தை அளிக்க இயலாது. இருந்தாலும் நீ கேட்டுக்கொண்டபடி ராகு கேதுவாகிய உன்னால் வாயு பகவான் (காற்று) ஓரளவாவது துன்பப் படவும் சில நேரம் இயங்காமல் இருக்கும்படி செய்வதாக சொல்லி அருள் புரிந்தார். அதன்படி சூரிய சந்திர கிரகண காலங்களில் வாயு சூழ்ந்த பூமிக்கு இத்தகைய கேடு நிகழ்வதாகவும் சிலநேரம் காற்று இயக்கமற்றதாகவும் இருப்பதாக புராணம் கூறுகிறது.



‘இவ்வுலகில் வாழ்கிற மானிடர் வாயுவை உண்ணும் (காற்றை சுவாசிக்க) வகையினை அறிந்து யோக சக்தி உடையவராக வாழ்வதற்கு அடையாளமாக இத்தலம் அரவத்துறை என உனது பெயரில் என்றும் விளங்கிடும்!’ என ஈசன் அருள் புரிந்தார். அதனால் திருநெல்வாயில் என்னும் பெயருடன் அரத்துறை என்னும் பெயரும் இணைந்து திருநெல்வாயிற் அரத்துறை ஆனது

திருநெல்வாயில் அரத்துறையில் திருநெல்வாயில் என்பது நெய்வாசல் என்றும் திருவரத்துறை என்பது திருவட்டத்துரை என்றானது. இரண்டு ஊர்களும் ஒரே நேர்கோட்டின் கிழக்கே திருவட்டத்துறையும், மேற்கில் நெய்வாசலும் அமைந்துள்ளன. இருஊர்களுக்கு இடைப்பட்ட தூரம் ஒரு கி.மீ. தூரம். சிற்றாறு மற்றும் வெள்ளாறு என இரு ஆறுகளும் சங்கமிப்பது கூட்டாற்று மூலை. இரண்டு ஊர்களும் சேர்ந்து பேரூராக இருந்திருக்க வேண்டும். இயற்கை சீற்றத்தால் சிதைந்து திருவட்டத்துறை மற்றும் நெய்வாசல் என இருபகுதிகளாக பிற்காலத்தில் மாறியிருக்க வாய்ப்புண்டு! என்று தல வரலாற்று நூலில் நெய்வாசலில் பிறந்த டாக்டர் மு.வள்ளுவன் பதிவு செய்துள்ளார்.

திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் சீர்காழியில் உமையம்மை கையால் ஞானப்பால் உண்டு பதிகம் பாடும் அருளைப் பெற்றவர். இவர் சைவ சமயத்தைச் சிறப்பிக்க சிவபெருமான் குடிகொண்டிருக்கும் தலங்களுக்கு எல்லாம் திருப்பாத யாத்திரையைத் தொடங்கினார். சம்பந்தர் பாலகனாக இருந்ததால், அவரது தந்தை அவரைத் தூக்கிக் கொண்டு செல்வது வழக்கம்!

ஒருசமயம் திருத்தூங்கானை மாடம் ஈசனை தரிசித்து விட்டு திருநெல்வாயில் அரத்துறைக்கு செல்ல தந்தை தோள் மீது எழுந்தருளி செல்வதைத் தவிர்த்து நடந்தே செல்ல ஆரம்பித்தார். அவரது சிற்றடிகள் நோக நடந்ததைக் கண்ட பலரும் பதைத்து வருந்தினர். அரத்துறை செல்லும் வழியில் மாறன்பாடி என்ற இடத்தில் தன் அடியார்களுடன் இரவு தங்கினார்.

அன்று இரவு திருநெல்வாயிலில் உள்ள அடியார் மற்றும் கோயில் பணியாளர்கள் கனவில் ஈசன் தோன்றி, சம்பந்தர் கால்கள் நோகாமல் இருக்க, தான் முத்து சிவிகை முத்துக்குடை முத்துச் சின்னங்களை அளிப்பதாகவும் அவற்றைக் கொண்டு போய் சம்மந்தரிடம் சேர்த்து அவரை அதில் அமரச் செய்து ஆலயத்திற்கு அழைத்து வரவேண்டும் என ஆணையிட்டார்.

சம்பந்தர் கனவிலும் தோன்றி விவரங்களை கூறி முத்து சிவிக்கையில் ஏறி தன்னை தரிசிக்க வரும்படி ஆணையிட்டார். மறுநாள் காலை திருநெல்வாயில் அரத்துறை அடியார்களும் கோயில் பணியாளர்களும் கோயிலைத் திறந்து பார்க்க, அங்கு முத்து சிவிக்கை, முத்துக்குடை, முத்து சின்னங்கள் இருக்க கண்டனர். ஈசனை வணங்கி அவற்றை எடுத்துக்கொண்டு மாறன்பாடிக்கு சென்று சம்பந்தரிடம் சொல்லி அவரை முத்து சிவிக்கையில் எழுந்தருளச் செய்து முத்துக்குடை நிழலில் அமரச்செய்து, ஆலயத்துக்கு



மேளதாளங்களுடன் அழைத்து வந்தனர். சம்பந்தரும் ஆலயம் வலம் வந்து ஈசனை சேவித்து அவரைப் பற்றிப் பதிகங்கள் பாடினார்.

வெள்ளாற்றுக்கு வசிஷ்ட நதி, ஸ்வேத நதி என்ற வேறு பெயர்கள் உண்டு. கல்வெட்டுகளில் நீவாநதி, பருவாரு, உத்தமசோழப் பேராறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வெள்ளாற்றின் தென் வடகரைகளில் அமைந்துள்ள ஏழு துறைகளில் ஆதித்துறையில் இந்திரனும், திருவாலந்துறையில் மாண்டவியரும், ஆடுதுறையில் மிருகண்டு முனிவரும், திருமாந்துறையில் ராகுவும், திருகரத்துரையில் அகத்தியரும், திருவசிஷ்ட துறையில் வசிஷ்டரும், திருவட்டத்துறையில் வால்மீகி முனிவரும் தவம் செய்து இறைவனை வழிபட்டு பேறு பெற்றனர்.

மேலும் திட்டக்குடியில் ஓடிய வெள்ளாற்றை திருஞானசம்பந்தர் திருவட்டத்துறை நோக்கி 'நீ வா' என்று அழைக்க, திட்டக்குடியிலிருந்து இத்தல அருகில் வந்ததாக தல வரலாறு கூறுகிறது.

கோயில்

வெள்ளாற்று கரையோரம் ஐந்து நிலை ராஜகோபுரம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. எதிரே தலவிருட்சம். ராஜகோபுரத்தை கடந்து உள்ளே சென்றால் வெளிப்பிரகாரத்தில் சமயக் குரவர்கள், வால்மீகி முனிவர், சப்த மாதர்கள், லிங்கத் திருமேனிகள், மகாவிஷ்ணு, ஜோதிலிங்கம் உள்ளிட்ட சந்ததிகள் உள்ளன, இதையடுத்து அண்ணாமலையார், ஆதிசேஷன், வள்ளி, தெய்வானையுடன் முருகன், தண்டாயுதபாணி சுவாமி, சரஸ்வதி, சேர சோழ பாண்டிய லிங்கங்கள் உள்ளன. காசி விசுவநாதர். விசாலாட்சி. கஜலட்சுமி. சந்தானக் குரவர்கள், பைரவர், சூரியன், சந்திரன் சன்னதிகள் உள்ளன.

ஈசன் சுயம்பு மூர்த்தியாக கிழக்கு முகமாய் வட்ட வடிவில் ஆவுடையாரில் காட்சி தருகிறார். அன்னை அரத்துறை நாயகி, மேல் இரு கரங்களில் பாசம், அங்குசம் தாங்கியும், கீழ் இரு கரங்களில் அபய வரத முத்திரை தாங்கியும், காட்சியளிக்கிறார். கோஷ்டத்தில் விநாயகர், பிக்சாடனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பைரவர், நடராஜர், சிவகாமி, துர்க்கை, அர்த்தனாரிஸ்வரர், சண்டிகேஸ்வரர் உள்ளனர். உள் சுற்றின் இடதுபுறம் நவக்கிரக சந்நிதி. சனி பகவானுக்கு தனி சந்நிதி. ஈசனுக்கும் அம்பாளுக்கும் தனித்தனி கொடிமரமும் பலிபீடமும் நந்தியும் உள்ளன.

இக்கோயிலுக்கு தெற்கில் வெள்ளாறு பிரளய காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்தபோது அதனால் சேதம் உண்டாகாமல் இருக்க ஈசனின் ஆணைப்படி நந்தி தன் தலையைத் திரும்பிப் பார்க்க, வெள்ளத்தின் வேகம் கட்டுப்பட்டதாகவும், இதனால் இங்கு உள்ள நந்தி ஆற்றின் திசை நோக்கி திரும்பி பார்க்கும் விதமாக அமைந்துள்ளது.

இத்தல ஈசனை திருஞானசம்பந்தர் 11 பதிகங்களும், அப்பர் பத்தும், சுந்தர பத்தும் பாடியுள்ளனர். ஆதிசங்கரர், குகை நமச்சிவாயர் போற்றி பாடியுள்ளனர். இது தவிர சேக்கிழார் பெரிய புராணத்திலும், வள்ளலாரின் திருவருட்பாவிலும், இத்தலம் குறித்த பாடல்கள் இடம்பெற்றுள்ளனர். அருணகிரி நாதர் இத்தல முருகனைப் பற்றி திருப்புகழில் பாடியுள்ளார். இத்தல முருகன் ஒருமுகம் நான்கு கரங்களுடன் இரு தேவியுடனும் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி காட்சி அளிக்கிறார்.

ஒருமுறை சந்திரனும் செவ்வாயும் சூரிய சந்திரர்கள் சபிக்கப்பட்டதன் காரணமாக, செவ்வாய்க்கு எலும்புருக்கி நோயும், சனி பெரு நோய்க்கும் ஆளாயினர். இருவரும் பிரம்மாவிடம்





சென்று சாப விமோசனம் கிடைக்க வழி கூறும்படி வழி கேட்டனர். அவர் அறிவுரைப்படி இருவரும் பூலோகம் வந்து பல சிவத்தலங்களில் வழிபட்டனர். இறுதியில் இத்தலம் வந்து கடும் தவம் புரிந்து ஈசனை வழிபட்டு தங்களின் தோஷமும் சாபமும் நீங்கப் பெற்றனர்.

செவ்வாய் தோஷம், சனி தோஷம் உள்ளவர்கள் இத்தலத் தீர்த்தங்களில் நீராடி ஈசனை வழிபட்டால், அனைத்து தோஷங்களும் விலகி நற்பலனைப் பெறுவர் என்பது ஐதீகம்! இத்தலத்தில் தேவர்களும், முனிவர்களும், தேவியர்களும், மன்னர்களும், அடியார்களும் ஈசனை வணங்கி பாவ விமோசனம் பெற்றுள்ளனர்.

இத்தல விருட்சம் ஆலமரம், மகம் நட்சத்திரத்திற்கு உரியது. எனவே மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இத்தல ஈசனை வழிபட்டால் தீமைகள் நீங்கி பல நற்பலன்கள் கிடைக்கும் என்பது நம்பிக்கை! இங்கு உள்ள கற்பகிரகத்திற்கு இடதுபுறம் மகம் வாசல் என்ற வாசல் உள்ளது.

கணவனை இழந்த பெண்கள் ஒரு வருடம் ஆன பின்பு அருகில் உள்ள ஆற்றில் குளித்துவிட்டு, மகம் வாசல் வழியே வந்து சுவாமியை தரிசனம் செய்த பிறகு, அந்த வாசல் வழியே திரும்பிச் செல்வது வழக்கமாக உள்ளது. இப்படிச் செய்தால் இறந்த கணவர் நற்கதி பெறுவார் என்பது நம்பிக்கை!

கல்வெட்டுகள்

இந்திய தொல்லியல்துறை ஆய்வு அறிக்கைப்படி 22 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. கல்வெட்டுகள் கர்ப்பகிரக சுவர்களின் வெளிப்புறங்களில் காணப்படுகின்றன. பெரும்பாலானவை கிரந்தம், சமஸ்கிருதம் எழுத்துக்களாலானவை.

முதலாம் ராஜராஜன், வீரராஜேந்திர தேவன், முதலாம் குலத்துங்கன், விக்ரமசோழ தேவன், இரண்டாம் ராஜாதிராஜன், மூன்றாம் குலத்துங்கன், மூன்றாம் ராஜராஜன், ராஜகேசரி வர்மன் ஆகிய மன்னர்கள் பற்றி கல்வெட்டுகளில் உள்ளன.

'இத்தலத்துக்கு மிருத ராஜ பயங்கர வளநாட்டு மேற்கால நாட்டு முடிகொண்ட கொண்ட சோழ சதுர்வேதி மங்கலம்' எனக் கல்வெட்டில் உள்ளது. நிலக்கொடை, பசு தானம், பொற்காசு வழங்கியது போன்ற பல்வேறு விதமான கொடைகள், பக்தர்கள் சிவ பிராமணர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் பூஜைகள் நடத்தப்பட்ட விவரம் போன்றவைகள் கல்வெட்டில் உள்ளன.

திருவிழாக்கள்

மார்கழி தனுர் யாத உற்சவம், ஐப்பசி கடைமுழுக்கு தீர்த்தவாரி, சூரசம்ஹாரம், அடுத்த நாள் சுப்பிரமணியர் திருக்கல்யாணம், ஆடி ஆடிப்பூரம், மாசி மாசி மகம், மகா சிவராத்திரி, கார்த்திகை கார்த்திகை தீபம், இதைத் தவிர மாதந்தோறும் பிரதோஷ வழிபாடு, சனிப் பெயர்ச்சி, குரு பெயர்ச்சி சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது.

மன்னர்கள் காலத்தில் இருந்து கும்பாபிஷேகம் நடந்து வருகிறது. ஜய வருடம் பங்குனி மாதம் 25ம் தேதி (07.041955) நடைபெற்றது. அதன் பின் 24.03.2011ல் நடைபெற்றது. அடுத்த ஆண்டு கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இத்தலத்து ஈசன் கும்ப ராசிக்காரர்களுக்கு பரிகார வழிபாட்டு தலம். இங்குள்ள ஈசனை வழிபட்டால் முத்தி பேறு அளித்திடும். பிதுர்கடன் செலுத்திட பெருமைகள் தரும். சரஸ்வதி தேவி சன்னதியில் வித்யாரம்பம் ஆரம்பித்தால் மேன்மை உண்டாகும்.

இத்தலத்தில் பிறந்தாலும் இறந்தாலும், இத்தலத்தை தரிசித்தாலும், திருநாமத்தை நினைத்தாலும், சொன்னாலும், தலப் பெயரைப் பிறர் சொல்வதைக் கேட்டாலும் பிறவித்துயர் நீங்கும்! மறுபிறவி இல்லை என்கிறது தலபுராணம்!

தினமும் ஆகமமுறைப்படியும், வைகாசன முறைப்படியும், இருவேளை பூஜைகள் நடத்தப்படுகிறது. கோயில் திறக்கும் நேரம் தினமும் காலை 7 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்

விருத்தாசலம், பெண்ணாடம், திட்டக்குடி சாலையில் கொடிக்களம் ஊருக்கு தென்கிழக்கு ஒரு கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)




# திருமந்திரம் ஓர் அனுபவம்


## உரையாசிரியர்:: புலவர் கே.ஏ. இராஜு

விலை : ரூ. 1100

பக். : ரூ. 1040

வெளியீடு:

கே.ஏ. இராஜு
சென்னை – 600019
94444 43821




திதிருமூலர் அருளிச்செய்த திருமந்திரம், உயிர்கள் தூய்மையடைந்து, பக்குவப்பட்ட நிலையில் இறைவனுடன் இயைவதை மூவாயிரம் பாடல்களில் விரிவாக விளக்குகிறது. இது பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படும் திருமந்திரம், ஒன்பது தந்திரங்களும், நந்திதேவரிடமிருந்து திருமூலர் பெற்ற ஒன்பது ஆகமங்களில் சாரம் என்பர். ஆன்மிக வாழ்வின் அடிப்படை நெறிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் இவற்றை சிறப்பாக விளக்குகிறது.

இன்று பலரும் அடிக்கடி பயன்படுத்தும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'அன்பே சிவம்', 'என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய் தமிழ்ச் செய்யுமாறே', 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' போன்ற தொடர்கள் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ளவையே. சைவ சமயத்தின் சாத்திர நூலாக மட்டுமல்லாது தோத்திர நூலாகவும் விளங்கும் திருமந்திரத்தைக் கற்றுப் பொருளுணர இந்நூல் பெரிதும் உதவும்.



சிறுகதை

# நினைவு தப்பவில்லை

## மதிகண்ணன்

“நான் அவங்களைப் பாத்திருக்கேனாப்பா?”

“பார்த்திருக்கம்மா? நீ பிறந்தப்ப உன்னையப் பார்த்துக்கிறதுக்காக, நாலு மாசம் நம்ம வீட்டுலதான் இருந்தாங்க பாப்பா!”

“அப்பல்லாம் உங்களையே எனக்கு அடையாளம் தெரியாது. அவங்களை எப்படித் தெரியும்?”

“அப்புறமும் அவங்க நிறைய தடவை நம்ம வீட்டுக்கு வந்திருக்காங்க பாப்பா!”

“எப்ப?”

“நாம இ.பி. காலனி வீட்டில் இருக்கும்போது அப்பப்ப வந்திருக்காங்க?”

“நானு ரெண்டாவது படிக்கும்போதே இ.பி. காலனி வீட்டுல இருந்து வந்திட்டோம். அப்புறம் எப்படி எனக்கு அடையாளம் தெரியும்?”

ராமநாதபுரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த காரில் மகளின் கேள்விகளுக்கு நான் சொல்லிக் கொண்டிருக்கும் பதில்களைக் கவனித்தபடி கண் மூடிச் சாய்ந்திருந்த என் மனைவி.

“தாத்தா இறந்ததுக்கு வந்திருந்தாங்க பாப்பா. ராம்நாடுல இருந்து வந்தவங்கல்ல ரொம்ப அழுதததுல அவங்களும் ஒருத்தங்க!” என்றாள்.

“ரெண்டு பேரு ரொம்ப அழுதாங்க!” என யோசித்த மகளிடம், “சத்தமா பாட்டுப்பாடி அழுதாங்கல்ல, அவங்க!” என்றாள் மனைவி.

“ஏங்க கல்லாப் பெட்டியே! என்னைய விட்டுட்டுப் போயிருச்சேன்னு அழுதாங்களே! அவங்களேதான்!”

“திடீர்ன்னு எதுக்கு அவங்களைப் பார்க்கப் போகலாம்னு கிளம்புனீங்க?”

“உங்க அப்பத்தா, அவங்ககூடப் பிறந்தவங்க யாரும் உயிரோட இல்லை. உங்க தாத்தாவும் இல்லை. அவருகூடப் பிறந்தவங்கள்ல உயிரோட இருக்குறது இவங்க மட்டும்தான். இவங்களுக்கும் உடம்புக்குச் சரியில்லைன்னாங்க. அதான் உங்க அப்பா உடனே கிளம்பிட்டாரு!” என்று என் மனைவி பதில் சொன்னாள்.

“எனக்கு முந்துன ஜெனரேஷன்ல உயிரோட இருக்குறது இவங்க மட்டும்தான் பாப்பா. இந்தப் பக்கம் உங்க டூர் புரோக்ராம் இருந்ததால, சரி இவங்களையும் பார்த்துரலாம்ன்னு முடிவு பண்ணேன்!”

“இவங்களை உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமாப்பா?”

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாததால் நான் அமைதியாக இருந்தேன். பதிலை எதிர்பார்த்து என் முகத்தைப் பார்த்துக்

கொண்டிருந்த மகளும் சிறிது நேரத்தில் கண்களை மூடி அவளின் அம்மா மீது சாய்ந்து கொண்டாள்.

அப்ப நாங்க அருப்புக்கோட்டையில குடியிருந்தோம். இங்க நாங்கன்றது, நானு, அம்மா, அக்கா அப்புறம் தங்கச்சிக. இங்க அப்பங்குறது நாற்பது வருஷத்துக்கு முன்னால. அப்பா ராமநாதபுரத்தில் வேலை பார்த்தாரு. டிபார்ட்மெண்டுல பேரு வாங்குன நல்ல வேலைக்காரரு. அதுனால, எப்பயாவதுதான் வீட்டுக்கு வருவாரு. அங்கேயே வீடு எடுத்து தங்கிட்டாரு!



ரயில்வேயில வேலை பார்த்த நண்பரோட குவார்ட்ரஸ்ல அவருக்குப் பதிலா இவரு இருந்தாரு. அப்பாவுக்கு அடுத்ததாப் பிறந்தவங்க லட்சுமி அத்தை. கணவனை இழந்தவங்க. ஒரு பையன், ஒரு பொண்ணு. ரெண்டு பேருக்குமே கல்யாணம் ஆயிருச்சு. குழந்தைகளும் இருக்கு. பையனோட இருக்க ஒத்துவராததால, பொண்ணுகூட இருந்தாங்க. அண்ணன் தனியாக் கஷ்டப்படுறதுனால அவருக்கு சமைச்சுப் போடுறதுக்காக கிராமத்துல இருந்து ராமநாதபுரம் ரயில்வே குவார்ட்டர்ஸ் வீட்டுக்கு வந்துட்டாங்க!

மாசம் பொறக்குறதுக்கு ரெண்டு நாள் இருக்கும்போதே அம்மா என்னைய ராமநாதபுரம் அனுப்பிருவாங்க! சம்பளம் வாங்குனதும் அப்பா வீட்டுச் செலவுக்குன்னு கொடுக்குறத வாங்கியார வேண்டியது என்னோட வேலை. இது ஒவ்வொரு மாசமும் நடக்குறதுதான். அம்மா பிறந்த ஊரும் வளர்ந்த ஊரும் ராம்நாடு பக்கத்துலதான் இருந்துச்சு. பெரியம்மா மகன் காமாட்சியும் அப்பாக்கிட்டதான் வேலை பார்த்தாரு.

அவரோட சேர்ந்து அம்மா வளர்ந்த கிராமத்துக்கும் அப்பப்ப போயிட்டு வருவேன்.

பெரியம்மா ஒவ்வொரு தடவையும் புளி, மிளகாய், குதிரைவாளி, பச்சரிசி ...இப்படி எதையாவது குடுத்து விடுவாங்க. இதெல்லாம் ஊருக்குப் போகும்போது சுமக்கணுமேன்ற பயத்துலயே நான் மறந்தது மாதிரி ஊருல வச்சிட்டு வந்துருவேன்.

மறுநாள் அண்ணன் காமாட்சிக்கிட்ட மறக்காமக் குடுத்துவிட்டு என்ன சுமக்க விட்டுருவாங்க. பெரியம்மா குடுக்குறத ராமநாதபுரத்துல வச்சுட்டு வர முடியாது. அப்பாவும் திட்டுவாரு. அம்மாவும் திட்டுவாங்க. அத்தை அதைத் தொடக்கூட மாட்டாங்க!

அத்தை மத்தவங்கக்கிட்ட பேசும்போது, என்னையப் பேரு சொல்லிச் சொன்னாலும்

என்னைய 'தம்பி'ன்னுதான் கூப்பிடுவாங்க. என் மேல பிரியமா இருந்தாங்களா?, இல்லையான்றது எனக்குத் தெரியாது.

'என் அப்பாவோட காச எங்க வீட்டுக்கு வரவிடாம, அவரோட சம்பாத்தியத்தை அழிச்சிக்கிட்டிருக்காங்க'ன்ற நெனப்பு எங்க வீட்டுல எல்லாருக்கும் இருந்ததால அவங்க மேல வெறுப்பு மட்டுந்தான் இருந்துச்சு. ஆனா, அத வெளியில காட்டுனா மாசாமாசம் அப்பா தர்ற கொஞ்சக் காசும் நின்னுபோயிரும்ன்ற பயத்துல அதை வெளியே காட்டிக்கிர்றதில்லை.

பரீட்சை லீவு என்றால் ஒரு வாரம் பத்துநாள் வரைக்கும் என்னை அம்மா ராம்நாடுக்கு அனுப்பிடுவாங்க! 'ஏன்?' என்ற காரணம் எனக்கு எப்போதும் தெரியாது.

அங்க இருக்கிற சமையல் இன்றைக்கு வரைக்கும் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. சாம்பார் வச்சாக்கூட அதுல மீன், கருவாடு வாடை இருக்குற மாதிரியே தெரியும்.

அத்தை சமைச்சதை அப்பா நல்லா சாப்பிடுவாரு. எனக்குத்தான் இறங்காது. எல்லாக் குழம்புக்கும் போடுற அந்த ஒரே மசால் வாடையே எனக்கு ஒத்துக்கிறதில்லை. அப்பா காலையில சாப்பிட மாட்டாரு? அவரு போனப்பறம் அத்தை இட்லி அவிச்சுக் குடுப்பாங்க. என்னால ஒரு இட்லிக்கு மேல சாப்பிட முடியாது. தினமும் இட்லிதானா என்று ஒருநாள் கேட்டதற்கு தோசை என்ற பெயரில் இட்லி கனத்துக்கு ஒரு தோசை சுட்டுக் கொடுத்தார்கள். மறுநாளும் அதுவே கிடைத்தது. என்னால் முழுசாக ஒன்றைக்கூட தின்ன முடியவில்லை. அந்தக் கொடுமையில் இருந்து தப்பிப்பதற்காக 'நாளைக்கு இட்லியே ஊத்திருங்க' என்ற என்னுடைய கோரிக்கை மறுநாளிலிருந்து நிறைவேற்றப்பட்டது. அத்தை அப்படித்தான் எந்தக் கோரிக்கையாக இருந்தாலும், அது கோரிக்கையாகத்தான் இருக்க வேண்டுமென்பதுகூட இல்லை என்னுடைய குறிப்பறிந்து செய்வார்.

காலையில் ஒற்றை இட்லி தின்ற வெற்று வயிற்றுடன் நான் ரயில்வே குடியிருப்பில் இருந்து கிளம்பி தண்டவாளத்தைத் தாண்டி ரயில் நிலைய நடைமேடையைக் கடந்து வாடகை வண்டி நிறுத்தத்தையும் கடந்து பிரதான சாலையேறி பேருந்து நிலையம் வந்து சேர்வேன்.

அன்றைக்கு இருந்தது ஒரே பேருந்து நிலையம்தான். இன்றைக்கு இருக்கின்ற பழைய பேருந்து நிலையம். அங்கே போகின்ற வருகின்ற பேருந்துகளையும், மக்களையும் வேடிக்கை பார்ப்பதை ஒரு கடமையைப்போல் செய்வேன். தான் எந்த ஊருக்குச் செல்ல வேண்டும் என்பதைச் சொல்லாமல் எந்தப் பேருந்து வந்தாலும் இது எந்த ஊருக்குப் போகும்? என்று கேட்கும் கிராமத்து ஜனங்கள் நிறைந்திருந்த பேருந்து நிலையங்களில் இந்தப் பேருந்து நிலையமும் ஒன்று. தான் செல்ல வேண்டிய ஊரின் பெயர் சொல்லி, எந்தப் பேருந்து வந்தாலும் இது அந்த ஊருக்குப் போகுமா? என்று கேட்கும் அப்பாவி ஜனங்களும் அவர்களுக்கு இணையான எண்ணிக்கையில் நிலையத்தில் நிறைந்திருப்பார்கள்.

நான் ஒவ்வொரு ஊர்ப் பேருந்து புறப்படும்போதும் கடிகாரத்தைப் பார்த்து பேருந்து நேரத்தை மனதில் பதிந்து கொள்ள முயற்சி செய்வேன். மறுநாள் கேட்பவர்களுக்காவது சொல்லலாமே.

நடைமேடைக் கடைகளாக உயர்ந்திருக்கும் கவிழ்த்துப் போடப்பட்ட கள்ளிப் பெட்டிகளில் அவித்த பனங்கிழங்குகளும், முந்திரிப் பழங்களும், பிரிட்டானியா பிஸ்கட் பாக்கெட்டுகளும் விற்பனைக்காக வீற்றிருக்கும். சில வகையான கருவாடுகளுக்கும்கூட ஒருசில கடைகளில் ஓரமாக வைக்கப்பட்டிருக்கும். இன்றைக்கிருப்பதுபோல் அன்றைக்கு டீக்கடைகள் அதிக எண்ணிக்கையில் இல்லை. பேருந்து நிலையத்தின் எதிரில் இருக்கும் மாஸ்டர் பேக்கரி டீக்கடை ஊரில் மிகவும் பிரபலம். சில நாள்களில் காலைப் பொழுதின் பசியை மாஸ்டர் பேக்கரியின் 'பட்டர் பன்'தான் தீர்த்து வைக்கும். ஒன்று சாப்பிட்டாலே ஓரளவு வயிறு நிறைந்துவிடும். பேருந்து நிலையத்துக்கு உள்ளே பரவியிருக்கும் கலவையான வாசனை ஒருவிதக் கிறக்கத்தை ஏற்படுத்தும். அது சில நேரங்களில் எல்லை மீறி வாந்திக்கான தொடக்கமாகவும் மாறும்.

காலை, மாலை தவிர்த்த மற்ற நேரங்களில் பேருந்து நிலையம் பெருமளவுக்குப் பரபரப்பாக இருப்பதில்லை. வேடிக்கை பார்ப்பதற்கு சுவாரஸ்யமற்ற சில நாள்களில் நான்கு பனங்கிழங்குகளை வாங்கிக் கொண்டு அவற்றைத் தின்றபடியே மெதுவாக பிரதான சாலையில் மேற்கு நோக்கி நடந்து பூக்கடை, மருது பாண்டியர் பணிமனை, எதிர் சாலையில் திரும்பி தங்கம் தியேட்டர், சந்தைக்கடை, இன்றைக்கு புதிய பேருந்து நிலையமாக இருக்கும் அன்றைய ஊரணி, முருகன் கோயில், வண்டிக்காரத் தெரு,கடை வீதி, அரண்மனை, குண்டுக்கரை முருகன் கோயில், ஆர்.சி. சர்ச், அரசு மருத்துவமனை.. என ஒரு சுற்று சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தால், கை காலைக் கழுவிட்டு வந்து சாப்பிடுங்க தம்பி என்று அத்தை அடுத்தகட்டப் போருக்கு என்னை ஆயத்தமாகச் சொல்வார்கள்.

எந்தக் குழம்பு என்றாலும் என்னால் சரியாகச் சாப்பிட முடியாது. போதும், போதும் என்று



மறுக்கும்போது, ‘இளவட்டம் இப்புடிச் சாப்பிட்டா எப்படி? ஏன் ஒழுங்காச் சாப்பிட மாட்டேன்றீங்க?’ என்ற அத்தையின் கேள்விகள் வழக்கமானவை.

‘வாய்க்கு விளங்கலை’ என மனதுக்குள் மட்டும் நான் சொல்லிக் கொள்ளும் வெளிப்படாத பதிலும் வழக்கமானதுதான்.

ஒருநாள் பட்டணங்காத்தானில் உறவினர் இறப்புக்கு அத்தை காலையில் புறப்பட்டுப் போனார்கள். போகும்போது போனமா, வந்தமான்னு வந்துருவேன். வீட்டைப் பாத்துக்கங்க தம்பி!என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். வீட்டைப் பூட்டுவது, சாவியை எங்கு கொடுப்பது என்பது போன்ற குழப்பங்களால் நான் வெளியில் எங்கும் செல்லாமல் ராகுல சாங்கிருத்தியாயனுடன் ஊர் சுற்றிக் கொண்டிருந்தேன். காலையில் சென்ற அத்தை 12 மணிக்குத்தான் வீட்டிற்கு வந்தார்கள்.

பின்வாசல் வழியாக வீட்டுக்குள் நுழையும்போதே, ‘கடையநாடிப் போயி ஏதாவது பலகாரம் சாப்பிட்டு வந்தீங்களா?’ என்ற கேள்வியுடன் நுழைந்தார்கள்.

‘ம்‘ என்ற ஒற்றை வார்த்தைப் பொய்யுடன் நான் முடித்துக் கொண்டேன்.

குளித்து முடித்து அவசர அவசரமாக சமையல் கட்டுக்குள் புகுந்தார்கள். நான் புத்தகத்தில் மூழ்கியிருந்தேன். வழக்கமான மதிய உணவு நேரமான ஒரு மணிக்கு , “சாப்பிட்டுப் படிங்க தம்பி!” என்று கையில் கரண்டியுடன் வந்த அத்தை தட்டை எடுத்து வைத்தார்கள்.

“எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் சமையல் செய்தார்கள்? விதி வலியது” என்று நான் கை கழுவிக் கொண்டு அமர்ந்தேன்.

“லேட்டாயிருச்சுன்னா நீங்க பசி தாங்க மாட்டீங்கள்ல. அதான் அவசர அவசரமாச் செஞ் சதால வேற ஒண்ணும் செய்ய முடியல. வெறும் புளிச்சாறும் அப்பளமுந்தான். குமுலா கருவாடு கொஞ்சம் கிடக்கு. நாளைக்கு அதப் போட்டு கொழம்பு வச்சிறலாம்!”

நான் ஏதும் சொல்லாமல் சாப்பிட அமர்ந்தேன். காலையிலும் ஏதும் சாப்பிடாமல் இருந்த நான் நல்ல பசியில் இருந்தேன். மசால் ஏதும் இல்லாத புளிச்சாறு நன்றாக இருந்தது. மசால் ஏதும் இல்லாத அப்பளமும்கூட பிடித்திருந்தது. பொரித்த அப்பள வளைவுகளில் எண்ணெய் அங்கங்கே தங்கியிருந்தது. அது மீன் பொரித்த எண்ணெயாக இருக்கலாம். வழக்கமாக சாப்பிடுவதைவிட நான் அன்று மிக அதிகமாக, ஏறக்குறைய மூன்று மடங்கு சாப்பிட்டேன். இதுதான் எனக்கான உண்மையான மதிய உணவு அளவு. அத்தை ஆச்சரியப்பட்டுப் போனார்கள். “புளிச்சாறும் அப்பளமும் ரொம்பப் பிடிக்குமோ? இத்தனை நாளா இது தெரியாமப் போச்சே!” என்றார்கள்.

பொரித்த அப்பளத்தின் மீன் எண்ணெய் வாடையை மீண்டும் அனுபவிப்பதைத் தவிர்ப்பதற்காக, ‘இனிமேல் மீன் பொரிச்ச எண்ணெயில அப்பளம் பொரிக்காதீங்க!’ என்று சொல்ல நினைத்து நான் “அப்பளத்தப் பொரிக்கிறதுக்கு!” என்று தயங்கி நிறுத்தினேன்.

‘சுட்டுத் தந்துரவா?’ என்று அத்தை கேட்டதும் ‘சரி’ என்று தலையாட்டினேன்.

அதற்குப் பிறகு நான் அத்தை வீட்டில் மதிய உணவாக புளிச்சாறும் சுட்ட அப்பளமும் தவிர வேறு எதுவும் சாப்பிட்டதில்லை. என் அப்பாவுக்கு என்ன குழம்பு வைத்தாலும் எனக்கெனத் தனியாக புளிச்சாறு, அப்பளம் என சிறப்பு சமையல் இருக்கும். மருமகனுக்கு கழனிப் புளிச்சாறும் சுட்ட அப்பளமும்தான் ரொம்பப் பிடிக்கும். ‘நல்லாச் சாப்பிடுவாக?’ என்ற வார்த்தைகளை ஒரு மந்திரம்போல் உறவினர்கள் அனைவரிடமும் அத்தை சொல்லி வைத்தார்கள். அவர்களுடைய பரப்புரையின் பலன் நான் அப்பா வழியில் எந்த உறவினர் வீட்டுக்குப் போனாலும் அவர்கள் வீட்டில் என்ன சமைத்திருந்தாலும் எனக்கு ‘கழினிப் புளிச்சாறும், சுட்ட அப்பளமும்‘ மட்டும்தான் கிடைத்தன.

கார் ராமநாதபுரத்தின் உள்ளே நுழைந்து குலுங்கத் தொடங்கியது. “ராம்நாடு வந்துருச்சா. ஒரு டீ சாப்பிட்டுட்டுப் போகலாங்க!” என்று தூக்கம் கலைந்த மனைவியின் வார்த்தைகளால் நினைவு திரும்பிய நான் டிரைவரிடம் புதிய பேருந்து நிலையத்தின் எதிரில் இருக்கும் மாஸ்டர் பேக்கரியில் காரை நிறுத்தச் சொன்னேன். அன்றைக்கு பழைய பேருந்து நிலையத்துக்கு எதிரில் இருந்ததைவிடவும் அதிக கூட்டம் இன்றைக்கு புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரில் இருந்தது. மனைவி, மகளின் முறைப்புகளுக்கு இடையே நான் என் சர்க்கரை அளவை மறந்து, பழைய நினைவுகளில் மிதந்தபடி ஒரு பட்டர் பன்

சாப்பிட்டேன். சாத்தான்குளத்துக்கு போய்ச்சேர இன்னும் பத்துப் பதினைந்து நிமிடங்கள்தான் இருந்தன.

“ரொம்ப நாளாவே உடம்பு சரியில்லை. எதுவும் ஞாபகத்துல இருக்க மாட்டேங்குது. இடையில ஒருநாள் ஒங்களப் பத்திக் கேட்டாங்க!' என்று லீலா அத்தாச்சி போனில் சொன்னது நினைவுக்கு வந்தது. “உழைச்ச உடம்புதான். இருந்தாலும் வயது எண்பதுக்கு மேல ஆச்சுல்ல' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். “என்னை ஞாபகம் இருக்குமா?”

அத்தைக்கு ஒல்லியான உடல்வாகு. இப்போது ஆறு மாதங்களுக்கு மேலாக, வெறும் நீர் ஆகாரம் மட்டுமே சாப்பிட்டு, படுத்த படுக்கையாக சுருங்கிப்போய்க் கிடந்தார். ஹாலை அடுத்த சிறிய ஹாலில் ஒரு பக்கம் அடுப்பு இருந்தது. மற்றொரு பக்கம் அத்தையின் படுக்கைக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

‘கண்களில் ஏறக்குறைய ஒளி இல்லை. காது ஓரளவுக்குக் கேட்கிறது. அவங்க பேசுற சத்தம் ஒரு அடிதூரம் மட்டுமே பயணிக்கும் அளவுக்கு வலுவிழந்திருக்கிறது. அவங்களுக்கு எல்லாமே மறந்துக்கிட்டே வருது. உள்ளூர்ல இருக்குற சித்தி மகளையே சமயத்துல யாருன்னு கேட்குறாங்க. உங்களையும் ஞாபகம் இருக்குமான்னு தெரியலை' என்றெல்லாம் எங்களுக்கு விவரம் சொன்ன லீலா அத்தாச்சி தூங்கிக் கொண்டிருந்த அத்தையைத் தொட்டு எழுப்பினார்கள்.

“என்னை ஞாபகம் இருக்குமா?”

“அம்மா.. அம்மா... எந்திரிங்க...! அருப்புக்கோட்டை மாமா மகன் உங்களைப் பாக்க வந்திருக்கு!” என்று அயர்ந்து கிடந்த அத்தையிடம் சிறு சுறுசுறுப்பு தென்பட்டதுபோல் தெரிந்தது. புரண்டு படுத்தார்கள். கட்டிலில் நான் அவர்கள் அருகில் அமர்ந்தேன். என் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள். உதடுகளின் அசைவைப் பார்த்து நான் குனிந்தேன். வார்த்தைகள் தடுமாற்றத்துடன்தான் வெளிவந்தன.

“தம்பி நல்லா இருக்கீங்களா?”

“நான் நல்லா இருக்கேன். உங்களுக்கு என்ன பண்ணுது?”

“எனக்கு என்ன பண்ணுது. அண்ணனைப் பாக்கக் கிளம்பிக்கிட்டு இருக்கேன்!”

“உங்க அண்ணனைத்தான் பாப்பீங்களா? எங்களையெல்லாம் பாக்க மாட்டீங்களா?”

மெதுவான உதட்டுச் சுழிப்புச் சிரிப்பை மட்டும் பதிலாக்கிய “அத்தை மகளும் பேத்தியாளும், எப்படி இருக்காங்க?” என்றார்கள்.

“வந்திருக்காங்க!” என்ற என் பதிலைப் புரிந்து கொண்டு, “அம்மா” என அருகில் வந்த என் மனைவி, “பயப்படாம இருங்க!” என்றாள்.

மனைவியின் கைபிடித்து, “ நானு எதுக்குப் பயப்படணும்? பேத்தியாள எங்க? என்று கேட்டார்கள்.

என் அருகில் அமர்ந்த மகள் , “அம்மாச்சி!” என்றதும் மெதுவாகத் தலையிலிருந்து முழங்கால்வரை இரண்டு கைகளாலும் தடவிப்பார்த்து மெதுவான புன்னகையுடன், “குட்டீம்மா, தாத்தா மாதிரி நல்லா வளர்ந்துட்ட” என்றார்.

எல்லாத்தையும் மறந்துக்கிட்டே இருந்த அத்தைக்கு என் மகளுக்குப் பெயர் வைப்பதற்கு முன் நாங்கள் அழைத்த, செல்லப் பெயர் ‘குட்டீம்மா’ நினைவில் இருப்பது ஆச்சர்யந்தான்.

“நாங்கள் வந்தது ஒருவகையில் சரிதான்”

‘அப்பா வளத்திக்கு இன்னும் கொஞ்சம்தான் அம்மாச்சி’ என்று மழலை மாறாமல் சொன்ன மகளை மோவாய் தொட்டுக் கொஞ்சினார். அவ்வளவு பேசியதில் களைப்பாயிருந்தார். மூச்சு வாங்கியது. குனிந்து காதுகொடுத்துக் கொண்டிருந்த மகள் நிமிர்ந்து என்னிடம், ‘லீலான்றாங்க’ என்றாள்.

“அவங்க மக. உன்னோட பெரியம்மா!” என்று சொல்லிவிட்டு சத்தமாக, “அத்தாச்சி!” என்று அழைத்தேன்.

ஹாலில் மெதுவாக அழுதுகொண்டிருந்த அத்தாச்சி கண்களைத் துடைத்தபடி வந்தார். அத்தைக்குக் காது கொடுக்கக் குனிந்த அவர்களுக்கு வழிவிட்டு நாங்கள் விலகினோம். “சரிம்மா! சரிம்மா! சரிம்மா! நீங்க தூங்குங்க.. நான் பார்த்துக்குறேன்.”

‘நான் என்னவாம்‘ என்று குறிப்பால் கேட்க, ‘சொல்கிறேன்’ என அவர்களும் குறிப்புக் காட்டினார். அத்தைக்குப் போர்த்திவிட்டு அவர்கள் அமைதியாகும்வரை காத்திருந்து ஹாலுக்கு வந்தவர்களின் கையில் கொஞ்சம் பணம் கொடுத்தேன். “பாத்துக்கங்க! என்ன சொன்னாங்க! சரிம்மா, சரிம்மா'ன்னுக்கிட்டிருந்தீங்க?”

“அவங்களுக்கு பகலும் தெரியல, ராவும் தெரியல. இப்ப சாயங்காலம்ன்னு தெரியாம, இப்பத்தான் விடிஞ்சிருக்குன்னு நெனைச்சுக்கிட்டு பிள்ளைங்களுக்கு மீன் எடுத்து சமைச்சுப்போடு. தம்பிக்கு தனியா கழனிப் புளிச்சாறு வச்சு அப்பளம் சுட்டு வச்சுருன்றாங்க. அதைத்தான் திரும்பத் திரும்பச் சொன்னாங்க!”.


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com




## பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழியல் வரலாறு வரன்முறையான ஆராய்ச்சி நிலைப்பட்ட வரலாறாகப் பரிணமிப்பதற்கு பேரா. ச.வையாபுரிப்பிள்ளையின் பங்களிப்பு முக்கியமானது. தமிழ் நூற்பதிப்புத் துறையில் சிறந்த பதிப்பாசிரியராக விளங்கியவர். தமிழில் சிறந்த புலமை உள்ளவர்; ஆய்வுக கட்டுரையாளர், திறனாய்வாளர், கால மொழி ஆராய்ச்சியாளர், மொழி பெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், கதை,கவிதைகள் புனையும் திறம் படைத்தவர் எனப் பன்முகப் பரிமாணங்களைக் கொண்டவர்.

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட பேரகராதியின் ஆக்கக் குழுத் தலைவராகச் செயற்பட்டவர். பிற மொழி கலப்பதை வெறுப்பதும், சமஸ்க்ருதத்தை வெறுப்பதும், இந்தியை இகழ்வதும், தனித் தமிழ் நாடு குறித்து கனவு காண்பதும் போன்ற விருப்பு வெறுப்புகள் ஏதுமற்ற தமிழ் அறிஞர் ஒருவர் இருந்தார் என்றால் வியப்பாக இருக்கும். அப்படிப் பட்ட ஒரு ஆச்சரியம் தான் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள்.

நெல்லை மாவட்டத்தில் உள்ள சிக்கநரசய்யன்பேட்டை என்ற ஊரில் 1891 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதி சரவணப்பெருமாள் — பாப்பம்மாள் தம்பதிக்குப் பிறந்தார். பாளையங்கோட்டை புனித சவேரியர் பள்ளியிலும், திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியிலும் பிறகு சென்னை கிறிஸ்துவக் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்றார். அந்த ஆண்டு சென்னை மாகாணத்திலேயே தமிழில் மிக அதிக மதிப்பெண்கள் பெற்று “சேதுபதி தங்க மெடல் (பதக்கம்)” பெற்ற பெருமைக்குரியவர் ஆனார். சட்டம்: தமிழில் ஆர்வம் அதிகமிருந்தும் வையாபுரிப் பிள்ளை திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றார்.

திருவனந்தபுரத்தில் ஏழு ஆண்டுகள் வழக்கறிஞராகவும், மூன்று ஆண்டுகள் திருநெல்வேலியிலும் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

“இரசிகமணி” டி. கே. சிதம்பரநாத முதலியார், நீலகண்ட சாஸ்திரியார், பேராசிரியர் சாரநாதன், பெ. அப்புசாமி போன்றவர்கள் நெல்லை வாழ்க்கையில் அவருக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள்.

தமிழ் ஆய்வு: வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த காலத்தில், வையாபுரிப் பிள்ளை எழுதி, வெளிவந்த பல கட்டுரைகளும் இலக்கிய ஆய்வுகளும் அவரை அறிஞர்கள் மத்தியில் பேசப்பட வைத்தன. உ.வே.சாமிநாதய்யருக்குப் பிறகு பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து, ஆய்வு செய்து வெளியிட்ட பெருமை எஸ். வையாபுரிப் பிள்ளையைத் தான் சாரும். ஓலைச் சுவடிகளைப் பதிப்பித்ததுடன் நிற்காமல் அந்த இலக்கியங்களுக்குக் கால நிர்ணயம் செய்ததிலும் வையாபுரிப் பிள்ளைக்குப் பெரும் பங்கு உண்டு.

வையாபுரிப்பிள்ளை 1926 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கி வந்த தமிழ் அகராதியின் (ஏழு தொகுதிகள்) பதிப்பாசிரியர் பொறுப்பேற்றார். 1936 ஆம் ஆண்டு முதல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக விளங்கினார். 1946 வரை அப்பணியில் சிறப்பாகச் செயல்பட்டு, பல ஆராய்ச்சியாளர்களை உருவாக்கினார்.

தமிழ்த்துறைத் தலைவர்: வையாபுரிப் பிள்ளை திருவிதாங்கூர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த காலத்தைப் பொற்காலம் என்று கூறுவார்கள்.சுமார் நான்கு ஆண்டுகள் அப்பதவியில் வையாபுரிப் பிள்ளை இருந்த காலகட்டத்தில்தான் மலையாள மொழி லெக்சிகன் (சொற்களஞ்சியம்) பதிப்பிக்கப்பட்டது. அதன் உறுப்பினாரகவும் பணியாற்றிய பெருமை வையாபுரிப் பிள்ளைக்கு உண்டு. இந்தக் காலகட்டத்தில் தான், பின்னாளில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதல் துணைவேந்தராக விளங்கிய வ. ஐ. சுப்பிரமணியம், ஆய்வு மாணவராக வையாபுரிப் பிள்ளையிடம் பணியாற்றி அவரது வாரிசு என்ற பெயரையும் பெற்றார்.

இரா. பி. சேதுப்பிள்ளையைப் போலவே கம்பனின் கவிநயத்தில் தன்னைப் பறிகொடுத்த வையாபுரிப் பிள்ளை, “இரசிகமணி” டி.கே.சியுடன்

# பெருமை

## பார்த்திபன்

இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகத்தை உருவாக்கியதில் பெரும்பங்கு வகித்தார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதி மற்றும், வ. உ. சிதம்பரம்பிள்ளை ஆகிய இருவரிடமும் வையாபுரிப் பிள்ளைக்கு நெருங்கிய அறிமுகம் இருந்தது. தனது சிறைவாசத்துக்குப் பிறகு, அரசியல் வாழ்வில் வெறுப்புற்றிருந்த வ. உ. சி., ஏட்டிலிருந்த இளம்பூரணரின் தொல்காப்பிய உரையைப் பதிப்பிக்கும் நோக்கத்தோடு படியெடுத்தார். அதனை எஸ்.வையாபுரிப் பிள்ளையிடம் காட்டி செப்பம் செய்தார். வையாபுரிப் பிள்ளையையும் அதன் பதிப்பாசிரியராகத் தன்னுடன் இருக்குமாறு கேட்டதையும், ஆனால் இவரோ நீங்களே பதிப்பாசிரியராக இருந்தால் போதும் என்று மறுத்து விட்டதாகவும் அந்த உரைப் பதிப்பின் முன்னுரையில் வ.உ.சி நன்றியுடன் குறிப்பிட்டிருக்கிறார்.

வீடு நூலகம்: வையாபுரிப் பிள்ளை தனது வீட்டில் இருந்த நூலகத்தில் மட்டும் 2,943 புத்தகங்கள் இருந்தன. அதுமட்டுமல்லாமல் ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு, ஜெர்மன், மலையாளம் போன்ற மொழிகளிலான குறிப்புகளும், ஓலைச்சுவடிகளும் நூற்றுக்கணக்கில். அவை அனைத்தையும் கொல்கத்தாவில் இருந்த தேசிய நூலகத்துக்கு நன்கொடையாக அளித்துவிட்டார் வையாபுரிப் பிள்ளை.

நாற்பதுக்கும் அதிகமான நூல்களையும் நூற்றுக்கணக்கான ஆய்வுகளையும் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தவர் அவர். மனோன்மணியம் உரையுடன் தொடங்கி 1955 இல் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை உரையுடன் பதிப்பித்தது வரை தமிழுக்குப் பெரும் தொண்டு ஆற்றினார். கம்பராமாயணத்துக்கு உரை எழுதிப் பதிப்பிக்க வேண்டும் என்கிற அவரது அவா மட்டும் நிறைவேறாமலே போய்விட்டது.



தமிழ் அறிஞர் என்றாலே பிற மொழி கலப்பதை வெறுப்பதும், சமஸ்க்ருதத்தை வெறுப்பதும், இந்தியை இகழ்வதும், தனித் தமிழ் நாடு குறித்து கனவு காண்பதும் என்று ஒரு இலக்கணம் ஏற்பட்டு விட்டது. தமிழ் அறிவை விட, மேற்சொன்ன இலக்கணங்கள் பொருந்தினாலே ஒருவர் தமிழ்க் காவலர் ஆகிவிடுகிறார். இந்த விருப்பு வெறுப்புகள் ஏதுமற்ற தமிழ் அறிஞர் ஒருவர் இருந்தார் என்றால் வியப்பாக இருக்கும். அப்படிப் பட்ட ஒரு ஆச்சரியம் தான் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள்.

மொழியியல் ஆராய்ச்சியில் பேரறிஞராக விளங்கிய வையாபுரியார், தமிழ் மட்டும் இல்லாமல், சம்ஸ்க்ருதம், மலையாளம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். உ.வே.சாவுக்கு பின்னர் சீவக சிந்தாமணி போன்ற பல பழந்தமிழ் நூல்களை வெளிக்கொணர்ந்து பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். தமிழ் இலக்கியங்களின் கால ஆராய்ச்சி செய்து வெளியிட்டது இவரது சாதனைகளுள் ஒன்று. இந்த ஆராய்ச்சிகள் தான் பலரது கடும் விமர்சனங்களை இவருக்கு பெற்றுத் தந்தது. விமர்சனங்களைக் கண்டு அஞ்சாமல் வையாபுரியார் தமது ஆராய்ச்சிகளை தொடர்ந்து வந்தார்.

திராவிட இயக்கம் சார்ந்து இவர் செயலாற்றாமல் போனதால், தொடர்ந்த கழக அரசுகளில் பெருமளவு அங்கீகாரம் கிடைக்கவில்லை. இவரது சாதனைகள் இருட்டடிப்பு செய்யப் பட்டன என்றுதான் சொல்ல வேண்டும். இருந்தும் தமிழ் மொழியியலில் தமது உழைப்பால் இவர் நீங்காத இடம் பெற்றுள்ளார். இவரைப் போன்ற தமிழ் அறிஞர்களை போற்றாத பாவம், இன்று தமிழரின் மொழி ஆளுமையும், பன்மொழி அறிவும் குறைந்து விட்டன. தமிழன் ஊடக அடிமையாகி தமிழையே தொலைக்கும் காலம் நேர்ந்துள்ளது.

தமிழ் மட்டுமே இயற்கையான மொழி , கல் தோன்றி மண் தோன்றா காலத்து மூத்த மொழி தமிழ் மொழி என்பன போன்ற உயர்வு நவிற்சி — உணர்ச்சி குவிப்புகள் ஏதுமின்றி கடந்த நூற்றாண்டில் முழுமையான ஆராய்ச்சி நோக்குடன் தமிழை அணுகியது திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் மட்டுமே என்று சொல்லலாம். எழுத்து வாரியாக தகுந்த இலக்கிய சான்றுகளுடன் தமிழில் சொற்களஞ் சியம் (மீணீனீவீறீ றீமீஜ்வீநீஷீஸீ) உருவாக்கியது இவரது வாழ்நாளைய சாதனை. சமகாலத்தில் பாவாணர் போன்ற பல அறிஞர்கள் அவரது இந்த சொற்களஞ்சியம் குறித்து குறை கூறினாலும் அத்தகைய ஒரு விரிவான சொற்களஞ்சியம் அதன் பின்னர் ஒருவராலும் உருவாக்க முடியாதது அதன் சிறப்பை பறை சாற்றுகிறது. வையாபுரியார் இந்த தமிழ் பேரகராதியை உருவாக்கி சென்னைப் பல்கலைக் கழகம் மூலம் வெளியிடுவதற்கு முன், திருவிதாங்கூர் பல்கலை கழகத்தில் மலையாள சொற்களஞ்சியம் உருவாக்குவதிலும் பங்கு கொண்டிருக்கிறார்.

வடமொழி தமிழ் மொழியை மாசு படுத்துகிறது — தூய தமிழ் — செந்தமிழ் என்று கூறுகிற தனித்தமிழ் வாதிகளைக் குறித்து இவர் கூறுகிறார், “தூய தமிழ்ச் சொற்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று சொல்வது, நாகரிகம் அடைந்த ஒருவன் மிருகப் பிராயமான நிலைக்குத் திரும்ப வேண்டும் என்பதற்கு ஒப்பானது; தூயதமிழ்வாதம் பெரும்பாலும் வடமொழியை (சம்ஸ்கிருதம்) நோக்கி எழுந்தது. தூயதமிழ்வாதிகள் வடமொழிச் சொற்களைத் தவிர ஏனைய சொற்கள் தமிழ்ச் சொற்கள் என்று கருதுகிறார்கள். மொழியாராய்ச்சி பயின்றவர்கள் அங்ஙனம் சொல்ல மாட்டார்கள். தமிழ் மக்கள் வடநாட்டாரோடு பிற நாட்டாரோடும் தொடர்பு கொண்டிருந்தார்கள். பிறநாட்டுச் சொற்களும் தமிழில் கலந்துள்ளன.

உதாரணமாக, பின்வரும் தொல்காப்பிய சூத்திரத்தைப் பாருங்கள்.

மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்

துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை


இதிலே ‘ஓரை’ என்பது கிரேக்கச் சொல். இப்படிப்பட்ட பல பிறநாட்டுச் சொற்கள் பண்டைத் தமிழில் இருத்தல் வேண்டும். அவற்றை இப்போது இனம்காணவோ, வரையறுக்கவோ இயலாது. ஆராய்ச்சிகள் அதிகமாக, அதிகமாக காலப்போக்கில் அவற்றை வரையறுக்க இயலக்கூடும்.

இத்தகைய பிறமொழிச் சொற்களை எல்லாம் நீக்கியபின் எஞ்சிய சொற்களைத்தான் தூயதமிழ்ச் சொற்கள் என்று சொல்ல முடியும். அத்தகைய தூய தமிழ்ச் சொற்கள் அளவில் குறைவானவையாகவே இருக்கும். அவற்றைக் கொண்டு எவ்வகையானக் கருத்துகளை வெளியிட முடியும்?”.

ஐரோப்பாவில் லத்தீனைப் போல வடமொழியை நாம் கொள்ள வேண்டும்.

திராவிட இயக்க அரசியலும், தமிழ் மொழிப்பற்று வெறியாக வளர்ந்து வந்த காலத்திலேயே தைரியமாக சம்ஸ்க்ருத வெறுப்பை ஒதுக்கி இவ்வாறு கூறுகிறார், “வடமொழியை முற்றிலும் அழிக்க முடியாது. அது தேவையும் இல்லை. வேண்டுமளவு, தேவையறிந்து தமிழில் ஏற்கனவேயுள்ள வடமொழிச் சொற்களைப் புழங்குதல் வேண்டும். வடமொழி அந்தணர்களுக்கு மட்டும் உரியதன்று.

அந்தணர்களும் அப்படிக் கருதக்கூடாது. மற்றவர்களும் அப்படிக் கருதக் கூடாது. இந்தியர்கள் அனைவருக்கும் பொதுவானது வடமொழி. வைதிகர்கள் மட்டுமின்றிப் பிறரும் அம்மொழியை வளர்த்துள்ளனர். ஐரோப்பாவில் லத்தீனைப் போல வடமொழியை நாம் கொள்ள வேண்டும். சமயமுழு முதல் நூலான வேதங்கள் வடமொழியில் உள்ளன. ஆங்கிலம் லத்தீனைப் பயன்படுத்திக் கொண்டது போல நாம் வடமொழியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.".



ஒரு சிறந்த உதாரணம். சுயநலத்துக்காக அரசியல் சார்பு நிலைகளை ஒட்டி ஆராய்ச்சி முடிவுகளை அறிவிக்காமல் உள்ளது உள்ளபடி தமது கருத்துக்களை எடுத்துரைத்த அவரது நேர்மை துணிவு பாராட்டுக் குரியது.

வையாபுரிப் பிள்ளை 1956 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் தேதி தனது 65—வது வயதில் இயற்கை எய்தினார்.

இவர் காலத்தில் இருந்த சம்ஸ்க்ருத பற்றாளர்களை குறித்து இவ்வாறு சொல்கிறார் "தமிழர்களாகப் பிறந்தும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டும் தமிழை இகழ்ந்து வடமொழி மட்டுமே கற்பது. இவர்களால் வடமொழிக்கும் பயனில்லை. அதற்கும் இவர்கள் கேடே விளைவிக்கிறார்கள். சில இடங்களில் வடமொழிக்குச் சிறப்பு கொடுத்து வடமொழியின் கீழ் தமிழ்போன்ற தாய்மொழிகள் இருக்கவேண்டிய நிலை இருக்கிறது. இது நாட்டுக்கும் மொழிக்கும் பல தீங்குகளை விளைவிக்கக் கூடியது. தமிழ்மொழி இப்படிப்பட்டதை எதிர்த்து தனக்குரிய கௌரவத்தைப் போற்றிக் கொள்ளுதல் முக்கியமானது".

திரு எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் காலம் [12/ஏிநீமீ/1891 — 17/திமீதீ/1956]. இந்த மாதம் இவரது நினைவு தினம் வருகிறது. சிறந்த ஆராய்ச்சியாளரும், பதிப்பாளரும், சிந்தனையாளருமான வையாபுரியார் சுமார் மூவாயிரம் அரிய நூல்களை தமது உடமையாக கொண்டிருந்தார். இந்த அறிய நூல்கள் அனைத்தையும் கல்கத்தாவில் இருந்த தேசிய நூலகத்துக்கு நன்கொடையாக அளித்துவிட்டார். ஆராய்ச்சி

களில் எவ்வித சார்புகளும் இல்லாமல் நேர்மையான முடிவுகளுக்கு விழைந்த இவர் "மறு ஆராய்ச்சி வரும்வரை இம்முடிபுகளை ஏற்றுக் கொள்ளலாம்" என்றே குறிப்பிடுவாராம்.

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் ஆழ்ந்த ஞானம் இருந்தால் மட்டுமே, ஒரு சிறந்த மொழியிலாளராக விருப்பு வெறுப்பின்றி செயல் படமுடியும் என்பதற்கு வையாபுரி பிள்ளை அவர்கள்

இயற்றிய நூற்கள்:

1930 — ஆராய்ச்சி உரை தொகுப்பு, ஆசிரியர் வெளியீடு

1944 — சிறுகதை மஞ்சரி, தினமணி வெளியீடு

1946 — Research in Dravidian Language, Madras Premier Co., Madras

1947 — இலக்கியச் சிந்தனைகள், பாரி நிலையம்

1949 — தமிழர் பண்பாடு, தமிழ்ப் புத்தகாலயம்

1950 — கம்பன் ஆராய்ச்சிப் பதிப்பு, கம்பன் கழகம், காரைக்குடி

1951 — உரைமணிமாலை, ஆசிரியர் பதிப்பு

1952 — இலக்கிய தீபம், பாரி நிலையம்

1952 — இலக்கிய உதயம் (பகுதி 2), தமிழ்ப் புத்தகாலயம்

1954 — இலக்கிய மணிமாலை, தமிழ்ப் புத்தகாலயம்

1955 — கம்பன் காவியம், தமிழ்ப் புத்தகாலயம்

1956 — இலக்கணச் சிந்தனைகள், பாரி நிலையம்

1956 — திராவிட மொழிகளில் ஆராய்ச்சி, தமிழ்ப் புத்தகாலயம், இரண்டாம் பதிப்பு

1956 — History of Tamil Language & Literature, NCBH

1956 — சொற்கலை விருந்து, பாரி நிலையம்

1957 — காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம்

1958 — இலக்கிய விளக்கம், தமிழ்ப் புத்தகாலயம்

1958 — ராஜி

1959 — தமிழ்ச் சுடர்மணிகள், பாரி நிலையம், மூன்றாம் பதிப்பு

1959 — அகராதி நினைவுகள், தமிழ்ப் புத்தகாலயம்

1960 — தமிழின் மறுமலர்ச்சி, பாரி நிலையம், நான்காம் பதிப்பு



# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## கர்வ பங்கம் 28

காஞ்சி அரண்மனையின் அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்தில் மகேந்திர பல்லவர் வீற்றிருந்தார். அவருக்கு எதிரே சேனாதிபதி கலிப்பகை, முதன் மந்திரி சாரங்கதேவர், முதல் அமைச்சர் ரணதீரர், ஒற்றர் தலைவன் சத்ருக்னன், குண்டோதரன் ஆகியவர்கள் நின்றார்கள்.

மகேந்திர பல்லவருடைய முகம் பிரகாசமாய்ப் புன்னகை மலர்ந்து விளங்கிற்று. "குண்டோதரா! நீயே உன் கண்ணால் பார்த்தாயா? உண்மையாகவே மாமல்லபுரத்திலிருந்து சளுக்கர் படைகள் திரும்பிப் போயினவா? சிற்பங்களுக்கு ஒரு கேடும் நேரவில்லையே நிச்சயந்தானே?" என்று கேட்டார்.

"ஆம், பல்லவேந்திரா! எனக்கு அப்போது ஏற்பட்ட ஆச்சரியத்தை என்னவென்று சொல்வேன்? சளுக்க ராட்சதர்கள் இரண்டாயிரம் பேர் கைகளில் கடப்பாரைகளையும் இரும்பு உலக்கைகளையும் எடுத்துக் கொண்டு திடுதிடுவென்று ஓடி வந்தார்கள். ஐயோ! ஆயிரமாயிரம் சிற்பிகள் அரும்பாடுபட்டு வேலை செய்த ஜீவ வடிவங்கள் எல்லாம் ஒரு நொடியில் நாசமாகப் போகின்றனவே என்று என் உள்ளம் பதைத்தது. தாங்கள் அந்தக் கோரக் காட்சியைப் பார்க்கும் போது தங்களுடைய மனம் என்ன பாடுபடும் என்று நினைத்துக் கொண்டேன். அடுத்த நிமிஷம்




எங்கிருந்தோ திடீரென்று அந்தப் பாறை உச்சி மீது புலிகேசிச் சக்கரவர்த்தி தோன்றினார். கம்பீரமாகக் கையினால் சமிக்ஞை செய்தார். அவ்வளவுதான்! ராட்சதர்களைப் போல் பயங்கரமாய் ஊளையிட்டுக் கொண்டு ஓடி வந்த சளுக்கர்கள் ஸ்தம்பித்து நின்று விட்டார்கள். அவ்விடத்தில் அந்த நேரத்தில் வாதாபிச் சக்கரவர்த்தியை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர் இட்ட கட்டளையை அவரே மாற்றிச் சிற்பங்களை அழிக்காமல் திரும்பிப் போகும்படி கட்டளையிடுவார் என்றும் எதிர் பார்க்கவில்லை. பிரபு! நானே அந்த அதிசயத்தினால் சிறிது நேரம் சிலையாகப் போய் விட்டேன். எல்லாரும் அவ்விடம் விட்டுப் போன பிறகுதான் எனக்குச் சுய நினைவு வந்தது. உடனே புறப்பட்டு ஓடி வந்தேன்!" என்றான் குண்டோதரன்.

சாரங்க தேவர், "பிரபு! தங்களுடைய மாயாஜால வித்தைகளுக்கு எல்லையே கிடையாது போல் இருக்கிறதே! சளுக்க சக்கரவர்த்தி போட்ட கட்டளையை அவரே ஓடி வந்து மாற்றும்படி எப்படி செய்தீர்கள்?" என்று கேட்டார்.

"ஆகா! அந்த மூர்க்கனுடைய மனத்தை — கலை உணர்ச்சி என்பதே இல்லாத கசடனுடைய மனத்தை மாற்ற முடியுமா? பிரம்மாவினால் கூட முடியாது!" என்றார் மகேந்திரர்.

"அப்படியானால் இந்த அதிசயம் எப்படி நடந்தது. பல்லவேந்திரா! மாமல்லபுரத்தை எப்படிக் காப்பாற்றினீர்கள்?" என்று முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர் கேட்டார்.

"சிறு துரும்பும் ஒரு சமயம் உதவும் என்று பழமொழி இருக்கிறதல்லவா? புத்த பிக்ஷுக்களினாலும் பிரயோஜனம் உண்டு என்று நான் எண்ணியது சரியாய்ப் போயிற்று!"

# சபதம் 26

## கல்கி


“பிரபு! புதிர் போடுகிறீர்கள், ஒன்றும் விளங்கவில்லை!”

“நாகநந்தி பிக்ஷுவைச் சிறைப்படுத்தி வைத்திருந்தேனல்லவா? இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் நேரலாம் என்று எண்ணித்தான் வைத்திருந்தேன். புலிகேசி இங்கிருந்து போகுமுன் கடைசியாக நாகநந்தி பிக்ஷுவைத்தான் யாசித்தான். ஒருகணம் என் மனம் கூடச் சலித்து விட்டது. ஒரு வழியாக நாகநந்தியையும் புலிகேசியுடன் கூட்டி அனுப்பி விடலாமா என்று எண்ணினேன். நல்லவேளையாக அப்படிச் செய்யாமல் அவரை நிறுத்தி வைத்துக் கொண்டேன். அதனாலேதான் இப்போது மாமல்லபுரம் பிழைத்தது!”

சத்ருக்னன், “தங்களுடைய கட்டளையின் கருத்து எனக்கு இப்போதுதான் புரிகிறது. ‘சுரங்க வாசலைத் திறந்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திரு! வெளியில் யார் போனாலும் அதிசயப்படாதே! யோக நிஷ்டையிலேயே இருந்துவிடு!’ என்று ஆக்ஞையிட்ட சமயம் ஒன்றுமே விளங்கவில்லை. நாகநந்தி வெளியில் வந்த போது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஓடிப் போய் அந்தக் கள்ள பிக்ஷுவின் கழுத்தைப் பிடித்து நெறித்து விடலாமா என்று ஒருகணம் தோன்றியது. தங்களுடைய கண்டிப்பான கட்டளையை எண்ணிச் சும்மா இருந்தேன்” என்றான்.

சேனாதிபதி கலிப்பகை, “எங்களுக்கெல்லாம் இன்னமும் ஒன்றும் புரியவில்லை! நாகநந்தி பிக்ஷு போய்ப் புலிகேசியை அழைத்துக் கொண்டு திரும்பி வந்து மாமல்லபுரத்தைக் காப்பாற்றியதாகவா சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டார்.





"ஆனால், அந்தக் கபட வேஷதாரியிடம் தாங்கள் எப்படி நம்பிக்கை வைத்து வெளியே அனுப்பினீர்கள்?"

"ஆ! நாகநந்தி மனிதனேயல்ல; மனித உருவத்திலுள்ள அரக்கன்; விஷம் ஏற்றிய கத்தியை உபயோகிக்கும் பாதகன்! ஆனாலும் அவன் கலைஞன்! அவன் உள்ளத்தில் கலைப்பிரேமை இருப்பதை நான் அறிவேன். நிச்சயமாய் மாமல்லபுரத்தைக் காப்பாற்றுவான் என்றும் எனக்குத் தெரியும். ஆகையினால், அவனை அனுப்பினேன். ஆயனரின் சிற்பக் கிருகத்தையும் காப்பாற்றி விட்டிருந்தால் அப்புறம் அவன் என்னவாய்ப் போனாலும் கவலை இல்லை!"

"நாகநந்தி புலிகேசியை அழைத்து வரவில்லை. நாகநந்தியே புலிகேசியாகிவிட்டார்!" என்று மகேந்திரவர்மர் சொன்னதும் ஏக காலத்தில் 'ஆ' என்ற வியப்பொலி கிளம்பியது.

"உங்களுக்கெல்லாம் முகத்தில் கண்கள் இருக்கின்றன. ஆனால், இருந்தும் என்ன பிரயோஜனம்? கண்களை நீங்கள் உபயோகிப்பதில்லை. நாகநந்தியின் முகத்துக்கும் புலிகேசியின் முகத்துக்கும் உள்ள ஒற்றுமையை நீங்கள் யாரும் கவனிக்கவில்லையா? நாகநந்திதான் புலிகேசியோ என்று கூட ஒரு சமயம் நான் சந்தேகித்தேன். இல்லையென்று பிற்பாடு தெரிந்தது. இந்த மாதிரிச் சந்தர்ப்பத்தில் உபயோகப்படுவார் என்றுதான் நாகநந்தியைப் பத்திரமாய்ச் சிறைப்படுத்தி வைத்திருந்தேன். புலிகேசி இங்கே வந்திருந்த போது அவருடைய கிரீடத்தையும் ஆபரணங்களையும் போல் நம்பொற் கொல்லர்களைக் கொண்டு செய்வித்திருந்தேன். அவற்றுடன் நேற்று அவரை அனுப்பினேன், நேரே மாமல்லபுரம் போகச் சொன்னேன்."

"நாகநந்தி அவ்வளவு சுலபமாகச் சம்மதித்து விட்டாரா, பிரபு?"

"பிக்ஷுவானாலும், ஒற்றனானாலும் உயிருக்கும் விடுதலைக்கும் ஆசைப்படாதவர் யார்?" என்றார் மகேந்திரர்.

இந்த விவரங்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த முதன் மந்திரி முதலியவர்கள் அளவிறந்த வியப்பில் ஆழ்ந்து மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள். அந்த மௌனத்தைப் பிளந்து கொண்டு வெளியே ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது.

காவலன் ஒருவன் உள்ளே ஓடி வந்து தண்டம் சமர்ப்பித்து விட்டு, "பிரபு! மன்னிக்க வேண்டும், கண்ணபிரான் பெண்சாதி கமலி வந்து தங்களை உடனே காணவேண்டும் என்கிறாள். நாங்கள் தடுத்ததற்கு அழுது கூக்குரல் போடுகிறாள்!" என்றான்.

சக்கரவர்த்தியின் முகத்தில் சிறிது கலக்கத்தின் அறிகுறி தென்பட்டது. "வரச் சொல்!" என்று உத்தரவிட்டார்.

அடுத்த நிமிஷம் கமலி தலைவிரி கோலமாய் உள்ளே ஓடி வந்து "பல்லவேந்திரா! இந்தச் சண்டாளியை மன்னிக்க வேண்டும். பெரிய துரோகம் செய்து விட்டேன்" என்று கதறிச் சக்கரவர்த்தியின் காலில் விழுந்தாள்.

அன்று காலையில் கமலியின் மாமனார் அசுவபாலர் கமலியைப் பார்த்து "எங்கே அம்மா, ஆயனரையும் அவர் மகளையும் காணோம்?" என்று கேட்டார்.

கமலி சாதுரியமாக, “அவர்களுக்கு இந்த வீட்டில் பொழுது போகவில்லையாம். இந்தப் பச்சைக் குழந்தையின் விஷமம் பொறுக்கவில்லையாம். ஊரிலுள்ள கோயில்களையெல்லாம் பார்த்து வரப்போயிருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் சிற்பம் சிலைகள் என்றால் பைத்தியமாயிற்றே?” என்றாள்.




“நல்லவேளை! கோட்டைக்கு வெளியே போக வேண்டும் என்று சொன்னார்களே? போயிருந்தால் என்ன கதி ஆகியிருக்கும் தெரியுமா? அந்தப் படுபாவி புலிகேசியின் ஆட்கள் ஊர்களையெல்லாம் கொளுத்துகிறார்களாம். சிற்பிகளையெல்லாம் காலையும் கையையும் வெட்டுகிறார்களாம். கன்னிப் பெண்களையெல்லாம் கவர்ந்து சிறைப்படுத்திக் கொண்டு போகிறார்களாம்...”

இதைக் கேட்டதும் கமலி, “ஐயோ!” என்று அலறினாள். அலறிக் கொண்டே அசுவபாலரிடம் விஷயத்தைக் கூறினாள்.

அவர் கமலியை மனங்கொண்ட வரையில் திட்டி விட்டு, “ஓடு! ஓடிப் போய்ச் சக்கரவர்த்தியிடம் நடந்ததைச் சொல்லு!” என்றார். அதன்படியேதான் கமலி சக்கரவர்த்தியிடம் ஓடி வந்தாள்.

விம்மலுக்கும் அழுகைக்கும் இடையே தட்டுத் தடுமாறிக் கமலி விஷயம் இன்னதென்று சொல்லி முடித்தபோது, சக்கரவர்த்தியின் முகபாவம் அடியோடு மாறிப் போயிருந்தது. கர்வத்துடன் கூடிய புன்னகைக்கு மாறாகச் சொல்ல முடியாத வேதனை இப்போது அம்முகத்தில் குடிகொண்டிருந்தது. சத்ருக்னனைப் பார்த்து, “இவள் சொல்வது உண்மையா, சத்ருக்னா! உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்.

சத்ருக்னன் நடுங்கிய குரலில், “ஆம், பிரபு! நாகநந்தி போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் ஓர் ஆடவரும் ஒரு பெண்ணும் வெளிச் சென்றார்கள். ஆயனர், சிவகாமி மாதிரி தோன்றியது. யார் வெளியே போனாலும் அதிசயப்பட வேண்டாம் என்று தாங்கள் ஆக்ஞையிட்டிருந்தபடியால் பேசாமல் உட்கார்ந்திருந்தேன்” என்றான்.

மகேந்திரர், முதன் மந்திரி முதலியவர்களை நோக்கி, “சற்று முன்னால் என்னுடைய சாமர்த்தியத்தைப் பற்றி நானே கர்வப்பட்டுக் கொண்டிருந்தேனல்லவா? கடவுள் கர்வபங்கம் செய்து விட்டார். சிவகாமியைப் பறிகொடுத்து விட்டு மாமல்லனுடைய முகத்தில் நான் விழிக்க முடியாது. சேனாதிபதி! உடனே படைகளைத் திரட்டுங்கள். ஒரு முகூர்த்தப் பொழுதில் நம் படைகள் வடக்குக் கோட்டை வாசலில் ஆயத்தமாயிருக்க வேண்டும்“ என்றார்.

(சபதம் தொடரும்)

# யோகா

## யோகாசனத்தின் வகைகள்

யோகாசனத்தை 5 வகையாக பிரிக்கப் பட்டுள்ளன.

1. கர்மயோகம்: பலனை எதிர்பார்க்காமல் செய்யும் சேவை

2. பக்தியோகம்: இறைவனிடத்தில் தன்னை முழுமையாக அர்ப்பனித்தல்

3. ஞானயோகம்: பூரண அறிவுடன் செயலாற்றுதல்

4. இராஜயோகம்: யோகங்களின் முதன்மையானது, ஓரிடத்தில் அமர்ந்து செய்யப்படும் தியானம்

5. ஹடயோகம்: உடலை பலவகை இருக்கைகளுக்கு உட்படுத்தி மனதை பண்படுத்துதல்

அஷ்டாங்க யோகம்

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் உடல் ஆரோக்கியமாகவும் உள்ள அமைதியாகவும் வாழவும், தன்னை உணரவும், தனக்குள் இறுக்கும் பேராற்றலை உணரவும் ஒரே வழி ஸ்ரீ பதஞ்சலி மகரிஷி அருளிய அஷ்டாங்க யோகம் என்ற 8 படிகளே வாழ்வின் வெற்றிப்படி என எளிமையாக விளக்கியுள்ளார்.

1. இயமம்

முக்கியமான கட்டுப்பாடுகள் அஹிம்சை, சத்தியம், பிரம்மச்சரியம், அஸ்தேயம், பேராசையின்மை போன்ற அடிப்படை மனித பண்புகளை வளர்க்க வேண்டும்.

2. நியமம்

இதுவும் மனம் சார்ந்த ஒழுக்க கோட்பாடுகள் — அகத்தூய்மை, புறத்தூய்மை, தவம், புனித நூல்கள் படித்தல், இறைவனிடம் சரணாகதி முதலியவற்றை விளக்குகிறது.

3. ஆசனம்


ஆசனம் என்ற சொல்லுக்கு 'இருக்கை' என்பது பொருள். உடலை ஒரு நிலையில் குறிப்பிட்ட அளவு நேரம் இருக்கச் செய்யும் உடற்பயிற்சியையும் அவை சார்ந்த நிலைகளையும் குறிக்கும் சொல்லே யோகாசனம்

4. பிராணாயாமம்

பிராணயாமம் (சமசுகிருதம்) என்பது ஒரு சமசுகிருத சொல், அதற்கு "பிராணா அல்லது மூச்சைக் கட்டுப்படுத்தி வைத்தல்" என்று பொருள்

5. பிரத்தியாகாரம்

பிரத்தியாகாரம் என்பது அனைத்து புலன்களையும் கட்டுப்படுத்துவது ஆகும். மொத்தம் 11 புலன்கள் உள்ளன. அதாவது ஐந்து உணர்வுகள், ஐந்து செயல் புலன்கள் மற்றும் ஒரு மனம். பிரதி மற்றும் அகாரா, அதுவே பிரத்தியாகாரம் எனப்படுகிறது



# யோகம்!

**வந்தனா**

6. தாரணை

மனதை ஒரு பொருளில் குவிய செய்தல். அதன் மூலம் எண்ணற்ற ஆற்றலை அடையலாம். தாரணை கை கூட வைராக்கியம், சாத்வீக உணவு, தனித்திருத்தல் முதலியவை தேவை.

7. தியானம்

ஒரே சிந்தனை. தாரனையின் முடிவு தியானமாகும். மன அமைதி. இதயம் பாதுகாக்கப்படும். எந்த நோயும் வராது. தியானம் கைகூடினால் எல்லாம் கைகூடும்.

8. சமாதி

ஆதியில் சமம். எண்ணமற்ற நிலை. மனம் கரைந்த நிலை. மௌன நிலை. பேரின்ப நிலை. இதுவே நம் உண்மை இயல்பு.

அஷ்டாங்க யோக எட்டு படிகளை அனைவரும் கடை பிடிக்கலாம். ஆனந்த வாழ்வு வாழலாம்.

சில முக்கிய ஆசனங்கள்

1. உத்தித ஹஸ்த பாதாங்குஸ்தானம்

இந்த ஆசனம் செய்வதன் மூலம் கால்கள் மற்றும் கணுக்கால் பகுதிகள் பலபடுத்த செய்கிறது.

2. சசகங்காசனம்

இந்த ஆசனம் கைகள், தோள்கள் மற்றும் மேல் முதுகில் பலப்படுத்த உதவுகிறது. இதனை வழக்கமாக செய்தால் முதுகெலும்பு சிக்கல்களை தணிக்க முடியும்.

3. சர்வங்காசனம்


இந்த ஆசனம் தைராய்டு பிரச்சனையிலிருந்து தப்பிக்கலாம். மேலும் இதயத்தில் எந்தவித அழுத்தம் இல்லாமல் இரத்த ஓட்டத்தை சீராக கொடுக்க உதவும்.

4. வீரபத்ராசனம்

இந்த ஆசனம் கவனம், சமநிலை மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது. மேலும் உடலில் நல்ல சுழற்சி மற்றும் சுவாசத்தை ஊக்கவிக்க செய்து உடல் முழுவதும் உற்சாகமாக வைத்துக்கொள்ள உதவும்.

5. உத்தன்படசனா

இது உடலில் உள்ள செரிமான உறுப்புகளின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது. மேலும் மலச்சிக்கல் பிரச்சனையை நீக்குகிறது. கணையம் மற்றும் நீரிழவு நோயால் பாதிக்கப்படுவர்களுக்கு இந்த ஆசனம் மிகவும் நல்லது.






இடம் மிக சுத்தமாக காற்றோட்டமாக இருக்க வேண்டும்.

வெறும் தரையில் செய்யக் கூடாது. துணி விரித்து கொள்ளலாம்.

வெறும் வயிறோடு தான் பயிற்சி செய்ய வேண்டும்.

இயன்ற வரை மாலை இரவு வேலைகளில் பயிற்சி செய்யாமல் இருப்பது நலம்.

நேரம் கிடைக்க வில்லையெனில் உணவு முடிந்து 6 மணி நேரம் கழித்தே பயிற்சி செய்ய வேண்டும்.

சர்வதேச யோகா தினம் ஆண்டுதோறும் ஜூன் 21ஆம் தேதி, கொண்டாடப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளில் யோகா தினம் குறித்து மாபெரும் அளவிலான விழிப்புணர்வு பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டதன் விளைவாக, இதன் மூலம் கிடைக்கும் பலன்களை அநேக மக்கள் அறிந்து வைத்துள்ளனர். இருப்பினும், யோகா தினம் கொண்டாடப்படும் இவ்வேளையில், மீண்டும் அதன் சிறப்புகளை நினைவுகூர்வது அவசியமாகிறது. யோகப் பயிற்சிகளை செய்தால் உடல் நலன் மட்டுமன்றி நமது மன நலனும்

6. தடாசனா

இதனை செய்தால் தொடை, முழங்கால், கணுக்கால் பகுதிகளை பலப்படுத்துகிறது. மேலும் இடுப்பு, கால், பாதங்கள் வலிமை பெறுகிறது.

7. திரிக்கோனசனா

இந்த ஆசனம் அஜீரண பகுதியை குணப்படுத்தும் மேலும் இடுப்பு மற்றும் தொடைகளிலுள்ள கொழுப்புகளை நீக்கிவிடும்.

8.புஜங்கசனா

இந்த ஆசனம் செய்வதன் மூலம் பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் பிரச்சனையை சரிசெய்யும் ஆற்றல் வாய்ந்தது. இந்த ஆசனத்தை தினமும் செய்துவந்தால் மன அழுத்தம், சோர்வு அகற்றி புத்துணர்ச்சியாக வைத்திருக்கும்.


பயிற்சிக்கு முன் கவனிக்க வேண்டிய சில விசயங்கள்:

அதிகாலை எழுந்து மென்மையுடன் தளர்வான நடைப் பயிற்சி மேற் கொள்ள வேண்டும்.

உடல் சுத்தம் செய்யும் சில கடமைகளை முடித்து பயிற்சிகள் ஆரம்பிக்கலாம்.

5 ல் இருந்து 7 மணிக்குள் பயிற்சி முடிக்கப் பட வேண்டும். பயிற்சி செய்யும்






மேம்படுகிறது. பரபரப்பு மிகுந்த நம் மனதில் ஆழ்ந்த அமைதியை ஏற்படுத்துவதற்கு இது உதவியாக அமையும்.

உங்களுக்கு புத்துணர்ச்சி அளித்து, மனதை இலகுவாக்க யோகாசனம் பேருதவியாக இருக்கும். எப்போதெல்லாம் யோக பயிற்சிகளை செய்கிறோமோ, அப்போதெல்லாம் நம் மனதை ஒருநிலைப்படுத்தி கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

இவ்வாறு நம் மனம் ஒருங்கிணைக்கப்படுவதால், வேறு சிந்தனைகளின் குறுக்கீடு இல்லாமல் போகிறது. இதனால் மனதில் உள்ள கவலைகள் மறைந்து நிம்மதி பெருகும். அதற்கு ஏதுவான யோகா பயிற்சிகள் என்னென்ன என்பதை இப்போது பார்க்கலாம்.

பாலாசனா : இந்த ஆசனத்தை செய்தால் நம் மனதில் உள்ள பாரம் குறையும். மனம் இலகுவாகும். நம் பின்பக்க தலை மற்றும் தோள்பட்டைகளில் உள்ள வலி, பிடிப்புகளை நீக்கி, ஒரு வித அமைதியை ஏற்படுத்தும். எந்த சமயத்திலும் இந்த ஆசனத்தை நீங்கள் செய்யலாம்.

விபரீத கரனை : உங்கள் கால்கள் இரண்டையும் செங்குத்தாக மேல் நோக்கி தூக்கிச் சென்று சுவற்றின் மீது வைத்துக் கொள்ளலாம். உது உங்கள் உடல் முழுவதிலும் உள்ள ஸ்ட்ரெஸ் அளவை குறைக்கிறது மற்றும் மன நிம்மதியை தருகிறது. சாப்பிட்டு முடித்த வேளைகளில் இந்த ஆசனம் செய்வதை தவிர்த்து விட வேண்டும்.

மஜர்யாசனா — பிடிலாசனா : நம் முதுகு மற்றும் பின்பக்கத்தை ஆர்ச் போல வளைப்பது, வட்டமடிப்பது போன்ற செய்கைகளைக் கொண்டதாக இந்தப் பயிற்சி உள்ளது. உங்கள் முதுகு தண்டுவடத்தில் உள்ள வலி, சோர்வு போன்றவற்றை நீக்கி புத்துணர்ச்சி தரக் கூடியதாகும். மூச்சு விடுவது இலகுவாக இருக்கும், இதனால் நரம்பு மண்டலம் ரிலாக்ஸ் ஆகும்.

உட்டாசனா : பின்பிக்கக் கழுத்து, தோள்பட்டைகள் மற்றும் முதுகு போன்ற பகுதிகளில் உள்ள வலி நீங்குவதற்கும், அதைத் தொடர்ந்து மனதிற்கு புத்துணர்ச்சி கிடைக்கவும் இந்தப் பயிற்சி உதவியாக அமையும். இது ஆழ்மன அமைதியை ஏற்படுத்தும்.

சேது பந்தாசனா : உடலில் உள்ள களைப்பு, சோர்வு போன்றவற்றை நீக்குவதுடன், மனதில் நிம்மதியை ஏற்படுத்த இந்தப் பயிற்சி உதவியாக இருக்கும்.




நம்மை சுற்றி நடக்கும் அனைத்துமே நல்லதாகவே நடக்கிறது என்ற ஊக்கத்தை இது கொடுக்கும்.

பட்சிமோதாசனா : நம் முதுகு முதல் பாதம் வரையில் உள்ள வலியை முற்றிலுமாக நீக்கக் கூடியது இந்த ஆசனம். முழு உடலும் ஸ்ட்ரெட்ச் ஆகும் இந்த ஆசனத்தை பயிற்சி செய்வது மனதில் உள்ள கவலைகளை நீக்கி புத்துணர்ச்சி தரும். காலை மற்றும் மாலை வேளைகளில் இந்த ஆசனத்தை செய்யலாம்.




## வாழைப்பூ: பயன்கள்

வாழையடி வழை என்று நம் முன்னோர்கள் சொல்வார்கள். வாழைக்கு அழிவே கிடையாது, அதன் தண்டு, காய், பழம், பூ, இலை, நார், பட்டை என எல்லாவற்றையும் நாம் பயன்படுத்துகிறோம். இதற்கு காரணம் வழையின் மருத்துவ குணங்கள் பல. உலகில் அதிகம் நுகரப்படும் பழங்களில் ஒன்று வாழைப்பழங்கள். கிட்டத்தட்ட ஒவ்வொரு நாட்டிலும், குறிப்பாக துணை வெப்பமண்டல மற்றும் வெப்பமண்டல பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன. இது பெரும்பாலும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது, அதைத் தொடர்ந்து சீனா இரண்டாவது பெரிய வாழைப்பழத்தை உற்பத்தி செய்கிறது. வாழைப்பழம் மிகப்பெரிய பூக்கும் மூலிகைத் தாவரமாகும், மேலும் வாழைப்பழங்களின் ஒரே தொகுப்பில் ஏராளமான வாழைப்பூக்கள் விளைகின்றன.

வாழைப்பூ என்பது வாழை மரத்தில் உருவாகும் பூவை குறிக்கும். இதனை வாழை மொட்டு என்றும் அழைப்பார்கள். பூ வகையை சார்ந்ததாக இருந்தாலும் இது சமையலில் காய்கறி போல பயன்படுத்தபடுகிறது. வாழைப்பூவைக் வைத்து குழம்பு, அடை, சூப் போன்று பல்வேறு வகையான உணவுகள் தயாரிக்கபடுகின்றன.

இந்த மலர்கள் பொதுவாக வாழைப்பழங்களை உற்பத்தி செய்யும் போது ஒரு கழிவுப் பொருளாகக் கருதப்படுகின்றன, ஆனால் இது அதிக ஊட்டச்சத்து மதிப்பைக் கொண்டுள்ளது. வாழைப்பழங்களின் பூக்கள் பெரியவை, சிவப்பு, கூர்மையான பூக்கள், சில பூக்கள் மஞ்சள் அல்லது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். துல்லியமாக, பூவின் நிறம் ஆரஞ்சு முதல் ஊதா வரை இருக்கலாம் மற்றும் அதன் உள்ளே வெளிர் மஞ்சள் அல்லது வெள்ளை பூக்கள் உள்ளன. வாழைப்பூக்கள் பல உயிர்செயல்திறன் சேர்மங்களைக் கொண்டிருக்கின்றன, மேலும் சுவைக்கு நட்டு, மொறுமொறுப்பான மற்றும் மாவுச்சத்துள்ளவை. இது நீரிழிவு, வயிற்றுப்போக்கு மற்றும் புற்றுநோய் போன்ற சில சுகாதார நிலைமைகளுக்கு உதவும் ஆற்றலையும் கொண்டிருக்கலாம். வாழைப்பூவின் முக்கியத்துவம் மற்றும் ஆரோக்கிய நன்மைகள் பற்றி விரிவாகக் காண்போம்.

வாழைப்பூவில் கீழ்க்கண்ட சத்துக்கள் உள்ளதாக அவர்களது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.புரதம், ஃபைபர், கார்போஹைட்ரேட், சோடியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், கால்சியம், வெளிமம், இரும்பு,துத்தநாகம். ஆல்கலாய்டுகள்,சபோனின்கள், சூப்பர் ஆக்சைடு டிஸ்முடேஸ், கார்டியாக் கிளைகோசைடுகள், ஸ்டெராய்டுகள் மற்றும் பீனாலிக் சேர்மங்கள் போன்ற உயிர்வேதியியல் கலவைகள் வாழைப்பூவில் இருக்கலாம் என்று மற்ற ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.

வாழைப்பூவின் பண்புகள்:

இது ஒரு ஆக்ஸிஜனேற்றியாக இருக்கிறது.

இது சைட்டோடாக்ஸிக் விளைவைக் கொண்டிருக்கலாம் (சேதமடைந்த செல்களைக்






ச.பாலகிருஷ்ணன்

கொல்லும்)

அழற்சி எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கிறது.

கல்லீரலைப் பாதுகாக்கும் (ஹெபடோப்ரோடெக்டிவ்)

நுண்ணுயிர் எதிர்ப்பியாக இருக்ககிறது.

இரத்த சர்க்கரை அளவைக் குறைக்க உதவும்

புற்றுநோய்க்கு எதிராக பயனுள்ளது.

வாழைப்பூ பல்வேறு தாதுக்கள் மற்றும் உயிரியல் சேர்மங்களின் வளமான மூலமாகும். எனவே, பல்வேறு நோய்கள் மற்றும் கோளாறுகளுக்கு இது உதவியாக இருக்கும்.

புற்றுநோய்க்கான வாழைப்பூவின் சாத்தியமான பயன்பாடுகள்

வாழைப்பூவின் சாறு புற்றுநோய் உயிரணுக்களின் பெருக்கத்தைத் தடுக்கும் சாத்தியமான செயல்பாட்டைக் கொண்டிருக்கக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். புற்றுநோய் எதிர்ப்பு மருந்தின் மேலும் வளர்ச்சிக்கு இது பாதுகாப்பான மாற்றாகவும் இருக்கலாம்.

நீரிழிவு நோய்க்கு வாழைப்பூவின் சாத்தியமான பயன்பாடுகள்

வாழைப்பூவின் சாறு இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவைக் குறைக்கும் திறன் கொண்டதாகக் கண்டறியப்பட்டது. சில மாதங்களில் குளுக்கோஸ் கட்டுப்பாட்டின் அளவீடாகப் பயன்படுத்தப்படும் கிளைகேட்டட் ஹீமோகுளோபின் (குளுக்கோஸ் இணைக்கப்பட்ட ஹீமோகுளோபின்) அளவைக் குறைக்கவும் இது உதவும். எனவே, வாழைப்பூ நீரிழிவு நோய்க்கு உதவியாக இருக்கும்.

ஹீமோகுளோபினுக்கு வாழைப்பூவின் சாத்தியமான பயன்பாடுகள்

ஹீமோகுளோபின் என்பது இரும்புச்சத்து கொண்ட புரதமாகும், இது இரத்தத்தில்



உயிரணுக்களுக்கு ஆக்ஸிஜனைக் கொண்டு செல்ல உதவுகிறது. இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவை உயர்த்த உதவும் இரும்பு மற்றும் நார்ச்சத்து வாழைப்பூவில் உள்ளது என்று பல ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கொலஸ்ட்ராலுக்கு வாழைப்பூவின் சாத்தியமான பயன்பாடுகள்

லியனகே மற்றும் பலர். வாழைப்பூ, இரத்தக் கொலஸ்ட்ராலைக் குறைக்கும் (இரத்தக் கொழுப்பைக் குறைக்கும்) சாத்தியமான ஹைபோகோலெஸ்ட்ரோலேமிக் விளைவைக் கொண்டிருக்கக்கூடும் என்று கண்டறியப்பட்டது. நிறைவுறா கொழுப்பு அமிலங்கள், சபோனின்கள், ஃபிளாவனாய்டுகள், வைட்டமின் ஈ மற்றும் உணவு நார்ச்சத்து ஆகியவற்றின் காரணமாக இந்த விளைவை வெளிப்படுத்தலாம். இந்த பொருட்கள் கல்லீரலை சேதத்திலிருந்து பாதுகாக்கவும், அதைப் பாதுகாக்கவும் உதவும். வாழைப்பூ வில் வைட்டமின் ஏ, சி, பி1 , கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம், பாஸ்பரஸ், இரும்பு சத்து போன்ற சத்துக்கள் உள்ளன.

வாழைப்பூ நன்மைகள்

வெள்ளைப்படுதல் நோயை குணப்படுத்தும்.
மூல நோய் ஏற்படாமல் தடுக்க உதவும்.
சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.
குழந்தையின்மையை சரிசெய்யும்.
உடலின்நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.
செரிமான கோளாறுகளை குணமாக்கும்.
ரத்தத்தை சுத்தப்படுத்தும்.

வாழைப்பூக்கள் குடல் இயக்கத்தை மேம்படுத்த உதவுவதோடு புண்களைக் குறைக்கும். இதனால், குடல் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.இது ஆண்டிமைக்ரோபியல் செயல்பாட்டைக் கொண்டிருக்கலாம் மற்றும் ஆண்டிபயாடிக் ஆகவும் செயல்படலாம்.இது எடை மேலாண்மைக்கு உதவியாக இருக்கும்.பாரம்பரிய மருத்துவத்தில், இது மூச்சுக்குழாய் அழற்சி சிகிச்சைக்கு பயன்படுத்தப்படலாம்.நார்ச்சத்து மற்றும் இரும்புச்சத்து அதிகம் உள்ளதால், நெல்லிக்காயுடன் 'ஹுமஸ்' உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது.

வாழைப்பூவை சேர்த்து லட்டு தயாரிக்கப்படுகிறது நேந்திரன், ரசகதளி மற்றும் பாளையங்கோடன் வகை வாழையின் பூக்கள் உலர்ந்த துண்டுகள், ஆர்டிசி (சமைக்க தயார்) பொருட்கள் மற்றும் மாவு தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றன.

தேங்காய்த் தூள், இஞ்சி, உப்பு மற்றும் வெங்காயத்துடன் வாழைப் பூ சிசிக் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. நட் சாக்லேட் தயாரிப்பதில் இது இணைக்கப்பட்டுள்ளது. மூலப் பிரச்னைகளுக்கும் வாழைப்பூ சிறந்த மருந்து.

வாழைப்பூவில் உள்ள நரம்பை நீக்கிவிட்டு வாழைப்பூவை நன்றாக வேகவைத்து சாப்பிட வேண்டும். உப்பு போட்டு அவித்தோ, பொரியல் செய்தோ, பருப்பு போட்டு கூட்டு செய்தோ சாப்பிடலாம். வாழைப்பூவை வேகவைத்து சாறையும் பருகலாம். வாரத்திற்கு இருமுறை சாப்பிடலாம். வாழைப்பூ பல்வேறு நன்மைகளை நமக்கு அளிக்கின்றது, ஆரோக்கியத்திற்கும் அவை ஏற்றதாக இருப்பதால்தான் வாழைப்பூ பொரியல், வாழைப்பூ வடை, வாழைப்பூ அடை, வாழைப்பூ தோசை என்று பல விதங்களில் தயாரித்து சுவைக்கிறோம். வாழைப்பூ குருத்தை பச்சையாகவே சாப்பிடலாம்.

* வாழைப்பூ சாப்பிட்டால் இரத்தத்தில் காணப்படும் அதிக அளவு சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தும். கணையம் வலிமை பெற்று உடலுக்கு தேவையான இன்சுலினை சுரக்கும்.

பெண்கள் வாழைப்பூவை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மாதவிடாய் கோளாறுகள், வெள்ளைப்படுதல், வயிற்று வலி ஆகியவற்றை போக்கும். * வாழைப்பூவை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற கொழுப்புகளை கரைத்து இரத்தத்தை சுத்திகரிக்கும். இரத்த அழுத்தம், இரத்த சோகை போன்றவை வராமல் தடுக்கும். * உடல் சூடு குறையும்.

வாழைப்பூவை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற கொழுப்புகளை கரைத்து இரத்தத்தை சுத்திகரிக்கும். இரத்த அழுத்தம், இரத்த சோகை போன்றவை வராமல் தடுக்கும்.

* உடல் சூடு குறையும். குடல் புண் ஆறும்.

* மூலக்கடுப்பு, சீதபேதி, மலச்சிக்கல், வாய்ப்புண், செரியாமை, இரத்த மூலம் போன்ற நோய்களை கட்டுப்படுத்தும்.


* வாழைப்பூவில் உப்பு போட்டு வேக வைத்து அதன் சாறை குடித்தால் வயிற்றுவலி நீங்கும்.

* ஆண்களுக்கு விந்துவை விருத்தி செய்யும்.

* மலட்டுத்தன்மையை போக்கும் சக்தி வாழைப்பூவில் இருக்கிறது.

* வாழைப்பூவை வாழையில் இருந்து முறித்து எடுத்த இரண்டு நாட்களுக்குள் சாப்பிடவேண்டும்.

ரத்தத்தைச் சுத்தப்படுத்த: வாழைப்பூவை வாரம் இருமுறை சமைத்து உட்கொண்டு வந்தால் ரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற




கொழுப்புகளைக் கரைத்து வெளியேற்றும். இதனால் ரத்தத்தின் கெட்டித்தன்மை குறைந்து, ரத்தம் வேகமாகச் செல்லும். ரத்த நாளங்களில் ஒட்டியுள்ள கொழுப்புகளைக் கரைத்து ரத்தத்தை சுத்தப்படுத்தும். இதனால் ரத்தமானது அதிகமான ஆக்ஸிஜனை உட்கிரகித்து தேவையான இரும்பு சத்தையும் உட்கிரகிப்பதுடன். ரத்த அழுத்தம், ரத்த சோகை போன்ற நோய்கள் ஏற்படாமல் காக்கும்.

சர்க்கரை நோயாளிகளுக்கு: ரத்தத்தில் கலந்துள்ள அதிகளவு சர்க்கரைப் பொருளைக் கரைத்து வெளியேற்ற வாழைப்பூவின் துவர்ப்புத்தன்மை அதிகம் உதவுகிறது. இதனால் ரத்தத்தில் கலந்துள்ள சர்க்கரையின் அளவு குறைகிறது.

வயிற்றுப்புண் நீங்க: இன்றைய உணவுமுறை மாறுபாட்டாலும், மன உளைச்சலாலும் வயிற்றில் செரியாமை உண்டாகி அதனால் அபான வாயு சீற்றம் கொண்டு வயிற்றில் புண்களை ஏற்படுத்துகிறது. இந்த புண்களை ஆற்ற வாழைப் பூவை வாரம் இரண்டு முறை உணவில் சேர்த்து வந்தால் வயிற்றுப் புண்கள் ஆறும். செரிமானம் அதிகரிக்கும்.

மூலநோயாளிகளுக்கு: மூலநோயின் பாதிப்பினால் மலத்துடன் ரத்தம் வெளியேறுதல், உள்மூலம், வெளிமூலப் புண்கள் இவற்றுக்கு சிறந்த மருந்தாக வாழைப் பூவைப் பயன்படுத்தலாம். வாழைப்பூ மூலக்கடுப்பு, ரத்த மூலம் போன்றவற்றைக் குணப்படுத்தும் தன்மை கொண்டது.

மலச்சிக்கலைப் போக்கும்: சீதபேதியையும் கட்டுப்படுத்தும். வாய்ப் புண்ணைப் போக்கி வாய் நாற்றத்தையும் நீக்கும்.

பெண்களுக்கு உண்டாகும் கருப்பைக் கோளாறுகள்: மாதவிலக்கு காலங்களில் அதிக ரத்தப்போக்கு, அல்லது ரத்த போக்கின்மை, வெள்ளைப்படுதல் போன்ற நோய்களுக்கு வாழைப்பூவை உணவில் சேர்த்துக்கொண்டு வந்தால் நோய்கள் தீரும்.

• தயிரில் ஒரு துண்டு தேங்காயை போட்டு வைத்தால் புளிக்காது.

• வாழைப்பூவை ரசம் செய்து அருந்தி வந்தால் பெண்களுக்கு வெள்ளைப்படுதல் கட்டுப்படும்.

• குடிநீரில் சிறிது துளவியை போட்டு வைத்தால் குடிநீர் மணமாகவும். ஆரோக்கியமாகவும் இருக்கும்.

• அல்சர் குணமாக, காலையில் வெள்ளை பூசணி ஜுஸ், சுரைக்காய் ஜுஸ் குடிக்கலாம். முருங்கை கீரையை வேக வைத்து அரைத்து, தயிரில் கலந்து சாப்பிடலாம்.

• காலையில் வெறும் வயிற்றில் நெய் சாப்பிட்டால் செல்களின் செயல்பாட்டை அதிகரிக்கும். முடி உதிர்வதை தடுக்கும் பக்கவாத நோயை விரட்டும்.

• வாழைப்பூ, வாழைத்தண்டு ஆகியவற்றை நறுக்கினால் உடனே அவற்றை மோர் கலந்த தண்ணீரில் போட்டு வைக்க வேண்டும். இதனால் வாழைப்பூ, வாழைத்தண்டின் நிறம் மாறாது. கறை பிடிக்காது. துவர்ப்பு நீங்கும்.

•வாழையின் அனைத்துப் பாகங்களும் நமக்குப் பயன்தரக்கூடியவை. குறிப்பாக, வாழைப்பூ அதிகப் பயன்தரக்கூடியது. அற்புத மருத்துவக் குணங்களைக் கொண்ட வாழைப்பூ.

• வாழைப்பூவில், கால்சியம், பொட்டாசியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், இரும்பு சத்து, தாமிர சத்து முதலிய சத்துக்கள் நிறைந்துள்ளன. மேலும் வைட்டமின் ஏ, வைட்டமின் பி1 மற்றும் வைட்டமின் சி ஆகிய உயிர்ச்சத்துக்களும் உள்ளன.



# புன்னகை

## புன்னகையைப் பரப்புவோம்

மகிழ்ச்சியான நேரத்தில் நாம் வெளிப்படுத்துவதே சிரிப்பு. சிரிப்பு மட்டுமே, வயது, பாலினம், நிறம், தேசம், இனம் எல்லாவற்றையும் கடந்து செல்லக் கூடியது. சிரிப்பினால் எளிதாகப் பிறரது இதயத்தைக் கவர முடியும். இந்தச் சிரிப்பு, தமிழில் இளநகை, குமிண்சிரிப்பு, குறுநகை, குறுஞ்சிரிப்பு, சிறுநகை, செல்லச் சிரிப்பு, புன்முறுவல், முகிழ்நகை, மூரல் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது.

சிறுகுழந்தை ஒரு நாளைக்கு 200 முதல் 300 முறை வரை சிரிக்கிறது. அது வளர வளர அந்த எண்ணிக்கை குறைகிறது. குழந்தைகள் அதிகமாக சிரிப்பதால்தான் அழகாக இருக்கிறார்கள். புகைப்படங்களையே சிரிப்பு அழகு படுத்துகிறது எனில், நாம் வாழ்நாள் முழுவதும் சிரித்துக்கொண்டே இருந்தால்,அந்த வாழ்க்கை எவ்வளவு சிறப்பாக இருக்கும்? வெடிச்சிரிப்பு, நமுட்டுச் சிரிப்பு, விஷமச் சிரிப்பு, விரக்திச் சிரிப்பு, வேதனைச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு எனச் சிரிப்பில் பல வகைகள் உள்ளன.

சொந்த வாழ்வில் பலவிதமான காயங்கள் இருந்தாலும், அதையெல்லாம் மறைத்து ஊருக்கு ஆனந்தம் கொடுத்தவர் சார்லி சாப்ளின். சிரிப்பின் அருமையை அவரை விட வேறு யாராலும் கற்பிக்க முடியாது.லியோனார்டோ டாவின்சி வரைந்த மோனாலிசாவின் மர்மப் புன்னகை பொதிந்த படம் உலகப்புகழ் பெற்றது. இந்தியா நடத்திய அணுகுண்டு சோதனைக்கு 'புத்தரின் புன்னகை' என்று சங்கேதப் பெயர் வைத்திருந்தார்கள். பழங்காலச் சிற்பங்களின் இதழ்களில் நெளியும் புன்னகை இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் உயிர்ப்போடுதான் இருக்கின்றன.

அமெரிக்க வடிவமைப்பாளரான பெர்க் இல்ஹன் என்பவர், முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை உருவாக்கினார். அந்தக் கண்ணாடியில் சாதாரணமாக முகத்தைக் காண முடியாது. நாம் சிரித்தால்தான், அதில் நம் முகம் தெரியும். நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர் இந்தக் கண்ணாடியை உருவாக்கினார். சிரிப்பை எல்லாருக்கும் பரப்ப நவீன உத்தியாக, அவர் இந்தக் கண்ணாடியை வடிவமைத்தார்.

நம் வாழ்க்கை எந்நேரமும் மற்றவர்களுடன் தொடர்புகொள்ளும்படியாகவே அமைந்திருக்கிறது. எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும் முகமே அழகான முகம். பேரானந்தத்தை பிரதிபலிக்கும் முகமே சிரிக்கும் முகம். சிரிப்பு நமக்கு அழகிய தோற்றத்தை அளித்து, அழகிய கலைவடிவாக நம்மை மாற்றுகிறது.வார்த்தைகளால் சாதிக்க முடியாததைப் புன்னகை சாதித்து விடும். சிரிப்பதன் மூலம் நமக்கு நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்கிறது. ரத்த ஓட்டம் சீர்பட்டு இதயத்திற்கு இதம் கிடைக்கிறது. நினைவாற்றல் அதிகரிக்கிறது. நாம் இருக்கும் இடத்தைச் சுற்றி மகிழ்ச்சியைப் பரப்புவதால், மனதில் நேர்மறை எண்ணங்கள் தோன்றுகின்றன.

மருத்துவரின் நம்பிக்கையூட்டும் புன்னகை






முனைவர்
என். பத்ரி

நோயை குணப்படுத்துகிறது. ஊக்கமளிக்கும் புன்னகை வெற்றியையும், நேசமான புன்னகை காதலையும் நமக்கு அள்ளித்தருகிறது. முன்பின் அறியாதவரைக்கூட சிறு புன்னகை நட்பாக்கிவிடுகிறது. சிரிப்பு நம் கவலைகளை எல்லாம் மறக்க வைக்கிறது. அது முன்பின் அறியாதவரைக்கூட நட்பில் இணைக்கும் ஓர் அன்புச் சங்கிலி. உடல்நலனோடு மனநலனையும் சீர்படுத்தும் வல்லமை கொண்டது சிரிப்பு.

முகத்தில் இளமையைத் தக்க வைக்க சிரிப்பு பெரிதும் உதவுகிறது. சிரிப்பு பல மருத்துவ குணங்களையும் கொண்டிருக்கிறது. வாய்விட்டுச் சிரிக்கும்போது உடலில் 57 தசைகள் வேலை செய்கின்றன. சாதாரண புன்முறுவலுக்கு நம் முகத்தில் 13 தசைகள் இயங்குகின்றன. புன்னகைத்த முகம் தரும் தன்னம்பிக்கை மிகவும் அதிகம். துன்பம் வரும் வேளையிலே சிரிக்க சொன்னவர் திருவள்ளுவர். சிரிப்பு துன்பத்தை கடந்து செல்ல நமக்கு உதவுகிறது. இது ஒரு சிறந்த உளவியல் சிகிச்சையாகும்.


எபிநெஃப்ரின், நார் எபிநெஃப்ரின், கார்டிசால் போன்ற மன அழுத்தத்தை உண்டாக்கக்கூடிய ஹார்மோன்களின் சிறப்பை சிரிப்பு குறைக்கிறது.டோபமைன், செரட்டோனின், ஆக்ஸிடோசின், எண்டார்பின் ஆகிய மகிழ்ச்சி சுரப்பிகளை சிரிப்பு தூண்டிவிடுகிறது.

ரத்தக் குழாயின் உட்சுவரான எண்டோதீலியம் சுருங்குவதாலும், அதில் கொழுப்பு படிவதாலும்தான் உயர் ரத்த அழுத்தமும் மாரடைப்பும் ஏற்படுகிறது. வாய்விட்டுச் சிரித்தால் எண்டோதீலியம் விரிவடையும் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.அதிகமாக நம்மைச் சிரிக்க வைப்பவர்கள் சோகத்தைத் தன்னுள் புதைத்துக்கொண்டு அதற்கு புன்னகை முலாம் பூசுபவர்கள் என்று சொல்லுவார்கள். சோகத்தின் உச்சகட்டத்திலும் சிரிப்பு வரும்.




புன்னகை நமக்கு எப்படு மிகவும் முக்கியமோ அதே அளவு முக்கியம், சில இடங்களில் புன்னகை செய்யாமல் இருப்பதும். ஒருவர் எத்தகைய விஷயத்திற்கு சிரிக்கிறார் என்பதை கவனித்தோமானால், அவருடைய எண்ண ஓட்டமும், மனநிலையும் நமக்கு வெகு எளிதில் புரிந்துவிடும். ஆனால், இடம் பொருள் ஏவல் தெரியாமல் சிரிக்கக் கூடாது.

சிரிக்கத் தெரிந்த பெண்கள்தான் குடும்பத்தின் அழகு என்பதை நாம் உணரவேண்டும். அவர்கள் சிரிக்காமல் போனால், அதிக மன உளைச்சலுக்கும் அழுத்தத்திற்கும் ஆளாகி அதனால் குடும்பங்கள் சிதையலாம். ஆண்கள் தம் வீடுகளில் பெண்கள் சிரிப்பதைக் கட்டுப்படுத்தக் கூடாது.பிறர் நம்மைப் பார்த்துச் சிரித்தால் மட்டுமே நாம் சிரிப்போம் என்றில்லாமல் நாமாகப்




பிறரைப் பார்த்துப் புன்னகை செய்வோம். புன்னகை என்னும் அற்புதமான பரிசைப் பிறருக்கு அளவற்று அள்ளிக் கொடுப்போம். சிரிப்பு ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தொற்றக்கூடியது. முடிந்தவரை அதை மற்றவர்களுக்குப் பரப்புவோம். சிரித்து வாழ்வோம்; சிறந்து வாழ்வோம்!

மகிழ்ச்சி என்பது ஒரு தொலைதூரக் கனவாக உங்களுக்குத் தோன்றுகிறதா? மன அழுத்தத்தால் புதிய உயரங்களுக்குச் செல்வதால், மக்கள் எப்படிச் சிரிக்க வேண்டும் என்பதை மறந்துவிட்டு, மகிழ்ச்சியாக இருக்க வழி தேடுகிறார்கள். இது கண்டுபிடிக்க எளிதானது அல்ல என்றாலும், அதை அடைய முடியாது. நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் முயற்சி செய்ய வேண்டும். மகிழ்ச்சி மற்றும் அதன் நுணுக்கங்களைப் பற்றி நீங்கள் அதிக நேரம் செலவழித்துக்கொண்டிருந்தால், நீங்கள் சரியான பக்கத்தில் வந்துவிட்டீர்கள்.

எனவே, நீங்கள் எதற்காக காத்திருக்கிறீர்கள்? உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கண்டறிவதற்கான முதல் படியை எடுப்போம். எமோஷனல் இன்டலிஜென்ஸ் பயிற்சியாளர் சிவம், ஹெல்த் ஷாட்ஸ்டன் பகிர்ந்துள்ள இந்தப் புள்ளிகளைக் கடைப்பிடித்து, யாரையாவது சிரிக்க வைத்து மகிழ்ச்சியைப் பரப்புங்கள்.




மகிழ்ச்சி ஹேக்ஸ்

மகிழ்ச்சியை பரப்புவது கடினம் அல்ல! உங்கள் அன்புக்குரியவர்களை மேலும் சிரிக்க வைக்க இந்த 5 உதவிக்குறிப்புகளை முயற்சிக்கவும் புன்னகை மகிழ்ச்சியைத் தருவது மட்டுமல்லாமல், அதன் நன்மைகள் உங்கள் உணர்ச்சி ஆரோக்கியத்திற்கு அப்பாற்பட்டவை. மேலும் அறிய படிக்கவும்!


மகிழ்ச்சி என்பது ஒரு தொலைதூரக் கனவாக உங்களுக்குத் தோன்றுகிறதா? மன அழுத்தத்தால் புதிய உயரங்களுக்குச் செல்வதால், மக்கள் எப்படிச் சிரிக்க வேண்டும் என்பதை மறந்துவிட்டு, மகிழ்ச்சியாக இருக்க வழி தேடுகிறார்கள். இது கண்டுபிடிக்க எளிதானது அல்ல என்றாலும், அதை அடைய முடியாது. நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் முயற்சி செய்ய வேண்டும். மகிழ்ச்சி மற்றும் அதன் நுணுக்கங்களைப் பற்றி நீங்கள் அதிக நேரம் செலவழித்துக்கொண்டிருந்தால், நீங்கள் சரியான பக்கத்தில் வந்துவிட்டீர்கள். எனவே, நீங்கள் எதற்காக காத்திருக்கிறீர்கள்? உங்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கண்டறிவதற்கான முதல் படியை எடுப்போம். எமோஷனல் இன்டலிஜென்ஸ் பயிற்சியாளர் சிவம், ஹெல்த் ஷாட்ஸ்டன் பகிர்ந்துள்ள இந்தப் புள்ளிகளைக் கடைப்பிடித்து, யாரையாவது சிரிக்க வைத்து மகிழ்ச்சியைப் பரப்புங்கள்.

உங்கள் அன்புக்குரியவர்களை சிரிக்க வைப்பதற்கான வழிகளை நீங்கள் தேடிக்கொண்டிருந்தால், எப்படி தொடங்குவது என்பதை அறிய இந்த கட்டுரை உதவும்.

நீங்கள் முயற்சி செய்யக்கூடிய சில தயாரிப்புகள் இங்கே:

1. அவர்கள் சொல்வதைக் கேளுங்கள்

சில நேரங்களில், அனைத்து மக்களுக்கும் தேவை மற்றும் நீங்கள் கேட்க வேண்டும். யாரோ ஒருவர் சொல்வதைக் கேட்பது எளிதான காரியமாகத் தோன்றலாம், ஆனால் உண்மையில் அது மக்களுக்குப் புரியாத கலை. டிஜிட்டலுக்கு மாறுவது மக்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது மேலும்




அவர்கள் வார்த்தைகள் மூலம் இருப்பதை விட சமூக ஊடக கதைகள் மற்றும் மீம்கள் மூலம் அதிகம் இணைக்கப்பட்டுள்ளனர் .

கவனச்சிதறல் கேட்பது கவனத்தை சிதறடித்து வாகனம் ஓட்டுவது போல் மோசமாக இருக்காது என்றாலும், அது மிகச் சிறந்த சமூகத் திறன் அல்ல. ஒருவரின் முகத்தில் புன்னகையை வரவழைக்க நீங்கள் உணர்வுபூர்வமாக விரும்பினால், அவர்கள் ஏன் சிரிக்கவில்லை என்பதை நீங்கள் கேட்கத் தொடங்க வேண்டும். நீங்கள் அதைச் செய்தவுடன், மகிழ்ச்சிக்கான வழியைத் தடுக்கும் எந்தவொரு விஷயத்திற்கும் தீர்வு காண அவர்களுக்கு உதவலாம்.

2. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவர்களைப் பாராட்டுதல்

நாங்கள் அதைப் பெறுகிறோம்! ஒருவரைப் பாராட்டுவது ஒரு தந்திரமான விஷயமாக இருக்கலாம். ஒரு பாராட்டு கொடுப்பதன் முழுப் பொருளும் மற்றவர்களை மகிழ்விப்பதாக இருந்தாலும், அனைவருக்கும் அது கிடைக்காது. ஒரு நல்ல பாராட்டு என்பது உண்மையானதாகவும், அர்த்தமுள்ளதாகவும், நேர்மையாகவும் தோன்றும். எனவே, அடுத்த முறை நீங்கள் ஒருவரைப் பாராட்ட முடிவு செய்யும் போது, அவரைப் பாராட்டும்போது அவர்கள் எப்படி உணருவார்கள் என்று சிந்தியுங்கள். எனவே, குறைந்த முக்கிய அவமானங்கள் இல்லை ஆனால் அர்த்தமுள்ள பாராட்டுக்கள்!

3. அந்நியர்களைப் பார்த்து புன்னகைத்தல்

அந்நியரைப் பார்த்து எத்தனை முறை சிரித்தீர்கள்? நாங்கள் பந்தயம் கட்டுகிறோம், நிறைய இல்லை அல்லது இல்லை! முதலில், சிரிப்பதும் சிரிப்பதும் ஒரு தொற்று நோய் என்பதை நாம் அனைவரும் அறிவோம். கூடுதலாக, புன்னகை எண்டோர்பின்கள் எனப்படும் ஒரு நல்ல ஹார்மோனின் வெளியீட்டைத் தூண்டுகிறது , இது மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது, வலியைக் குறைக்கிறது மற்றும் மகிழ்ச்சியின் உணர்வுகளை உருவாக்குகிறது. ஒரு புன்னகை மிகவும் சக்தி வாய்ந்தது, ஒருவரின் மனநிலையை ஒரு நொடியில் உயர்த்தும் திறன் கொண்டது.

4. நிதானமான உடல் மொழி கொண்டிருத்தல்

உங்கள் செய்தியை வார்த்தைகளால் மட்டுமல்ல, உங்கள் உடல் மொழி மூலமாகவும் நீங்கள் தொடர்பு கொள்ள முடியும். இது சொல்லப்படாத தகவல்தொடர்பு பகுதி, இது வார்த்தைகளைப் போலவே முக்கியமானது, சில நேரங்களில் இன்னும் அதிகமாகும். நேர்மறை உடல் மொழி மகிழ்ச்சி போன்ற நேர்மறை உணர்வுகளை வெளிப்படுத்த உதவுகிறது. எனவே, அடுத்த முறை நீங்கள் ஒருவரின் முகத்தில் புன்னகையை வரவழைக்க விரும்பினால், உங்கள் உடல் மொழியில் கவனம் செலுத்த முயற்சிக்கவும்.

5. ஒரு சிறிய கருணை செயல்

நீங்கள் ஒருவரைப் பாராட்டினாலும் அல்லது அவர்களின் பலத்தைப் பயன்படுத்தி அவர்களைப் பாராட்டினாலும், மக்களிடம் கருணை காட்டுவது எப்போதும் நல்லது. கருணை என்பது பிறருக்கு எதையும் எதிர்பார்க்காமல் கொடுக்கக்கூடிய ஒரு அற்புதமான பரிசு. உண்மையில், மற்றவர்களிடம் கருணை காட்டுவது செயலைச் செய்யும் நபர் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆராய்ச்சி காட்டுகிறது.

புன்னகை ஒரு உலகளாவிய மொழி! எந்தவொரு கலாச்சாரத்திலும், ஒரு புன்னகை உங்களுக்கு தொடர்பு தடைகளில் இருந்து தப்பிக்க உதவும் . எல்லோரும் ஒரு புன்னகைக்கு உற்சாகமாக பதிலளிக்கிறார்கள், எனவே சில மகிழ்ச்சியை ஏன் பரப்பக்கூடாது? எங்கள் நிபுணரின் கூற்றுப்படி, அதிகமாக சிரிப்பதன் சில நன்மைகள் இங்கே உள்ளன:

இது மன அழுத்தத்தை நீக்குகிறது
இனிமையான அதிர்வுகளை சிதறடிக்கும்
இது உணர்ச்சியற்ற வலியில் செயல்படுகிறது
இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது
இது தொற்றக்கூடியது

# தமிழ் 2023

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY




## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY




## AUGUST

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## SEPTEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

## OCTOBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## NOVEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## DECEMBER

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |




அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

Email: editor@ithamil.com



VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA • SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers
VARSHA
VARSHA